டிசம்பர் 23 — 29
28 பக்கங்கள்
ரூபா 14.00
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

J. m. C(N)

# சுடர் ஒளி

THE SUDAR OLI
සුඩර් ඔළි
வார மலர்



# யுத்தநிறுத்தத்தோடு சமாதான ஒளிக்கு அறிகுறியா?

# தலைதப்பியது 'தம்பி'ரான் புண்ணியம்

# ஆபத்தால் தப்பிய கடற்படை பெருமூச்சு

## யாழ்ப்பாணம் மீண்டும் பறிபோயிருக்கும் என்று திடுக்கிடும் தகவல்

கடற்படையினருக்கு நேரவிருந்த பாரிய ஆபத்து ஒன்று கழிந்து விட்டது என்று பாதுகாப்பு அமைச்சு பெருமூச்சு விட்டிருக்கிறது.

இந்த ஆபத்தின் மூலம் கடற்படையினர் மட்டுமல்ல வடக்கின் பாலுள்ள படையினரும் நினைத்துப் பார்க்க முடியாத பின்னடைவைச் சந்தித்திருப்பர்.

கடந்த மூன்று மாதங்களாக இலங்கைத் துருப்புகளுக்கு கப்பல்கள் மூலம் எந்தவித ஆயுத தளவாட விநியோகமும் மேற் கொள்ளப்படவில்லை.

இதனால் அதிகம் நொந்து கொண்டவர்கள் கடற்படையினரே. ஆனால் அதிர்ஷ்டவசமாக காலத்தைக் கடந்து விட்டனர்.

நடந்தது இது தான் —

வடக்கிலிருந்து கிழக்குவரை கடற்பரப்பில் எமது மேலாதிக்கத்தை நிலைநாட்டி புலிகளின் நடமாட்டங்களையும் ஆயுதக் கொள்வனவு நடவடிக்கைகளையும் முறியடிக்க கடற்படையினர் 'வருண கிரண' கடல் நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். இது இன்று நேற்றல்ல. பல மாதங்களாகவே நடக்கிறது.

இந்தக் கடற்கண்காணிப்பு நடவடிக்கைக்கு டோறாத் தாக்குதல் படகுகள் பிரதான மானவை. தாக்குதலை நடத்தவோ, பறந்தடித்துக் கொண்டு பின் வாங்கி வரவோ நீரைக் கிழித்துக் கொண்டு செல்லக் கூடிய இந்த அதிவேக டோறாப்படகுகளையே கடற்படையினர் பெரிதும் நம்பியிருக்கிறார்கள்.

டோறாப் படகுகளின் முன்பக்கத்தில் நிலைப்படுத்தப் பட்டிருப்பவை 23 மில்லி மீற்றர் சடசடக்கும் துப்பாக்கிகள். எதிரியைக் கண்டவுடன் இவையே முதலில் குமுறித் துடித்து வேட்டுக்களைத் தீர்ப்பவை.

இவற்றுக்கு அடுத்ததாக தாக்குதல் திறன் குறைந்த 14 மில்லி மீற்றர், துப்பாக்கிகள் பொருத்தப்பட்டிருக் கும். ஆனால் இந்த வகைத் துப்பாக்கிகளை நம்பி கடற்புலிகளின் தாக்குதலை எதிர்கொண்டு நிற்க முடியாது என்று கடற்படையினர் வெளிப்படையாகவே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

### குண்டுகள் இல்லாத டோறா

பிரச்சினை என்னவென்றால் 23 மில்லி மீற்றர் டோறாத் துப்பாக்கிகளுக்கான குண்டுகள் கடந்த ஓகஸ்ட் மாதத்துடன் தீர்ந்து விட்டன.

கடற்படையினரும் நாடு முழுவதும் உள்ள கரையோரப் படை முகாம்களிலுள்ள பழைய பெட்டிகளைத் தட்டிப் பார்த்துக் களைத்து விட்டனர். குண்டுகள் மருந்துக்கும் இல்லை. கடற்படையினர் தரப்பில் ஒரே பதற்றம். இந்த வேளை பார்த்து புலிகள் ஏதாவது அதிரடி நடவடிக்கை ஒன்றை வடக்கில் ஆரம்பித்தால் கதை கந்தல்தான் என்று கலங்கியது.

ஆயுத விநியோகமோ, படை விநியோகமோ இவற்றை எடுத்துச் செல்ல தற்போது வடக்குக்கான ஒரே வழி கடல் வழிதான். வான் வழி பெரும்பாலும் குறைவு. கொட்டமடித்துக் கொண்ட ஆனையிறவுத் தரை வழியும் புலிகள் வசமாகி ஒரு வருடத்துக்கு மேலாகி விட்டது.

இந்த நிலையில் வடக்கில் ஒரு சமர் வெடிக்க —

ஆட்களையும் ஆயுதங்களையும் கொண்டு கடலால் போக —

கடற்புலிகள் அதனை வழிமறித்து அடிக்க — திருப்பித் தாக்கவும் ஆயுதம் இல்லாமல் மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாகி விடும் என்று கடற்படைத் தலைமை நெஞ்சைப் பிடித்துக் கொண்டிருந்தது.

ஆனால் பயப்பட்ட அளவுக்கு எதுவும் நடந்துவிடவில்லை என்று தற்போது ஆறுதல் பட்டிருக்கிறது. நாட்டின் தேசிய நலனில் அக்கறை கொண்டு விஷயத்தை வெளியே விடவில்லை என்று கடற்படை பெருமிதம் கொண்டிருக்கின்றது.

### புலிகளுக்கு ஆயுதம்

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி புலிகள் பெருந்தொகையான ஆயுத தளவாடங்களை முல்லைத்தீவின் ஊடாக உள்வாங்கியிருக்கிறார்கள் என்று கடற்படை வட்டாரங்கள் ஒப்புக் கொண்டிருக்கின்றன.

கரையிலிருந்து சுமார் 100 கடல் மைல்களுக்கு அப்பால் நங்கூரமிட்டிருக்கும் தமது ஆயுதக் கப்பல்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான தொன் எடையுள்ள ஆயுதங்களைப் புலிகள் கொள்முதல் செய்திருக்கின்றனர். ஒரு நாளுக்கு சுமார் 25 தொன் எடை வீதம் ஆயுதங்கள் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கொண்டு செல்லப்பட்டன.



டோறா

காலநிலை சீதோஷ்ணநிலை, இடை விநியோகப் படகுகள் சேதம் போன்ற காரணிகளால் இவை தொடர்ந்து நடைபெறவில்லை. ஆனால் தேவைக்கு அதிகமான ஆயுதங்களைப் புலிகள் உள்வாங்கி அடுக்கி வைத்திருக்கிறார்கள் என்பது மட்டும் உண்மை.

இந்த தகவல்கள் எல்லாம் தாம் கைது செய்த கடற்புலிகள் சிலரின் மூலம் தெரிய வந்திருப்பதாக கடற்படை வட்டாரங்கள் கூறுகின்றன.

கேவலம் ஆயுதம் இல்லாததால் இவ்வளவு கேடா? என்று சலித்துக் கொள்பவர்கள் மேற்கொண்டு வாசியுங்கள்.

### பொறுப்பு யார்?

இந்த ஆயுதப் பற்றாக்குறை விடயீம் கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னரும் ஒரு முறை கடற்படையினருக்கு ஏற்பட்டது. கனரகத் தாக்குதல் படகுக்குப் பாதுகாப்புக்காகப் பொருத்தப்படும் 37 மில்லி மீற்றர் துப்பாக்கிக்கான குண்டுகள் அப்போது தீர்ந்து போயின.

இதற்கெல்லாம் காரணம் கடற்படையின் உயர் பதவிவகித்தவர்களின் நிர்வாகச் சீரின்மைதான் என்று காட்டமாகக் கூறியிருக்கிறார்கள் கடற்படையினர்.

23 மில்லி மீற்றர் துப்பாக்கி மற்றும் அதற்குரிய வெடிபொருள்களை இலங்கைக் கடற்படை பல்கேரியாவிலிருந்து கொள்முதல் செய்யத் திட்டமிட்டது. 1999 ஆம் ஆண்டு இந்த கொள்முதல் தொடர்பாக விசேட குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழு பல்கேரியாவுக்குச் சென்றது. ஆயுதங்களைப் பார்வையிட்டது. அவற்றில் தரம் நோக்கி வாங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது. ஆயுதத்தை ஏற்றும் முன்னர் அதன் விலையின் 80 வீதத்தைச் செலுத்துவது என்றும் பேசப்பட்டது.

ஆனால் அதற்கு அந்த பல்கேரிய ஆயுதக் கம்பனி ஒப்புக் கொள்ளவில்லை. முழுப் பணத்தையும் முதலில் வையுங்கள் என்றது.

நம் ஆட்களுக்குத் தானே ரோசம் அதிகம். முகத்தைத் திருப்பிக் கொண்டு வந்து விட்டார்கள். வந்தவர்கள் வந்தவர்கள் தான். அதைப் பற்றிய கதையே இல்லை. மேற் கொண்டு வேறு வழியாலும் முயற்சிக்கவில்லை. இரண்டு வருடமாக அதை அசட்டை பண்ணிவிட்டனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் தான் பிரச்சினை கழுத்தை இறுக்கியது.

தற்போது சிறிது மீண்டிருக்கிறது படைத்தரப்பு, முழுப்பணமும் செலுத்தி பல்கேரியாவிலிருந்து குறிப்பிட்ட ஆயுதம் கொள்வனவு செய்யப்பட்டு விட்டது. இந்த ஆயுதங்கள் சகல கடற்படைத் தளங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன என்று கடற்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### கடற்படையில் மாற்றங்கள்

புதிய அரசு புலிகளுடன் நடத்தப் போவதாகக் கூறப்படும் பேச்சுக்களில் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை. சமாதானப் பேச்சுக்கள் என்று கடந்த காலங்களில் என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த நிலைப்பாட்டில் கடற்படையின் முக்கிய நிர்வாகப் பிரிவுகளில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கடற்படை யுத்த நிலைக்கு ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கின்றது என்று கடற்படையின் உயர் வட்டாரங்கள் கூறின.

அதன் பிரகாரம் கடற்படையின் நடவடிக்கைகளுக்கான கட்டளைத் தளபதியாக றியர் அட்மிரல் வசந்த ரணாகொட தொடர்ந்தும் பதவிவகிப்பார். 'வருண கிரண' நடவடிக்கைக்கு பிரதான கட்டளைத் தளபதி இவரே.

கிழக்குப் பிராந்தியக் கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் எல்.டி. தர்மபிரிய மேற்குக் கடற்பிராந்தி கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். அங்கு கடமையாற்றிய கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் சி.என்.துட்டுவெத்த பாதுகாப்புத் தொடர்பான கற்கைநெறி ஒன்றைக் கற்பதற்கு புதுடில்லி செல்கிறார்.

இதே வேளை அங்குள்ள தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் கற்கை நெறியை முடித்துக் கொண்டு றியர் அட்மிரல்களான எச். எஸ்.ரட்ணகீர்த்தியும், சரத் வீரசேகரவும் தாயகம் திரும்புகிறார்கள். அவர்களில் எச். எஸ். ரட்ணகீர்த்தி கிழக்குக் கடற்படைத் தளபதிப் பொறுப்பை ஏற்றுக் கொள்வார். வடக்குக் கடற்பிராந் தியத் தளபதியாக சரத் வீரசேகர பொறுப்பேற்பார்.

வடக்குக் கடற்படைத் தளபதியாகப் பதவி வகித்த கொமடோர் உபாலி ரணவீர தென் பிராந்தியக் கடற்படைத் தளபதியாக நியமிக்கப்படுவார். தென் பிராந்திய கடற்படைத் தளபதி கொமடோர் வசந்த தென்னகோன் வடமத்திய பகுதிக்கு மாற்றப்படுவார்.

அங்கு இதுவரை பணியாற்றிய கொமடோர் எம்.ஆர்.யூ. சிறிவர்த்தன கொழும்பிலுள்ள கடற்படை நிர்வாகத் தலைமையத்தின் பணிப்பாளராக நியமிக்கப்படுவார்.

— எறியன்

# அரசியல்வாதிகளை ஆச்சரியத்தில் ஆழ்த்திய சரத்பவார்

தனது பிறந்தநாளை அசத்தலாகக் கொண்டாடி முடித்திருக்கிறார் இந்திய தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார்.

அறுபத்தொரு வயதைக் குறிக்கும் வகையில் 61 அடி நீளமுள்ள கேக்கை வெட்டிக் கொண்டாடினால் அது அசத்தல்தானே!

சுமார் மூவாயிரம் தொண்டர்களும் நண்பர்களும் புடைசூழ 610 கிலோ எடையுள்ள கேக்கை வெட்டிப் பிறந்தநாளைக் கொண்டாடியதோடு பவார் நின்றுவிடவில்லை. அன்று மாலை மும்பை மாநகரமே குலுங்கும் அளவில் வாஜ்பாய் தொடங்கி வி.பி.சிங், சந்திரபாபு நாயுடு என எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து பிரம்மாண்டமான வாழ்த்துக் கூட்டமும் ஏற்பாடு செய்தார்.

பவார் அழைத்தும் இந்த விழாவில் பால் தாக்கரே மட்டும் கலந்துகொள்ளவில்லை. அதுமட்டுமல்ல தனது 'சம்னா' நாளிதழில் பவாரை ஒரு பிடி பிடிக்கவும் பால் தாக்கரே தவறவில்லை.

''தனது அறுபத்தோராவது பிறந்ததின விழா கொண்டாட்டங்களுக்காக எல்லாவற்றிலுமே அறுபத்தொன்று வரும்படி தேசியவாத காங்கிரஸ் செய்கிறது. இதற்கு அறுபத்தொரு கோடி ரூபா செலவு செய்திருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்துள்ளது..

''செல்வந்தர்களையும் அரச அதிகாரிகளையும் கவர்ந்து இழுப்பதினால் மட்டும் சரத்பவார் எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெறமுடியாது. ஏழை, எளிய மக்களை மறந்துபோன பவாருக்கு மக்கள் பதிலடி கொடுப்பார்கள். அதனால்தான் நானோ, சிவசேனா தொண்டர்களோ அந்த விழாவிற்கு போகாமல் விழாவைப் புறக்கணித்தோம்'' என்று வரிந்து கட்டி இருக்கிறார் பால் தாக்கரே.

இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாய் விழா மேடையில் பேசி சரத்பவார், ''எனக்கு விளம்பரம் தேவையில்லை. அவ்வப்போது அறிக்கைகள் மூலம் பரபரப்பை ஏற்படுத்துகிறவன் நானல்லன். மாநிலக் கட்சிகளின் ஆதிக்கம் அதிகரித்து வருவதால் இனி கூட்டணி அரசுதான் மத்தியில் ஆளும். அதனால் தேசியத் தலைவர்களுடன் நல்லுறவை வளர்க்கவே நாங்கள் விரும்புகிறோம். அதனால்தான் இவர்களை (தேசியத் தலைவர்) அழைத்திருக்கிறேன். மற்றப்படி இதில் அரசியல் நோக்கமும் கிடையாது'' என்றார்.

வெளிப்பார்வைக்குப் பிறந்தநாள் விழாவாகத் தெரிந்தாலும் இதில் அரசியல் இல்லாமல் இல்லை.

மகாராஷ்டிராவில் வரவிருக்கும் உள்ளூராட்சி மற்றும் சட்டசபைத் தேர்தல்களில் எதிர்பாராததிருப்பங்கள் ஏற்படும் என்பதை சூசகமாகச் சொல்லும் விழா இது என்று பலரும் கூறுகின்றனர்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியைச் சேர்ந்தவர்கள் பெருமளவில் கலந்துகொண்டதால்தான் விழாவுக்கு காங்கிரஸ்கட்சித் தலைவர் சோனியாகாந்தி வரவில்லை என்ற கருத்தும் நிலவுகிறது. எப்படியோ கத்தரிக்காய் முற்றினால் சந்தைக்கு வந்துதானே ஆகவேண்டும்?

# தேர்தலை அடுத்து குடாநாட்டில் இடம்பெறும் மாற்றங்கள்

## கட்சி ஒன்றின் மேலோங்கிய அதிகாரத்துக்கு ஆப்பு

தேர்தல் திருவிழா முடிந்து நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு வாரங்கள் கடந்து கொண்டிருக்கின்றன. பெரும்பாலும் அதிகாரக் கைமாற்றம் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் பெரிய இழுபறிகள் இன்றி — சர்சைகள் இன்றி — அமைதியாக முடிந்திருக்கிறது.

ஆட்சி அதிகாரக் கைமாற்றத்தின் விளைவாக குடாநாட்டிலும் நிர்வாக விடயங்களில் மாறுதலான போக்குகள் தென்படுகின்றன.

மக்கள் சார்ந்த அலுவல்களில், சேவைகளில் நிலவிவந்த சில சக்திகள் செல்வாக்கு, ஏகபோகம் என்பன இப்போதைக்கு முடிவுக்கு வந்துவிட்டிருப்பது தெரிகிறது.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு அமைச்சு என்ற தனியான அமைச்சின் கீழ் செயற்பட்ட சபைகள், திணைக்களங்கள் மற்றும் அலுவலங்களின் பணிகளில் அந்த அமைச்சுச் சார்ந்த அரசியல் கட்சி ஒன்றின் அதிகாரம் கோலோச்சி இருந்தது. இப்போது அதற்கு முடிவுகட்டப்பட்டிருக்கிறது.

அந்த அமைச்சின் கீழ் இயங்கிய திணைக்களங்கள், சபைகளின் பணிகள் புதிய புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சின் கீழ் கொண்டு வரபட்டிருக்கின்றன.

### சமாதானப் பாலம்

வடக்குக்கும் தெற்குக்கும் இடையேயும் அரசுக்கும் வடக்கு — கிழக்கு இளைஞர்களுக்கு இடையேயும் தனது புனர்வாழ்வு அமைச்சு சமாதானப் பாலமாகப் பணியாற்றும் என்று புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தன அறிவித்திருக்கிறார். அவரது உத்தரவின்படி குடாநாட்டு மக்களுக்கு பயண அனுமதிப் பத்திரங்களை வழங்கும் 'றான்' அலுவலகம், யாழ். செயலகத்தை அண்டிய பகுதிக்கு உடடியாக மாற்றப்பட்டிருக்கிறது.

யாழ். ஸ்ரான்லி வீதியில் மணியம்ஸ் கட்டடத்தில் முன்னர் இந்த அலுவலகம் இயங்கியது.

யாழ். செயலகத்தை அண்டிய பகுதிக்கு அலுவலகம் நகர்த்தப்பட்டிருப்பது பயண அனுமதி பெறும் பயணிகளது சிரமங்களைக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, பயண அனுமதி பெறும் விடயத்தில் முன்பு இருந்த சிரமங்கள், முறைகேடுகள், தேவையற்ற தலையீடுகள் அரசியல் செல்வாக்குகள் இனி மேலும் தொடராது, தொடரக்கூடாது என்பதே மகளின் எதிர்பார்ப்பாக உள்ளது. புதிய அலுவலகம் இனிமேல் அரசியல் மற்றும் கட்சிச் சார்பற்ற ஒரு நிர்வாக அலுவலகமாக ,முழுக்க முழுக்க மக்களுக்காக பக்கசார்பின்றி சேவையை சீராக வழங்கும் ஒரு நிறுவனமாக, இயங்கும் என்று எதிர்பார்க்கலாம்.

### கெடுபிடி இராது

யாழ். மக்களின் பிரதிநிதியான தி. மகேஸ்வரனால் பொறுப்பேற்கப் பட்டிருக்கும் இந்துசமய விவகார அமைச்சின் அலுவலகம் யாழ் செயலகத்தில் இயங்கவுள்ளது. பல்வேறு தேவைகளை நாடி தினமும் செயலகத்துக்கு வருகின்ற மக்கள் அங்கேயே அமைச்சு அதிகாரிகளையும் சந்தித்துத் தங்கள் குறைகளை முறையிட்டு நிவிர்த்தி செய்துகொள்ள வசதியாகவே இந்த முடிவை அமைச்சர் மகேஸ்வரன் எடுத்திருக்கிறார்.

தனது அமைச்சின் கீழவரவுள்ள அலுவலகங்களில் மக்கள் எந்தவித பாதுகாப்புக் கெடுபிடிகளையும் எதிர்கொள்ளாமல் இலகுவாக தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளத்தக்க வசதிகள் செய்யப்படவேண்டும் என்பதில் மகேஸ்வரன் கண்ணும் கருத்துமாதக உள்ளார். யாழ். புறநகர்ப் பகுதியில் பலாலி நெடுஞ்சாலையில் அமைந்திருக்கும் அவரது இல்லத்தில் தினமும் சனக்கூட்டம் நிரம்பிக் காணப்படுகிறது.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் கீழ் முன்னர் இயங்கிய அலுவலகங்கள், சபைகள் எல்லாவற்றினதும் பொறுப்பு விரைவிலேயே தன்வசம் ஒப்படைக்கப்பட்டுவிடும் என்று அமைச்சர் மகேஸ்வரன் கூறிவருகிறார்.

தற்போதைக்கு டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனவின் புனர்வாழ்வு அமைச்சின் கீழ் இப்பணிகள் நடைபெற்றாலும் விரைவிலேயே அவை மகேஸ்வரனின் அமைச்சின் கீழ் ஒப்படைக்கப்பட்டுவிடும் என்று ஐ.தே.கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விடயத்தில் விடுதலைப் புலிகள் தரப்பின் அழுத்தத்தையும் அரசு எதிர்கொள்வதாக செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

தேர்தலில் குடாநாட்டில் மிகமோசமான தோல்வியைச் சந்தித்த ஈ.பி.டி.பி. கட்சியினர் எதிர்பாராத பலத்த பின்னடைவுக்குப் பிறகு ஒருவாறு தங்களைச் சுதாகரித்துக் கொண்டு கட்சிப் பணிகளை ஒழுங்குபடுத்தி எதிர்காலச் செயற்பாடுகளை முன்னெடுக்கத் தயாராகி வருகின்றனர்.

யாழ். நகரில் ஸ்ரான்லி வீதியில் ஸ்ரீதர் படமாளிகையில் வலுக்கோட்டையாக விளங்கிய தங்கள் தலைமைப் பணிமனையை இன்னமும் அவர்கள் தக்கவைத்திருக்கிறார்கள்.

கட்சியின் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்காக யாழ். மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி. குகேந்திரன் அந்த அலுவலகத்திலேயே இன்னமும் தங்கியிருக்கிறார். பழைய கலகலப்பு அங்கு இல்லை. வழமையாக இருக்கும் சனக்கூட்டத்தையும் இப்போது காணமுடியவில்லை.

குடாநாட்டின் பல இடங்களிலும் இயங்கிய ஈ.பி.டி.பி அலுவலகங்கள் மூடப்பட்டிருக்கின்றன. அல்லது அவற்றின் செயற்பாடுகள் குறைக்கப்பட்டிருக்கின்றன.

எனினும் தாங்கள் குடாநாட்டை விட்டு ஒருபோதும் ஓடிவிடப்போவதில்லை என்கிறார் கே.வி. குகேந்திரன். தனது கட்சியின் கட்டுபாட்டின் கீழ் இயங்கும் பிரதேச சபைகளின் தலைவர்களை ஒன்று சேர்த்து செய்தியாளர் மாநாடு ஒன்றை அவர் கடந்த வாரம் நடத்தியிருக்கிறார்.

ஈ.பிடி.பி என்பது அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சிதான் — ஆயுதக்குழு அல்ல. ஆயினும் நாங்கள் தற்பாதுகாப்புக்காகவே ஆயுதங்களை வைத்திருக்கிறோம் என்று திருப்பித் திருப்பிக் கூறிவந்தாலும் அந்தப் 'பழைய பல்லவி' இனியும் மக்களிடையே எடுபடுமா என்பது ஐயம்தான். தீவுப் பகுதியில் தேர்தல் பிரசாரத்தின் போது தமிழர் கூட்டமைப்புப் பிரமுகர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் கடைசி நேரத்தில் — வெண்ணெய் திரண்டு வருகையில் தாழி உடைந்தது போல் — கட்சியின் செல்வாக்கைக் பெரிதும் பாதித்துவிட்டது என்பதைக் கட்சியின் உயர்பீடம் உணர்ந்திருக்கிறது. இது விடயத்தில் கட்சிப் பிரமுகர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுவதும் தெரிகிறது.

குடாநாட்டில் அடுத்துவரவிருக்கும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்காக கிராம மட்டத்தில் கட்சியின் செயற்பாடுகளை திட்டமிட்டு முன்னெடுக்க ஈ:பி.டி.பி தயாராகின்றது.

யாழ். மாநகர சபைக்கு புதிய தேர்தல் நெருங்குவதால் புதிய மேயரை உடனடியாகத் தெரிவு செய்வதில்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவு செய்திருப்பதாகத் தகவல்.

தற்போதைய மேயரான நடராஜா ரவிராஜ் தேர்தல் மூலம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து புதிய மேயராக வரப்போகிறவர் யார் என்ற கேள்வி எழுந்தது.

அப்பதவிக்கு பலமுனைப் போட்டிவேறு கட்சிக்குள் எழத்தொடங்கியது. எனினும் அடுத்த ஆண்டு முற்பகுதியில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும்வரை மேயர் பதவிக்குப் புதிதாக எவரையும் நியமிப்பதில்லை என்றும் —

தற்போதையய பிரதி மேயர் செல்லன் கந்தையன் தொடர்ந்தும் அப்பதவியிலேயே இருந்தவாறு மாநகர சபைக்குத் தலைமை வகிப்பார் என்றும் கூட்டணி வட்டாரங்கள் கூறுகின்றன.

### மக்களின் எதிர்பார்ப்பு

கூட்டமைப்பினருக்குத் தங்கள் வாக்குகளை அள்ளவழங்கி அவர்களை அமோக வெற்றியீட்டச் செய்த குடாநாட்டு மக்கள் இப்போது அவர்களிடம் இருந்து நிறையவே எதிர்பார்க்கின்றனர்.

மக்களின் ஏகப்பட்ட எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் — அவர்களை திருப்திப்படுத்தக்கூடியவாறு — அவர்கள் மத்தியில் நின்று செயலாற்ற வேண்டிய — பாரிய கடமையை கூட்டமைப்பினர் எதிர்நோக்குகின்றனர்.

எனினும் கூட்டமைப்பில் இடம்பெறும் நான்கு பிரதான தமிழ்க் கட்சிகளும் இன்னமும் தமது தளத்தை குடாநாட்டில் மக்கள் மயப்படுத்தவில்லை.

பதவியேற்பு மற்றும் இதர விடயங்களுக்காக தேர்தல் முடிந்த கையோடு கொழும்புக்குப் போய்விட்ட கூட்டமைப்பு எம்.பிக்கள் இன்னமும் யாழ்ப்பாணம் திரும்பவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். அலுவலகத்தில் எந்த மாற்றங்களும் தெரியவில்லை. மக்களின் தொடர்புகளுக்கு வசதியான ஏற்பாடுகள் எவையும் இன்னமும் அங்கு செய்யப்படவில்லை.

ரெலோ, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய கட்சிகளும் யாழ். நகரில் தங்கள் பிரதான செயலகங்களை இன்னமும் அமைக்கவில்லை. இதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்று அவர்கள் கூறிக் கொள்கின்றனர். எனினும எங்கே எங்கள் எம்.பிமாரைச் சந்திப்பது என்று தெரியாத நிலையிலேயே மக்கள் உள்ளனர்.

புதிய எம்.பிக்களிடம் இருந்து மக்கள் எவற்றை எதிர்பார்க்கின்றனர்.?

யாழ்ப்பாணத்தில் 'மக்கள் எழுச்சி அமைப்பு' என்ற பெயரில் கடந்தவாரம் வெளியான ஒரு துண்டுப்பிரசுரம் பின்வருமாறு கூறுகின்றது:—

மக்கள் சக்தியின் வெளிப்பாட்டை நடந்து முடிந்த தேர்தலிலே அப்பட்டமாகக் காட்டிவிட்டீர்கள். புரியவேண்டியவர்கள் நிச்சயம் புரிந்திருப்பார்கள். சிலர் விளங்கியும் விளங்காமலும் இருப்பார்கள். எனவே இத்துடன் உங்கள் கடமை முடிந்துவிடவில்லை. உங்கள் முன்னால் இன்னமும் சில பொறுப்புக்கள் உள்ளன. சென்ற காலங்களைப் போல ஏனோ தானோ என்றிராமல் உங்கள் உரிமைகளை வென்றெடுக்க இந்தக் கடமைகளைக் கருத்தோடு செய்ய முன்வாருங்கள்.

எவ்வளவோ போட்டிகள், எதிர்ப்புகள், இடையூறுகளுக்கு மத்தியில் உங்கள் உயிரையும் துச்சமென மதித்தே இந்த வெற்றியை தமிழர் கூட்டமைப்புக்கு பெற்றுக் கொடுத்துள்ளீர்கள். முன்னைய காலங்களைப் போல திரும்பவும் உங்களை ஏமாற்றி வெளிநாட்டுச் சுற்றுலா, குண்டு துளைக்காத வாகனம், உறவினர்களுக்கு மட்டுமே வேலைவாய்ப்பு, தகுந்த நேரத்தில் குத்துக்கரணம் அடிப்பு இப்படியான வேலைகளில் மீண்டும் உங்கள் பிரதிநிதிகள் ஈடுபடுவார்களாக இருந்தால் அவர்களுக்கு எதிராக நீங்கள் நிச்சயம் கிளர்ந்தெழ வேண்டியது அவசியமானதாகும். நாடாளுமன்றக் கூட்டம் தவிர்ந்த ஏனைய நாள்களில் உங்கள் தொகுதி உறுப்பினரை தொகுதியிலேயே இருக்குமாறு கட்டாயப்படுத்துங்கள். வருடக்கணக்காக விசாரணைகள் ஏதுமின்றி சிறைகளிலே சித்திரவதைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் எம் இளைஞர் சமுதாயத்தைப் பற்றி, அவர்களின் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்குமாறும் அவர்களின் விடுதலைக்காகப் பாடுபடுமாறும் உங்கள் உறுப்பினரிடம் வற்புறுத்திச் சொல்லுங்கள்...

— ஆதர்ஷாதாஸ்



GERMAN TECHNOLOGY WITH BUILT-IN-BOOSTER
Euromind Active Antenna.
for Clear Reception
Of all Channels in all Locations
Importers and Suppliers
UKAAYE
190 - 1st Floor, Bodhiraja Mawatha,
(Gaswork Street) Colombo - 11.
Tel: 075-370019, Fax: 075-370018

என்டெனா பொருத்துதல்


Get it Installed by professionals
TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656 (TEL/FAX)
E-mail : telecave@eureka.lk


Eurostar
Sole Distributors in Sri Lanka for
UKAAYE
190 - 1st Floor, Bodhiraja Mawatha,
(Gaswork Street) Colombo - 11.
Tel: 075-370019, Fax: 075-370018

அவசர திருத்தங்கள்


Guaranteed repair & service by trained technicians
TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656 (TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

# சுடர் ஒளி

டிசம்பர் 23, 2001



36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 074- 513112 - 5
E-mail: sudar@uthayan.com


## மீண்டும் மின்வெட்டு

இலங்கையில் மீண்டும் மின்வெட்டு நடைமுறைக்கு வந்திருக்கிறது.

ஒரு நாளைக்கு ஒரு மணிநேரம் இருளில் இருக்கவேண்டும் என்பது இன்றைய கட்டாயத் தேவை.

மழை இல்லாததாலும் நீர்த்தேக்கங்களில் உள்ள நீர் குறைந்து வருவதாலும் நீர் மின் உற்பத்தி வெகுவாகக் குறைந்துவிட்டது.

மின்சார விநியோகம் முற்றாகத் தடைப்படாமல் மழை வரும்வரை தொடர்ந்து நடைபெறவேண்டும் என்பதற்காகவே ஒவ்வொரு நாளும் மின்சார வெட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இப்பொழுது ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் மின்வெட்டு அமுலில் இருக்கிறது.

இன்று தொடங்கியுள்ள ஜி.சீ.ஈ. (சாதாரணதரம்) பரீட்சையும் நத்தார், புத்தாண்டு விழாக்களும் முடிய மின்வெட்டு ஒரு மணி நேரத்துக்கல்ல பல மணிநேரத்துக்கு நீடிக்கலாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

மழை நீரை மட்டுமே மின்சாரத்துக்கு நம்பியிருக்கலாமா? இந்தக்கேள்வி இன்று நேற்றுத்தான் எழுந்ததல்ல.

லக்ஸபானா நீர் மின்சாரத்திட்டம் முதலில் தொடங்கப்பட்டதும் அதை வரவேற்ற அன்றைய கைத்தொழில் விஞ்ஞானத்துறை அமைச்சர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் இந்த மின் சாரம் தடைப்பட்டால் ஆபத்தும் இருக்கிறது என்று சொன்னார். வடக்கே வரும் மின்சாரம் துண்டிக்கப்படலாம் எனக் கருதியே ஜீ.ஜீ. அன்று அப்படிச் சொல்லியிருந்தார்.

இன்று நாடு முழுவதற்குமே நீர் மின்சக்தி கையைவிரித்து விடுகிறது. நிலக்கரி மூலம் மின்சக்தி உற்பத்தி செய்யும் இயந்திரங்கள் இங்கு மின்சாரம் உற்பத்தி செய்வதுண்டு. ஆனால் இந்த இயந்திரங்கள் இப்போது பழுதடைந்துள்ளனவாம்.

மொத்தத்தில் நீர் மின்சக்தி உற்பத்தி குறைந்து விட்டது; நிலக்கரி மின்சக்தியையும் உற்பத்தி செய்ய முடியவில்லை.

ஆண்டு தோறும் மழை வீழ்ச்சி குறைவதும் மின்வெட்டு வருவதும் இங்கு வழமையாகிவிட்டன.

அருகேயுள்ள தமிழ் நாட்டில் தென் கரையோரப் பகுதியில் காற்றாடி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் தமிழ் நாட்டின் மின்தேவையைப் பெருமளவில் நிறைவு செய்கிறது.

தமிழ் நாட்டில் தென்கரையோரம் கடல் சூழ்ந்த பகுதி. இலங்கைத் தீவின் கரையோரம் முழுவதுமே கடல் சூழ்ந்த பகுதியாகும். இங்கு காற்றாடிகளால் மின் உற்பத்தி செய்ய முடியாதா?

காற்றாடியினால் மின்சார உற்பத்தி செய்யும் முயற்சியில் இறங்கி வெற்றி கண்டால் இலங்கையின் மின்தேவை முழுவதையுமே நிறைவேற்ற முடிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

காற்றாடி மின்சாரம் தமிழ் நாட்டில் மட்டுமல்ல இந்தியாவின் இதர பிரதேசங்களிலும் உற்பத்தி செய்யப்படுகிறது. உலகில் வேறு சில நாடுகளிலும் கூட காற்றாடி மின்சாரம் பெறப்படுகிறது.

குப்பைகளிலிருந்தும் மற்றும் கழிவுப் பொருள்களிலிருந்தும் கூட மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம் என்று சில நாடுகள் கண்டுபிடித்திருக்கின்றன. இதில் அவை வெற்றியும் கண்டுள்ளன. நாமும் செய்து பார்த்தாலென்ன?

கால்நடை அபிவிருத்தியில் கடந்த இருபத்தி நான்கு ஆண்டுகளாக எந்த அரசும் கவனம் செலுத்தவில்லை என்று புதிய கால் நடை அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி. திஸநாயகா கூறியிருக்கிறார். இதை அபிவிருத்தி செய்யப்போவதாகவும் அவர் சொல்லியிருக்கிறார்.

நல்லது, கால்நடைகளின் சாணத்தில் வாயு உற்பத்தி செய்யலாம். அதிலிருந்து மின்சாரத்தைப் பெறமுடியும். தேவையான அளவு மின்சக்தியைப் பெற்றால்தான் நாடு செழிக்கும். ஒளிமயமாகும். மக்களும் கஷ்டமின்றி வாழ முடியும்.

பல வழிகளிலும் முயற்சி செய்து மின் சக்தியைப் பெற்றால் நாட்டில் உற்பத்தியும் குறையாது, நாடு ஒளி மங்கி இருள் சூழ வேண்டியும் வராது!

அதுசரி தேர்தல் வருகின்றதென்றதும் முந்திய ஆட்சியில் இருந்த மின்வெட்டு மறைந்து ஒளி பிறந்தது. தேர்தல் முடிந்ததும் புதிய ஆட்சியில் ஒளி பிறக்கும் என்று எதிர்பார்த்தால் இருள் சூழ்கிறதே!

# அரசை வியப்பில் ஆழ்த்திய புலிகளின் யுத்த நிறுத்தம்

## பந்து தற்போது ரணிலின் பக்கம்

புலிகளுடன் சமரசப் பேச்சுக்களில் ஈடுபட யுத்த நிறுத்தம் ஒன்றை ஒருதலைப்பட்சமாக அறிவிக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு நான்கு சுவர்களுக்குள் மந்திராலோசனை நடத்திக் கொண்டிருந்தது.

புதிய நாடாளுமன்ற அமர்வின் பின் – நாடாளுமன்ற அங்கத்தவர்கள் அனைவரும் சத்தியப் பிரமாணம் எடுத்தபின் – யுத்த நிறுத்தம் பற்றி அறிவிப்பதா; அல்லது மூன்று நாள் இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு 24 ஆம் திகதி காலை நாடு திரும்பியபின் அறிவிப்பதா என தளம்பிக் கொண்டிருந்தார் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க.

தான் இலகுவான முடிவை எடுக்க ஏதுவாக தெரிந்தெடுக்கப்பட்ட நம்பிக்கைக்குப் பாத்திரமான பாதுகாப்பு உயரதிகாரிகளுடன் கூட்டம் ஒன்றையும் அவர் நடத்தினார். அங்கு புலனாய்வுத்துறை அறிக்கைகளின் பிரகாரம் புலிகள் 23 ஆம் திகதிதான் யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவிப்பார்கள் என ஊகித்துக் கொண்ட அரசு புலிகளை முந்திக் கொண்டு வியாழக்கிழமை (டிசம்பர் 20) மாலை யுத்த நிறுத்தம் ஒன்றை ஒருதலைப்பட்சமாக அறிவிப்பது என தீர்மானித்தது.

ஆனால் அதை எப்படியோ மோப்பம் பிடித்து அறிந்து கொண்ட புலிகளின் தலைமைப்பீடம் டிசம்பர் 24 ஆம் திகதி நள்ளிரவு தொடக்கம் யுத்த நிறுத்தம் செய்யவிருப்பதாக வழமைக்கு மாறாக சுமார் 5 நாட்களுக்கு முன்னதாகவே ஒருதலைப்பட்சமாக அறிவித்திருக்கிறது. ஆகவே பந்து தற்போது ரணில் பக்கமே.

### புலிகளுக்கு சாதகம்

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியினரை மட்டுமல்ல பாதுகாப்பு உயர் அதிகாரிகளையும் அதிர்ச்சியில் ஆழ்த்திய இந்த ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்த அறிவிப்பு மூலம் புலிகள் பல வழிகளில் பலனடைந்து இருக்கிறார்கள்.

முதலாவதாக, புலிகளை சர்வதேச பயங்கரவாதிகளாக்க முயற்சிக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளுக்கு தாம் உண்மையிலேயே ஒரு பயங்கரவாத இயக்கம் அல்ல, உரிமைகள் மறுக்கப்பட்டு பாரபட்சமாக நடத்தப்படும் இனத்தின் விடிவுக்காகவே ஆயுதப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் இயக்கம் என்பதை மீண்டும் ஒரு முறை புலிகள் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள்.

மறுபுறத்தில் சமாதானம் தான் தமது கொள்கை என்று கூறிக் கொண்டு ஆட்சிப்பீடம் ஏறியிருப்பவர்களுக்கு எந்த வகையிலும் அதிலிருந்து நழுவ இடம் கொடுக்காது சமாதானம் தான் புலிகளினதும் விருப்பம் அதற்காக அவர்கள் யுத்த நிறுத்தத்தைக் கூட ஒருதலைப்பட்சமாக அறிவிக்கக் கூடியவர்கள் என்று பறைசாற்றியிருக்கிறார்கள்.


இதனால், அரசை வெறும் வாய்ப்பேச்சில் மட்டுமல்லாது, நடைமுறையிலும், சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் புலிகள் தள்ளியிருக்கிறார்கள்.

புலிகளின் அண்மைக்கால நிலைப்பாட்டில் பாரிய மாற்றம் ஒன்று ஏற்பட்டிருப்பதை இங்கு வெளிப்படையாக அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

அதாவது இதுவரை தமிழ் மக்களின் விருப்பு வெறுப்புக்களுக்கும் இயக்க உறுப்பினர்களின் விருப்பு வெறுப்புக்களுக்கும் ஏற்ப முடிவுகளையும் கொள்கைகளையும் எடுத்து வந்த புலிகள் இம்முறை பகிரங்கமாக சிங்கள மக்களின் உணர்வுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள்.

அத்துடன் தம்மை நாடாளுமன்ற நடைமுறைகளுக்கு அப்பாற்பட்ட சக்தி என வர்ணித்து வரும் புலிகள் இம்முறை நாடாளுமன்ற நடைமுறைகளுக்கும் மதிப்பளித்திருக்கிறார்கள்.

அவர்கள் தமது யுத்த நிறுத்த அறிவிப்பில், நந்தார், புதுவருடம் மற்றும் தைப் பொங்கல் பண்டிகை காலங்களில் ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை பிரகடனப்படுத்துவதன் மூலம் சமாதான முன்னெடுப்புக்களை இலகுபடுத்தியிருப்பதாக



ரணில்

தெரிவித்திருப்பதன் மூலம் தம்மை ஒரு தேசிய சக்தியாக வெளிக்காட்ட முனைந்திருக்கிறார்கள்.

புலிகளின் தலைவர் தனதுரையில் கூட போர் வெறி கொண்ட சக்திகளைத் தோற்கடிக்குமாறு நாடாளுமன்றத் தேர்தலில் வெளிப்படையாகவே அறைகூவல் விடுத்தார்.

இலங்கை இனப்பிரச்சினை தீர்வு அணுகுமுறையில் இருந்து நோக்குமிடத்து (Conflict resolution) இது புலிகளுக்கு உயரிய சந்தர்ப்பத்தை கொடுத்திருப்பதுடன் பல மைல்களையும் தாண்ட வைத்திருக்கிறது.

புலிகளின் இந்த அறிவிப்பு தொடர்பாக கருத்து தெரிவித்த முன்னணி அமைச்சர் ஒருவர், புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பை தாம் இருகரம் கொண்டு வரவேற்பதாகவும் புதிய அரசாங்கத்தில் புலிகளுக்கு இருக்கக்கூடிய ஆழமான நம்பிக்கையையே இது வெளிப்படுத்துகிறது என்றும், இது புதிய அரசுக்கு கிடைத்துள்ள முதல் வெற்றி என்றும் வர்ணித்தார். அத்துடன் அரசு அதன் முதற் கட்ட நடவடிக்கையாக வடக்கு கிழக்கு மக்கள் மீது முன்னைய அரசால் விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடையை உடனடியாகவே நீக்க விருப்பதாகவும், பிரதமர் இந்தியாவுக்கு விஜயம் செய்வதற்கு முன் யுத்தநிறுத்தத்தை அறிவிக்க இருப்பதாகவும் கூறினார்.

### இந்திய மத்தியஸ்தம்

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நோர்வேயை அனுசரணையாளராக அங்கீகரித்துள்ள புதிய அரசு, இந்தியாவுக்கு அதைவிட பெரிய பாத்திரம் ஒன்றை வழங்கப் போவதாகவும் தெரிவித்துள்ளது.

சுருங்கக்கூறின் இந்தியா விரும்புமோ, இல்லையோ இந்தியாவின் மத்தியஸ்தத்தையே புதிய அரசு விரும்புகிறது.

இது உண்மையிலேயே ஒரு ஆரோக்கியமான ஏற்பாடு அல்ல. இலங்கையில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினையில் இந்தியாவுக்கும் அக்கறை இருக்கிறது என்பதெல்லாம் உண்மைதான். ஆனால் ரணில் விக்கிரமசிங்க தன்னிச்சையாக இந்தியா மத்தியஸ்தம் செய்ய வேண்டும் என நம்பி இருப்பது நடைமுறையில் பல சிக்கல்களை உருவாக்கும்.

உதாரணமாக, இனப்பிரச்சினையின் பிரதான பங்காளனான புலிகளினது உடன்பாடு இல்லாது, ஆலோசனையைப் பெறாது மத்தியஸ்தம் செய்ய முனைவது அரசதரப்பு ஒருதலைப்பட்சமாக முடிவுகளை மேற்கொள்கிறது என்ற வரையறைக்குள்ளேயே வகைப்படுத்தப்பட ஏதுவாகிறது.

மறுபுறத்தில், ரஜீவ் காந்தி கொலை தொடர்பாக புலிகளின் தலைவர் இந்திய அரசால் மிகவும் வேண்டப்படுபவர். புலிகள் இயக்கத்தை இந்தியா தடைசெய்தும் இருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் இந்தியா எவ்வாறு இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் மத்தியஸ்தம் வகிக்க முடியும்?

அவ்வாறு செய்தாலும் அது நடுநிலையானதாக அமையுமா?

ஆகவே புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்து இந்தியாவின் நாடித்துடிப்பை அறிய விரும்பிய ரணில் இப்போது புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்துள்ள யுத்த நிறுத்தத்தை எவ்வாறு தனக்கு சாதகமாக பயன்படுத்த முடியும்?

அதற்கு இந்தியா ஆட்சேபம் ஏதும் தெரிவிக்குமா என்பதை கண்டறிவதற்காகவே தனது இந்திய விஜயத்தை மேற்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

இந்தியாவின் உண்மையான நிலைப்பாடு என்னவென்றால் இலங்கையில் சமாதானம் அற்ற குழம்பிய, சிக்கலான நிலையை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதும் இலங்கையின் பிரதான பாதுகாவலனாக தன்னை வெளி உலகுக்குக் காட்டிக் கொள்வதுமே ஆகும்.

கடந்த ஆட்சியின் போது கூட, சந்திரிகா அரசு நோர்வேயை அனுசரணையாளராக அமர்த்திக் கொண்டதில் இந்தியாவுக்கு அதிகம் உடன்பாடில்லை. ஆகவே, புதிய அரசை பகடைக்காயாக பயன்படுத்தி நோர்வேயை இலங்கை இனப்பிரச்சினை தீர்வு முயற்சியில் இருந்து நீக்கி விடுவதே தற்போதைக்கு இருக்கக்கூடிய இந்திய அரசின் நிலைப்பாடு ஆகும்.

ஒட்டு மொத்தத்தில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு எனும் விடயத்தில் இந்திய அரசில் தங்கியிருப்பது எதிர்மாறான விளைவுகளையே கொடுக்கும் என்பது வெள்ளிடைமலை.

இது இவ்வாறிருக்க, ஐ.தே.க அமைச்சரவை பொறுப்பேற்று சுமார் 10 நாட்கள் முடிவடைந்தும், மக்கள் எதிர்பார்த்த திருப்பங்கள், மாற்றங்கள் எதுவும் இதுவரை நிகழ்ந்ததாக தெரியவில்லை. கட்சிக்கு உள்ளேயும், வெளியேயும் காணப்படும் உண்மையான நிலைப்பாடு இதுதான்.

ஐ.தே.க ஆட்சி வேண்டி வாக்குப் போட்ட மக்களுக்கு ரணிலின் ''தேசிய நல்லிணக்க அரசாங்கம்'' என்ற கொள்கை எதிர்பாராத விளைவுகளையே கொடுத்திருக்கிறது. ''தேசிய நல்லிணக்க அரசு'' ஒன்று நிறுவப் படுமோ இல்லையோ அக் கொள்கை பொது ஜன ஐக்கிய முன்னணிக்குள் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பிரதான தூண்கள் என்று கூறப்படும் முன்னாள் அமைச்சர்களான எம்.எச்.எம். பௌசி, மற்றும் ரிச்சட் பத்திரன உட்ப 23 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐ.தே.க அரசில் பங்கேற்கவுள்ளனர் என்று நம்பகரமாக தெரியவருகிறது.

இவ்வாறு இவர்களை பிரித்தெடுப்பதன் அடிப்படை நோக்கம் என்னவெனில் எதிர்காலத்தில் ஐ.தே.கவுக்கு எதிராக எந்தவொரு எதிர்கட்சியும் பலமாக இருக்கக் கூடாது என்பதே.

அத்துடன் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெற்று விட்டால் அரசமைப்பில் சீர்திருத்தங்களை மேற் கொள்ள முடியும். ஜனாதிபதியைக் கூட குற்றப் பிரேரணை மூலம் பதவி கவிழ்க்கலாம்.

— பி. ரமணன்

# மட்டக்களப்பில் அதிகரிக்கும் திருட்டுக்கள்
# பின்னணி குறித்து பலத்த சந்தேகம்

மட்டக்களப்பு நகரப் பகுதிகளில் களவுகள், கொள்ளைகள் தற்பொழுது அதிகரித்து வருகின்றன. வீடுகளில் ஆட்கள் இல்லாத நேரம் பார்த்து வீட்டுக் கூரை வழியாக உட்புகுந்து, வீட்டிலுள்ள நகைகள் பணம் என்பனவற்றை அபகரித்துச் சென்ற 10 ற்கும் மேற்பட்ட திருட்டுச் சம்பவங்கள் அண்மையில் மட்டக்களப்பில் இடம் பெற்றிருக்கின்றன.

குறிப்பாக அண்மையில் இந்துக்கள் கந்தசஷ்டி விரதம் மற்றும் கௌரி விரதம் போன்றவற்றில் ஈடுபட்டு கோயில்களுக்கு வழிபாட்டுக்காகச் சென்றிருந்த வேளைகளிலேயே அநேகமான கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன என்று தெரியவந்துள்ளது.

விடுமுறையைக் களிப்பதற்காக வெளி ஊர்களுக்குச் சென்றவர்களது வீடுகள், மற்றும் கணவன் மனைவி இருவருமே வேலைக்குச் செல்லும் வீடுகள் என்பன சரியாக நோட்டமிடப்பட்டு திட்டமிடப்பட்ட முறையில் இந்தத் திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

கூரை வழியாக வீட்டினுள் புகுந்து வீட்டினுள் சாவகாசமாக நடமாடி, வீட்டிலுள்ள உணவுப் பொருட்களையெல்லாம் உண்டு விட்டு தமது காரியத்தை நடத்திச் செல்வதையே திருடர்கள் வழக்கமாகக் கொண்டிருக்கின்றார்கள். இதுவரை திருட்டு நடைபெற்ற அனைத்து வீடுகளிலும் நகைகள், பணம் என்பன தவிர வேறு எந்தப் பொருட்களும் திருடர்களால் எடுத்துச் செல்லப்படவில்லை.

ஸ்ரீலங்கா பாதுகாப்பு படைகளினதும் ,அவர்களுடன் இணைந்து செயற்படும் தமிழ் ஆயுதக் குழுக்களினதும் பூரணக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மட்டக்களப்பு நகரிலுள்ள வீடுகளில் தற்பொழுது இடம் பெற ஆரம்பித்திருக்கும் இது போன்ற தொடர் திருட்டுச் சம்பவங்கள் பற்றிய பல்வேறு சந்தேகங்கள் மட்டக்களப்பு வாழ் மக்களால் எழுப்பப்பட்டு வருகின்றன. இந்தத் தொடர் சம்பவங்களுக்குப் பின்னால் இருக்கக் கூடியதான சக்திகள் பற்றி பல்வேறு ஊகங்களும் எழுப்பப்பட்டு வருகின்றன.

திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றதாகக் கூறப்படுகின்ற நள்ளிரவு வேளைகளில் சாதாரண மக்கள் வெளியே நடமாட முடியாதபடி காணப்படுகின்ற பாதுகாப்புக் கெடுபிடிகள், திருடும் முறைகள் என்பனவற்றைச் சுட்டிக்காட்டும் பொதுமக்கள், பாதுகாப்புத் தரப்பினருடன் தொடர்பில்லாதவர்களால், தனி நபர்களால் இது போன்ற திருட்டுக்களைச் செய்யவே முடியாது என்று அடித்துக் கூறுகின்றார்கள்.

அத்தோடு இது போன்ற கொள்ளைச் சம்பவங்கள் பற்றி மட்டக்களப்பு பொலிஸில் பல முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்தும் இந்த திருட்டுச் சம்பவங்களில் சம்பந்தப்பட்ட நபர்கள் எவருமே இதுவரை கைது செய்யப்படவில்லை என்பது நோக்கத்தக்கது.

இது இவ்வாறு இருக்க, மட்டக்களப்பு நகரிலுள்ள சில வீடுகளுக்குச் செல்லும் சில இளைஞர்கள் , தாம் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று ஏமாற்றி பணத்தைப் பறித்துச் செல்கின்றனர் என்றும் முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் மட்டக்களப்பு ஞான சூரியம் சதுக்கத்திலுள்ள ஒரு வீட்டுக்குச் சென்ற ஓர் இளைஞன் தனது பெயர் குமார் என்று அறிமுகப்படுத்திவிட்டு , மறுநாள் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பழுகாமம் பிரதேசத்திலுள்ள தனது அலுவலகத்துக்கு வரும்படி வீட்டுக்காரரிடம் கூறி இருந்தான்.

சாதாரணமாகவே தமிழ் தேசியம் சம்பந்தமான எந்த ஒரு நடவடிக்கை களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாத அந்த வீட்டுக்காரர், வந்திருந்த வாலிபனை உண்மையிலேயே ஒரு புலி உறுப்பினர் என்று நம்பி விட்டார். பின்னர் அந்த இளைஞனுடன் சமரசம் செய்து ஒரு தொகைப் பணத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டார். பின்னர் விசாரித்தபோதுதான் வந்த வாலிபன் ஒரு போலிப் பேர்வழி என்று தெரியவந்தது.

இது போன்ற பல சம்பவங்கள் மட்டக்களப்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சாதாரணமாகவே, விடுதலைப் போராட்டத்தில் இருந்து அந்நியப்பட்டிருக்கும் நகரவாசிகள் ஏமாற்றுப் பேர்வழிகளை புலிகள் என்று இலகுவில் நம்பிவிடுகின்றனர். பெருந் தொகைப் பணத்தை இழந்து அவர்கள் தவிப்பது இங்கு அடிக்கடி நடந்துவருகிற ஒரு விடயமாகிவிட்டது.

இதுபோன்ற சம்பவங்களிலும் ,அரச படையினருடன் இணைந்து செயற்படும் ஒரு பகுதியினரே சம்பந்தப் பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் மட்டக்களப்பு நகரில் இடம்பெற்ற சில திருட்டுச் சம்பவங்களிலும், நகைபறிப்புச் சம்பவங்களிலும் அரச படைகளுடன் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருந்த சிலரே சம்பந்தப்பட்டிருந்தனர் என்பது பின்னர் தெரியவந்தது.

சில திருடர்கள் கையும் மெய்யுமாகப் பொதுமக்களால் பிடிக்கப்பட்ட போது இந்த உண்மை வெளிவந்து அரச தரப்பினரை தர்மசங்கடத்தில் ஆழ்த்தியிருந்தது.

கடந்தகால திருட்டுச் சம்பவங்களையும் தற்பொழுது இடம்பெற்று வரும் திருட்டுச் சம்பவங்களையும் ஒப்பிட்டு நோக்கும் பொதுமக்கள், தற்போதைய திருட்டுக்களுக்குப் பின்னால் இருக்கும் சக்திகளை ஓரளவுக்கு ஊகித்துக் கொள்வது தவிர்க்க முடியாததாகின்றது.

— சாத்வீகன்

### புதுயுகம் படைப்பார்கள்

ஏமாற்றி ஏமாற்றி
இழுத்தடித்த தொடர்கதை
இனிமேலும் தொடராது!

முற்றுப் புள்ளியிட்டு
கதையை முடித்துவிட
முண்டியடிக்கும் வாக்காளர்கள்
முனைந்து விட்டார்கள்!

சண்டித்தனமும்
சர்வாதிகாரமும்
மக்கள் சகதிக்கு
மண்டியிட்டே
ஆகவேண்டும்.
யுத்த பூமியில்
சமாதானப் பேச்சு
சித்திதருமா?
பித்தம் பிடித்த பேச்சுக்கள்
எப்போதும்
சக்தியைக் கொடுக்காது.
வித்தைகள் காட்டியது
விடிவைத் தரவில்லை!
புத்தி தெளிந்த மக்கள்
புதுயுகம் படைப்பார்கள்!

**கவிக்குயிலன் — சேனையூர்**

### சிந்திக்குமா பேரினவாதம்?

மலக்குழியில் மனித எலும்புகள்
மக்கள் தினசரியின் செய்திகள்
மலக்குழியோடு விட்டானா (எதிரி)
கிணற்றிலும் பதுங்கு குழியிலும்
புகுந்த படையால் — குதறி
தூசிக்கப்பட்ட மனித எச்சங்கள்.
அரச வல்லூறுகளினால் — இங்கு
அரங்கேறிய கொலைவெறிச்சான்றுகள்
மனதைவிட்டு அகலாத — என்றும்
மறக்கா மரணங்கள்
தினமும் பார்க்கின்றோம்
செல்தாக்குதலில் சிதறியவரும்
குண்டு வீச்சில் மாண்டவரும்
அகதி என்ற அவஸ்தையில்
அனாதையாகி அவலப்பட்டோரும்
அரசின் அரக்க கோரத்தால்
அடியோடு இல்லாமல் போயினர்
இவர்களின் இறப்புக்கள்
என்றும் சான்று கூறும்
இடப்பெயர்வின் பின் — தமிழ்
இன அழிப்புக்கள் இவை !!!
சிந்திக்குமா சீறிக் கொண்டிருக்கும்
சிந்தனையற்ற பேரினவாதம்?

முரசுநகர் — துஷி
முரசுமோட்டை, பரந்தன்

### சாதனை (தாய்) நாடு

தாய் நாடே...!
நீ சாதனைத் தாய் தான்.....
ஊனமுற்றவர்களில் அதிகம்
உன் குழந்தைகள் தான்....
பசி,பட்டினி
சோமாலியாவையும் மிஞ்சிவிட்டது.

இங்குமட்டும் தான்
மனித உயிர்கள்
மலிவாய் கிடைக்கிறது.
சிலவேளைகளில்
இலவசமாய் கூட...

கின்னஸில் கூட...
உன் நாமம்தான்
கொடிகட்டிப் பறக்கிறது.
தாய்த் (திரு)நாடே...!
நீ சாதனைத் தாய்தான்.

**ஸபீர் மௌஹூமட்**
**புத்தளம்**

### காதல்

இளமை வயதில் அரும்பும் காதல்
இரு உள்ளம் கலக்கும் காதல்
கண்களின் சந்திப்பில் இன்ப காதல்
கவிதை ஆக்க உதவும் காதல்

எண்ணங்கள் பல அள்ளும் காதல்
இன்பங்கள் பல தரும் காதல்
அம்பிகாவதி அமராவதி காதல்
கல்லறையில் முடிந்த சோகக் காதல்

மனங்கள் இரண்டும் சேரும் காதல்
மதங்கள் எண்ணி மாறா காதல்
ஜாதி பேதம் இல்லா காதல்
ஜாதகம் பார்த்து தோன்றா காதல்

கல்லூரி மாணவர் கொள்ளும் காதல
காசு பணம் தேடா காதல்
மந்திரம் ஓதி அருந்ததி பார்த்து
மக்கள் முன்னால் தோன்றாது காதல்

**சி.யோ.துஷ்யந்தன்**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

### இரண்டாயிரத்து இரண்டில்

இரண்டாயிரமும்
இருண்டதாயே.. போனது!
இரண்டாயிரத்தொன்றிலும்
இன்னும் ஒன்றையும் காணோம்!
இரண்டாயிரத்து
இரண்டிலேனும் — இந்த
இலங்கைத் தீவு
போரினை மறக்குமோ
இருண்ட தமிழர் வாழ்வு
இனியென்று விடியுமோ!
இனிய தேசம் மலருமோ!
இதயம் எல்லாம் இணையுமோ!

எம்.வதனரூபன்
சம்பூர்



### தை மகளே நீ வா

தை மகளே நீ வா
தலை நிமிர்ந்து நீ வா
தரணியில் நாம் படும் இன்னல்
களைய வா
களிப்பூட்டும் திங்களென
கருணையுடன் உதயமாகி
தை மகளே நீ வா
தை பிறந்து வழி பிறக்க
தலைநிமிர்ந்து நாம் நடக்க
இளவேனில் காலம் பூக்க
இளையோர் மனது கவி இசைக்க
தை மகளே நீ வா.
நாம் பட்ட அவலம் போக்கி
நாடெல்லாம் வறுமை நீக்கி
செந்தமிழர் சொல் ஓங்கி
பாரெல்லாம் புகழ் பொங்கிட
தை மகளே நீ வா
நெல் மணிகள் தான் உடைத்து
பசுவினில் பால் கறந்து
செங்கரும்பு சாறெடுத்து
பொங்கல் தனை செய்திட
தை மகளே நீ வா

நீ வரும் நாள் பார்த்து
நித்தமும் நாள் எண்ணி
நினைவாய் இருக்கின்றோம்
நின் மதியாய் நாம் வாழ
தை மகளே நீ வா

தொகுப்பு
வி.பி.மாயவன்

### யுத்த வாழ்க்கை

" யுத்தத்தால் நாம் அடைந்த துன்பம் போதும்
ஓடி ஓடி கால்கள் சோர்வடைந்து விட்டன.
ஓய்ந்திருந்த இடமெல்லாம் ஒரே சத்தம்
ஊர் இழந்து உடமை அது இழந்து
இப்பொழுது நாம் அகதியாய்.
இனி இழப்பதற்கு உயிரைத் தவிர
வேறென்ன இருக்கிறது.

**ம.ஜீவகாந்**
**மன்னார்.**

### மறக்க முடியவில்லை

சிட்டாகச் சிறகடித்து
சிரித்து விளையாடி
பட்டாம் பூச்சி போல்
பறந்த கதை சொல்லவா

பக்கத்துக் காணியிலே
மாங்காய் பறிப்பதற்கு
பதுங்கி நின்றும்
குட்டு விழுந்த கதை சொல்லவா

பாற்பல்லு விழுந்தவுடன்
பல்லியிடம் முறையிட்டு
திருப்பித் தாவென்று கேட்டு
அழுத கதை சொல்லவா

பேய் என்று பயமுறுத்த
பீதியால் ஓடி வந்து
அம்மா மடிதனிலே முகம் புதைத்து
அழுத கதை சொல்லவா

தென்னங் குரும்பை தனில்
அழகிய தேர் செய்து
நூலால் வடம் கட்டி
இழுத்த கதை சொல்லவா

ரெயில் வண்டி போகும் போது
ஆசையாய் கையசைத்து
ஆர்ப்பாட்டம் பண்ணி நின்று
மகிழ்ந்த கதை சொல்லவா

நாயை சீண்டி விட்டு
கல்லாலும் எறிந்து விட்டு
நாயாய் ஓடி வந்து
விழுந்த கதை சொல்லவா

ஆற்றிலே குளிக்கச் சென்று
தூண்டிலால் மீன் பிடித்து
மீன்களாய் நீந்த என்று
மூழ்கி மீண்ட கதை சொல்லவா

மறக்கமுடியவில்லை
மறைந்த நினைவுகளை
மீட்க முடியவில்லை.
இளமை நினைவுகளை

**சிவா விசாகை**
**பூந்தோட்டம்**
**வவுனியா**

### நம்பிக்கை

இடிந்து நொறுங்கிப் போன — என்
கனவுக் கோட்டையின்
இடிபாடுகளுக்கிடையே....
என் இதயம்
சுக்குநூறாகி
சவாகிக்கக் கூட முடியாமல்...
இருந்தும்
விதையாகி வேர்விடும்
எனும் நம்பிக்கையில்...
இன்னும்
என் விழி — நீர் சொரிந்து
கொண்டே....

**என். ஜிலன்**
**சண்டிலிப்பாய்.**

# முல்லை முகாமை மீட்பதற்கு படையினர் வகுத்த வியூகம்

## காயமடைந்த கட்டளை அதிகாரியை ஹெலி மீட்டுச் சென்றது

அலம்பில் பகுதியில் ஹெலிகள் மூலம் தரையிறக்கப்பட்ட துருப்புகள் 19ஆம் திகதி தொடர்ந்து இரண்டாவது நாளாக கடும் எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

முல்லைத்தீவு முகாம் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான சமயம் கொழும்பு சென்றிருந்த அந்த முகாமின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் லோறன்ஸ் பெர்னாண்டோ தமது முகாமை மீட்பதற்காகவும், அங்கு தப்பிப் பிழைத்திருக்கக் கூடிய தனது துருப்புகளைக் காப்பாற்றுவதற்காகவும் தாமே நேரடியாக மீட்பு முயற்சியில் குதித்து, அலம்பிலில் தரையிறங்கிய இரண்டாவது விசேட படை பட்டாலியன் (2SF) படையினருடன் சேர்ந்து கொண்டார்.

ஆனால் அவ்வாறு தரையிறங்கிய துருப்புகளை புலிகள் சுற்றி வளைத்துத் தாக்கிய போது பிரிகேடியர் பெர்னாண்டோவும் படுகாயமுற்றார். எனினும் ஹெலிகொப்டர்களைச் செலுத்திய விமானப்படை விமானிகளின் துணிகர முயற்சி மூலம் — புலிகளின் தாக்குதல்களுக்கு மத்தியில் — ஹெலிக்கொப்டர் ஒன்று அலம்பில் பகுதியில் தரையிறங்கி காயமுற்ற அவரை மீட்டுச் சென்றது.

அலம்பிலில் ஹெலி மூலம் தரையிறக்கப்பட்ட மீட்பு அணி அதன் தளபதி லெப்டினன்ட் கேர்ணல் பஸ்லி லாபீர் உட்பட 36 பேரை முதல் நாளே இழந்தது. அடுத்த நாள் பிரிகேடியர் பெர்னாண்டோ உட்பட பலர் படுகாய முற்றனர்.

இவ்வாறு நடு இடம் ஒன்றில் தரையிறக்கப்பட்ட மீட்பு அணி புலிகளால் தொடர்ந்து சுற்றி வளைக்கப்பட்டு தாக்கப்பட்டதால் பல இழப்புகளைச் சந்தித்து நிலை குலையும் நிலைமைக்குத் தள்ளப்பட்டது. அவ்வாறு சிதறும் நிலைக்குச் சென்ற போதும் அந்த மீட்பு அணி துணிகரமாகப் போர்புரிவதில் சளைக்க வில்லை. அடுத்து இறுதியாக அந்த மீட்பு அணி என்ன வாயிற்று? அது கூண்டோடு அழிந்ததா? அல்லது தொடர்ந்து தாக்குப் பிடித்து மேலதிக உதவிகளைப் பெற்று முல்லைத்தீவு முகாம் வரை முன்னேறியதா? பார்ப்போம்.

முல்லை முகாம் மீதான அதிரடித் தாக்குதல் தொடங்கிய 18ஆம் திகதியன்றே முகாமுக்குச் சில கிலோமீற்றர் தூரம் தள்ளி தரையிறக்கப்பட்ட 2 ஆவது விசேட படையணி பட்டாலியன் (2SF) அன்றும், அடுத்த நாளும் புலிகளின் கடும் தாக்குதல்களுக்கு இலக்காகி பெரும் சேதத்தை எதிர் கொண்டது என்பதை முன்னைய கட்டுரைத் தொடரில் பார்த்தோம்.

### ஹெலி மீது தாக்குதல்

அடுத்தநாள் 20ஆம் திகதி இந்த இரண்டாவது விசேட படையணி பட்டாலியன் துருப்புக்களுக்கு உதவுவதற்காக அவர்கள் நிலை கொண்டிருந்த பகுதியில் முதலாவது விசேட படையணி பட்டாலியனைச் (2SF) சேர்ந்த 250 கொமாண்டோக்களைத் தரையிறக்குவது என முடிவு செய்யப்பட்டது. ஆனால் அப்பகுதியில் எம்.ஐ 17 ரகத் துருப்புக்காவி ஹெலிக்கொப்டர்கள் தாழப்பறக்க முடியாத அளவுக்கு புலிகளின் எதிர்ப்பு தீவிரமாக இருந்ததால், இந்தக் கொமாண்டோக்கள் சற்றுத் தொலைவு தள்ளிக் கொண்டு போய் தரையிறக்கப்பட்டனர்.

எனினும் இவ்வாறு துருப்புக்களை இறக்க வந்த ஹெலிகொப்டர்களில் ஒன்று தரையிறங்க தாழப்பறந்த போது புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி ஹெலியின் எரிபொருள்குழாய் சேதமுற்றது. இதனை அடுத்து தொடர்ந்து சில நிமிட நேரமே பறக்கக்கூடிய நிலையில் இருந்த அந்தக் ஹெலியை அருகில் இருந்த புல்மோட்டை இராணுவ முகாமுக்குக் கொண்டுபோய் சாதுரியமாக இறக்கினார் விமானி.




இரண்டாவது அணியில் தரையிறக்கப்பட்ட (2SF) படையணியின் தளபதி லெப்டினன்ட் கேர்ணல் ராஜ்விஜேயசிறி அன்றைய தினமே சண்டையில் படுகாயமடைந்தார்.

### முல்லை முகாம் முற்றாக வீழ்ந்தது

இதற்கிடையில் அன்றைய தினம் பொழுது புலர்வதற்குச் சில மணி நேரத்துக்கு முன்னரே முல்லைத்தீவு முகாமில் எஞ்சியிருந்த பகுதிகளைத் தக்க வைத்துக் கொண்டிருந்த படையினர் மீது மிகப்பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தி முகாமை முழுக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார்கள் புலிகள்.

அதுவரை முகாமில் தப்பிப் பிழைத்திருந்த ஒரு சிறு எண்ணிக்கையான படையினர், கைகளில் ஏந்திச் செல்லக்கூடிய சிறிய தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலம் முகாமிலிருந்தபடி ஏனைய தளங்களுடன் அவ்வப்போது மேற்கொண்டு வந்த தொடர்பு 20ஆம் திகதி அதிகாலை புலிகள் நடத்திய பெரும் எடுப்பிலான தாக்குதலுடன் அற்றுப் போயிற்று.

ஆனால் தளத்தில் நடந்த இந்த தாக்குதல் குறித்து விபரம் தெரியாத படைத் தலைமைப் பீடம், முல்லைத்தீவு முகாமில் ஒரு சிறு தொகுதி படையினராவது எஞ்சியிருக்கக் கூடும் என்ற நப்பாசையில் விமானப்படை மூலம் முகாம் பகுதியில் ஆயுதங்கள், உணவுப்பொருள்கள், மருந்துகள் போன்றவற்றை வானத்திலிருந்து போட வைத்தது. முகாமைக் கைப்பற்றிய புலிகளுக்கு இப்பொருள்கள் போனஸ் ஆகின.

மீட்புப் படைஅணிகளை கடல் வழியாக முகாமின் கடற்கரையோரப் பகுதியில் தரையிறக்குவதற்கு அவசரகாலத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகள் பலனளிக்காது போகவே, அடுத்த தடவை சரியான திட்டம், முன் தயாரிப்பு வேலைகளுடன் மீண்டும் மீட்பு முயற்சியில் ஈடுபடுவது என்ற முடிவுடன் ஒரு நாள் முழுவதையும் தயாரிப்பு ஏற்பாடுகளுக்கு கடற்படை செலவிட்டது என்பது தெரிந்ததே.

20ஆம் திகதி தரையிறங்கு முயற்சி எதிலும் ஈடுபடாத கடற்படைத் துருப்புக்கள் அடுத்த நாள் புதிய திட்டத்துடன் களத்தில் குதித்தன.

19ஆம் திகதி கடல்வழியாகத் தரையிறங்க முயற்சித்த போது கிடைத்த அனுபவத்தைக் கொண்டு கடற்படையினர் இரண்டு பாடங்களைப் படித்திருந்தனர்.

1. மீட்புப் படை அணிகள் கடலிலிருந்து முல்லைத்தீவு முகாமை அண்டிய கடற்படைப் பகுதியை நோக்கி நகரும்போதே கடற்புலிகளினதும் கடற்கரும்புலிகளினதும் தாக்குதல் அநேகமாக முகாமை அண்டிய கடற்கரைப் பிரதேசத்திலேயே கடற்புலிகளின் படகுகள் கடற்படையை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன.

2. கடற்படையின் கப்பல்கள் பாதுகாப்புக் கருதி நெருக்கமாக நிற்பதால், அவை ஒன்றாகக் கூடி நிற்கும் ஒரு செறிவான பிரதேசம் குறித்து மட்டுமே கடற்புலிகள் அவதானமாக இருக்க வேண்டியவர்களாக உள்ளார்கள்.

இந்த இரண்டு விடயங்களினதும் அடிப்படையில் கடற்படையின் புதிய திட்டம் வகுக்கப்பட்டது.

அதன்படி —

1. மீட்புப் படை அணிகளை முல்லைத்தீவு முகாமிலிருந்து சில கிலோமீற்றர் தொலைவில் உள்ள கடற்கரையில் தரையிறக்க முயற்சி செய்வது.

2. கடலில் யுத்த அரங்கை அல்லது யுத்தப் பிரதேசத்தை அகட்டி, தன் கலங்களைத் தூரத்துக்கு ஒன்றாய் பிரித்து கடற்புலிகளின் தாக்குதல் படகுகளைத் தனித்தனியாகச் சண்டைக்கு இழுத்து, நீள இடை வெளிகளை ஏற்படுத்தி, அவற்றிற்கு ஊடாக கரையை நெருங்க முயற்சி செய்வது.

கடற்படைத் தாக்குதல் படகை குறிவைத்து கடற் கரும்புலிகளின் ஒரு படகு அல்லது இருபடகுகள் மட்டும் நெருங்கி விரைந்து வந்தால் அந்தக் கடற்படைப் படகு அவதானமாக இருந்து துரிதமாகச் செயற்பட்டு, அந்தக் கரும்புலிப் படகுகளை அழித்துவிட முடியும். ஆனால் ஒரே சமயத்தில் பல்வேறு கடற்கரும்புலிப் படகுகள் பலதிசைகளில் வந்தால் எதைக் கவனிப்பது? எதைத்தடுத்து நிறுத்துவது?

அதுவும் கடற்படைத் தாக்குதல் படகுகள் பல ஒன்றுகூடி ஒரு செறிவான பிரதேசத்தில் நிலை கொண்டிருக்கும் போது, பல நூற்றுக்கணக்கான கடற்கரும்புலிப் படகுகள் அவற்றைக் குறிவைத்து வந்தால் என்ன செய்ய முடியும்?

எனவே கடற்படை தனது யுக்தியையும், தந்திரோபாயத்தையும் மாற்றிக் கொண்டது.

### கடற்படையினரின் முயற்சி வெற்றி

கடற்படைத் தாக்குதல் படகுகள் பல நீள மைல் தூரத்துக்கு தனித்தனியாகப் பிரிந்து கரையை நோக்கி நகர ஆரம்பித்தன.

கடற்புலிகள் கடுமையாக எதிர்த்துச் சமரிட்ட போதிலும் கடற்படையின் தந்திரோபாயம் ஓரளவு வெற்றி பெற்றது.

முல்லைத்தீவு முகாம் பகுதியிலிருந்து ஐந்து கிலோமீற்றர் தொலைவில் உள்ள கடற்கரைப் பிரதேசத்தில் கடற்படையின் முதலாவது அணி 21ஆம் திகதி தரையிறங்கியது.

ஆனாலும் படைகள் தரையிறங்கிக் கொண்டிருந்த சமயமும், தரையிறங்கிய பின்னரும் புலிகளின் கடும் தாக்குதலுக்கு அவை இலக்காகின.

அச்சமயம் கடும் மோட்டார் தாக்குதல்களைப் புலிகள் நடத்தினர்.

துருப்புக்களை இறக்கிக் கொண்டிருந்த தரையிறக்கு கலத்தின் வெளித் தடுப்புக் கம்பி வலையில் புலிகளின் மோட்டார் ஒன்று விழுந்து வெடித்தது. மற்றையது கலத்தின் தரையிறங்குதளத்தில் விழுந்து சிதறியது. அச்சமயம் கலத்திலிருந்து தரையிறங்கிக் கொண்டிருந்த படையினரில் எண்ணிக்கை குறிப்பிட முடியாதளவு படையினர் உயிரிழந்ததாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் 21ஆம் திகதியன்று —

அலம்பில் பகுதியில் மீட்பு நடவடிக்கைகளுக்குத் தரையிறக்கப்பட்ட 1SF, 2SF படையணி கொமாண்டோக்களை புலிகளின் சுற்றிவளைப்பை வியூகத்தை உடைத்துக் கொண்டு அவர்கள் நிலை கொண்டிருக்கும் பிரதேசத்திலிருந்து வெளியேறும்படி படைத் தலைமைப்பீடம் கட்டளை பிறப்பித்தது.

முல்லைத்தீவுக்கு ஐந்து கிலோமீற்றர் தெற்குக்கடற்கரையில் ஒரு படை அணி வெற்றிகரமாகத் தரையிறக்கப்பட்ட செய்தியும் அலம்பிலில் சிக்குண்டிருந்த மீட்பு அணிக் கொமாண்டோக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் சுற்றிவளைப்பை உடைத்து, கடற்கரையில் தரையிறங்கிய அணியுடன் இணைந்து கொள்வது அதிகபாதுகாப்பானது என்ற ஆலோசனையும் மீட்பு அணி கொமாண்டோக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

மீட்பு அணி கொமாண்டோக்கள் புலிகளின் சுற்றிவளைப்பு வியூகத்தை உடைத்தார்களா? கடற்கரையில் தரையிறங்கிய அணியுடன் இணைந்தார்களா? படையினர் எங்கு தரையிறக்கப்பட்டனர், தலைமைப்பீடத்தின் கட்டளையை அவர்கள் நிறைவேற்றினார்களா? போன்ற விவரங்களை கட்டுரைத் தொடரின் அடுத்த அத்தியாயத்தில் பார்போம்.

(தொடரும்)

# கண்ணகி சிலை மீது கைவைப்பதா? அரசை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

கண்ணகிக்கு மதிப்புத் தந்து அவளைப் பத்தினித் தெய்வமாகப் போற்றி வணங்குகிறார்கள். தமிழக மக்கள். கோயில்களில் கண்ணகிக்கு விக்கிரகம் வைத்து வணங்கும் வழக்கம் இல்லை. ஆயினும் நகரங்கள் தோறும் கண்ணகிக்குச் சிலை எடுத்து அந்த வீரத்தாயை ஏற்றிப் போற்றுவதற்கு தமிழக மக்கள் தயங்குவதில்லை.

இத்தகையதொரு சூழ்நிலையில் தான் தமிழக அரசு ஒரு புகழ் பூத்த கண்ணகி சிலையை தூக்கி வீசியிருக்கிறது. அதனால் தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது.

சென்னைக்கு விஜயம் செய்பவர்கள் மெரினா கடற்கரைக்குச் செல்லத் தவறமாட்டார்கள். அந்தக்கடற்கரையில் இருந்த கண்ணகி சிலைக்கு அனைவரும் மதிப்பத் தருவார்கள். கையில் காற்சிலம்புடன் கோபா வேஷத்துடன் கண்ணகி காட்சிதருவாள்.

பாண்டிய மன்னன் நீதி தவறி தனது நாயகன் கோவலனைக் கொன்றதற்காக மதுரையையே எரித்தவள் கண்ணகி.. மதுரையில் வாழும் மக்களுக்கு இன்றும் கண்ணகி என்றால் கலக்கம் தான்.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் தமிழக மக்களில் ஒரு பிரிவினர் ஜெயலலிதாவை ஒரு புரட்சித் தலைவியாகவே கருதுகிறார்கள். ஜெயலலிதா நீதிமன்றத் தண்டனைகளிலிருந்து விடுவிக்கப்பட்டதால் அவரை மீண்டும் தமிழக முதலமைச்சராக்கிவிட மக்கள் துடிக்கிறார்கள்.

இத்தகைய சூழ்நிலையில்தான் சென்னையிலிருந்த கண்ணகி சிலையை தமிழக ஆட்சியாளர்கள் அப்புறப்படுத்தியிருக்கிறார்கள்.

பாண்டிய மன்னனுக்கு சாபம் கொடுக்கும் தோற்றத்தில் கண்களில் தீப்பொறி பறக்கும் அபிநயத்தில் கண்ணகி சிலை வடிக்கப்பட்டிருக்கின்றது. ஜெயலலிதாவுக்கு ஏற்பட்ட இன்னல்களுக்கு இந்தக் கண்ணகி சிலையின் தோற்றமும் ஒரு காரணம் என்று ஜெயலலிதாவின் சோதிடர்கள் கருதியிருக்கக்கூடும்..

கண்ணகி சிலை அகற்றப்பட்டதற்கு தமிழறிஞர்கள். எழுத்தாளர்கள். கவிஞர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

1968 ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா தமிழக முதல்வராக இருந்தபோது இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டையொட்டி. சென்னை கடற்கரையில் கண்ணகி சிலை உள்ளிட்ட பத்துச் சிலைகள் நிறுவப்பட்டன.

சிலைகள் வெறும் கற்கள் அல்ல. அவை ஓர் இனத்தின் வரலாற்றுக்கும். பண்பாட்டுக்கும் அடையாளங்களாக நிற்பவை. அத்தகு அடையாளசின்னங்களில் ஒன்றாகிய கண்ணகி சிலை, தமிழக அரசால் திடீரென்று எவ்வித நியாயமான காரணமுமின்றி அகற்றப்பட்டுள்ளது. சோதிடத்தின் அடிப்படையில் அச்சிலை



கண்ணகி சிலை இருந்த இடத்தில் புதிதாகத் தார் வீதி

அகற்றப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

காரணம் எதுவாயினும். தமிழக அரசின் இச்செயல் வன்மையான கண்டனத்திற்கு உரியது. தமிழர்களின் மான உணர்வை இச்செயல் இழிவுபடுத்துகிறது. கண்ணகியின் சிலை மீண்டும் அதே இடத்தில் உடனடியாக நிறுவப்பட வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

''மெரீனாவில் இருந்த கண்ணகி சிலை அகற்றப்பட்டதில் வாஸ்து, ஜோசியம் எதுவும் கிடையாது. பீடம் சேதம் அடைந்ததால், பாதுகாப்பு கருதி சிலை அகற்றப்பட்டது. போக்குவரத்து வசதிக்காக பொலீஸார் கேட்டதால், அந்த இடத்தில் வீதி நிறுவப்பட்டது. இப்போது சிலையை வேறு எந்த இடத்தில் வைப்பது என்பதை அரசு ஆய்வு செய்து முடிவெடுக்கும்'' என்று தமிழக முதல்வர் பன்னீர்ச்செல்வம் கூறினார்.

மெரீனா கடற்கரையில் கண்ணகி சிலையில் சில தினங்களுக்கு முன் ஒரு லொறி மோதியதில், அதன் பீடம் சேதமடைந்தது. பீடம் பலம் இல்லாமல் போனதால், சிலை அங்கிருப்பது பாதுகாப்பானது அல்ல என்று பொதுப்பணித்துறை கருத்துச் சொன்னதால் அகற்றப்பட்டது.

மீண்டும் சிலையை வேறு எந்த இடத்தில் வைப்பது என்பது பற்றி அரசு ஆய்வு செய்து முடிவெடுக்கும் அதே இடத்தில் சிலையை வைக்காவிட்டால் போராட்டம் நடத்துவோம் என்று தி.மு.க வினர் அறிவித்துள்ளனர். தி.மு.க., போராட்டத்தை அரசு தக்க முறையில் சந்திக்கும். கண்ணகி சிலைக்காக அறிக்கை விடும் கருணாநிதி, டில்லியில் பெரியார் மையம் இடிக்கப்பட்டதற்கு குரல் எழுப்பாமல் இருந்தார்'' இவ்வாறு கூறியிருந்தார் பன்னீர்ச் செல்வம்.

கண்ணகி சிலை அகற்றப்பட்டதுதொடர்பாக தமிழக அரசு அறிக்கை வெளியிட்டது. கண்ணகி சிலை மீது லொறி மோதியதைத் தொடர்ந்து பொதுப்பணித்துறையினரால் சிலையின் பீடம் பரிசோதிக்கப்பட்டது. 10 அடி உயரமுள்ள சிலையைத் தாங்கும் சக்தி சேதம் அடைந்த பீடத்திற்கு இல்லை.

மேலும், திருவல்லிக்கேணி பாரதிசாலையில் இருந்து கடற்கரை சாலைக்கு வரும் வாகனங்களினால், இந்தச் சிலையைச் சுற்றி இரவு நேரங்களில் படுத்து உறங்கும் ஏழை,எளியவர்களுக்கும் ஆபத்து உண்டு. எனவே வேறு பாதுகாப்பான இடத்திற்கு இந்தச் சிலையை மாற்றியமைக்கலாம் என்று சென்னை பொலீஸார் கருத்துத் தெரிவித்தனர்.

இதன் காரணமாக, கண்ணகி சிலையை அங்கிருந்து அகற்றி இது தொடர்பாக மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும் வரையில் பாதுகாப்பாக அருங்காட்சியகத்தில் வைத்திருக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இவ்வாறு தமிழக அரசு தெரிவித்தது.

ஆனால் திட்டம் போட்டு கண்ணகி சிலையை பெயர்த்து எடுத்திருக்கிறார்கள். இது உலகத் தமிழர்களுக்கு ஏற்பட்ட அவமதிப்பு என்று டாக்டர் ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

திடீரென்று ஒரு நாள் இரவில் ஆள் உயர தடுப்புச் சுவரையும், இரண்டடி உயரமான நடைபாதையையும் தாண்டிச் சென்ற லொறி சிலையின் பீடத்தை மோதி தகர்த்து விட்டது என்றார்கள். பின்னர் யாருக்கும் தெரியாமல் இரவோடு இரவாக சிலையை அகற்றினார்கள். சிலை இருந்த இடத்தை தகர்த்துவிட்டு புதியதாக தார் சாலை போட்டிருக்கிறார்கள் இவற்றைப் பார்க்கையில் நடந்தது வெறும் விபத்து அல்ல; கண்ணகி சிலையை இருந்த இடத்திலிருந்து அகற்றி விட வேண்டும் என்று திட்டம் போட்டு நிறைவேற்றப்பட்டு இருக்கிறது என்பதை புலப்படுத்துகின்றன.

என்ன காரணத்திற்காக சிலையை அகற்றியிருந்தாலும், உலகத் தமிழர்கள் பொங்கி எழுவதற்கு முன்பு கண்ணகி சிலையை மீண்டும் மெரீனா கடற்கரையில் உடனடியாக நிறுவ வேண்டும். இல்லையேல் கண்ணகியை தெய்வமாக வழிபடுகிறவர்கள் குறிப்பாக ஆண்டிபட்டி, தேனி, கம்பம் பகுதி மக்கள் நிச்சயம் இதை மறக்க மாட்டார்கள், மன்னிக்கவும்மாட்டாாகள். இவ்வாறு ராமதாஸ் கூறியிருக்கின்றார்.

''கண்ணகி சிலையை அகற்றி இருப்பது தமிழ்ப் பண்பாட்டுக்கு விடப்பட்ட அறைகூவல். இது காட்டுமிராண்டிச் செயல். சிலை வைத்த அண்ணாவை அவமானப்படுத்தி விட்டனர். உலகப் பெண்ணினத்திற்கே களங்கம் இழைத்திருக்கிறார்கள். மீண்டும் அதே இடத்தில் கண்ணகி சிலையை வைக்க வேண்டும். இல்லாவிட்டால் தமிழினமே கொதித்தெழுந்து போராடும் என்று எசசரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சென்னை கடற்கரைசாலையில் இருந்த கண்ணகி சிலையை ஜெயலலிதாவின் நன்மைக்காக வாஸ்து நிபுணர் கூறியபடி. அரசு திடீரென்று அகற்றிவிட்டு அந்த இடத்தில் இரவோடு இரவாக தார்வீதி போட்டுவிட்டது.

அரசின் இந்த செயல் தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. வாஸ்து நிபுணர் கூறியதால் சிலையை அகற்றுவதா என்று கடும் கண்டனம் எழுந்தது. அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் கண்டனம் தெரிவித்தார்கள்.

கண்ணகி சிலையை மீண்டும் அதே இடத்தில் வைக்கக் கோரி தி.மு.க.சார்பில் மாபெரும் போராட்டம் நடத்தப்படும் என்று கருணாநிதி அறிவித்தார்.

திராவிடர் கழக பொதுச் செயலாளர் கி.வீரமணி முதல்மந்திரி பன்னீர்ச் செல்வத்தை சந்தித்துப் பேசினார். மந்திரி பொன்னையனும் உடன் இருந்தார். கண்ணகி சிலை விவகாரத்தில் அரசு அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும். தி.மு.க. மற்றும் எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு பற்றியும் வாஸ்து என்று கூறுவதற்கு பதில் தருவது பற்றியும் அப்போது அவர்கள் ஆலோசனை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

கண்ணகி சிலையை அகற்றிய விடயததில் யாரும் அதனை அரசியல் பிரச்சினையாக்கக் கூடாது. புதுவையில் பெரியார் சிலையை இடித்தபோது அதை நாங்கள் பிரச்சினையாக்கவில்லை'' என்று வீரமணி தெரிவித்தார்.

ஏதோ கோளாறுகள் நடந்து கண்ணகி சிலை அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஜெயலலிதா ஒரு இடைத்தேர்தலில் போட்டியிட்டு தமிழக சட்டசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்படும் நாளுக்காகக் காத்திருக்கிறார். இத்தகையதொரு கட்டத்தில் கண்ணகி சிலையைத் தூக்கி வீசியது புத்திசாதுரியமான செயல் அல்ல.

மதுரையில் ஆண்டிப்பட்டித் தொகுதியில் போட்டியிட ஜெயலலிதா தீர்மானித்திருக்கின்றார். கண்ணகி சிலை மீது அவர் கைவைத்திருக்கும் இவ்வேளையில் ஆண்டிப்பட்டி தொகுதி மக்கள் என்ன தீர்ப்பு வழங்குவார்களோ தெரியாது.

கண்ணகிக்குச் சிலை எடுத்தவர் திராவிடர் இயக்கத்தின் தானைத் தளபதியான பேரறிஞர் அண்ணா. ஆனால் அந்தச் சிலையை வாஸ்து சாஸ்திரம் பார்த்து நாடாளும் திராவிடர் கழகமே மூலையில் தூக்கி வீசியிருக்கிறது.

ஜெயலலிதா நடிகையாக இருந்தபோது கண்ணகி நடனத்தை மேடையேற்றி வரலாறு படைத்தவர். அவருக்கு கண்ணகி மீது இன்று வெறுப்பு வந்தது அதிசயம்தான்.

தமிழகத்தில் தி.மு.க. தலைமையில் எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து போராட்டம் நடத்தினால் அதன் விளைவுகள் மோசமாகவே இருக்கும்.

— கதாசி



திருடாதே..... பாப்பா...
திருடாதே......
திருடராய்ப் பார்த்து
திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க
முடியாது....!!



''சண்டையில் என் மனைவி ஜெயித்தால் தான் எனக்கு நிம்மதி''

''ஏன்..?''

''அவள் தோத்துவிட்டால் அரை மணிநேரம் கழித்து மறுபடியும் சண்டைக்கு இழுப்பாள்..''

# சஞ்சீவனுக்கு நடந்த கதியா நிந்தவூர் இளைஞர்களுக்கும்

## முஸ்லிம் மக்கள் திரண்டு நடத்திய போராட்டம்

படுகொலைகளைப்புரிந்து விட்டு விடுதலைப் புலிகளின் தலையில் போட்டுவிடும் போக்கு வடக்குக் கிழக்கில் கடந்த பல வருடங்களாக நிகழும் சம்பவங்கள் தான். தமிழ் மக்களுக்கு இது புதிய விடயம் அல்ல.

காரைதீவில் முகாமிட்டிருக்கும் விசேட அதிரடிப் படையினர் நிந்தவூரைச் சேர்ந்த சகோதரர்களான பிச்சை முகம்மது நசீர் (35 வயது) பிச்சைமுகம்மது ஸன் (30 வயது) ஆகிய இருவரையும் 15 ஆம் திகதி சனிக் கிழமை கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்றனர்.

மறுநாள் ஞாயிறு மாலை இவர்கள் இருவரது சடலங்களையும் சம்மாந்துறை மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். கொல்லப்பட்ட இருவரும் குடும்பஸ்தர்கள்.

இவர்கள் புலி உறுப்பினர்கள் என்றும் மேலதிக விசாரணைக்காக அம்பாறை நாசகார தடுப்புப் பொலிஸ் பிரிவில் ஒப்படைப்பதற்காக இவர்களை ஜீப்பில் ஏற்றி அம்பாறைக்கு கொண்டு சென்ற சமயம் சம்மாந்துறைக் கும் வீரமுனைக்கும் இடையில் உள்ள ஆண்டிரச்சந்தியில் வைத்து புலிகள் தாக்கினர் என்றும் இதன் போது புலிக ளின் துப்பாக்கி வேட்டுக்கு இவர்கள் இருவரும் பலியா கினர் என்றும் அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

### சோடிக்கப்பட்ட கட்டுக் கதை

மூடப்பட்ட ஜீப்பில் விசேட அதிரடிப்படையினர் பலரின் பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்ட போது விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவருக்கு கூட காயம் ஏற்படாது இந்த இளைஞர்களை மட்டும் புலிகளின் குண்டு தேடிவந்து துளைத்துக் கொன்றது எப்படி?

அப்படி ஒரு சக்தி புலிகளின் குண்டுகளுக்கு இருக்கின்றனவா? புலிகளின் தாக்குதல் இடம் பெற்றிருந்தால் ஜீப்புக்கு ஒரு சிறு சேதம் கூட ஏற்படாது அதன் உள்ளே இருந்த இளைஞர்களின் தலையையும் நெஞ்சையும் புலிகளின் குண்டுகள் எப்படி தேடிவந்து துளைத்தன?

இந்தக் கேள்விகளுக்கு விசேட அதிரடிப்படையின ரால் விடை கூற முடியாது. இந்தக் கேள்விகளுக்கு விடைதேடினால் சம்பவத்தின் உண்மையை அறிவது கஷ்டமான காரியமல்ல. தாக்குதல் நடைபெற்றதாக கூறப்படும் ஆண்டிரச்சந்தியில் அன்றைய தினம் விடுதலைப்புலிகள் எந்த தாக்குதலையும் நடத்தவில்லை என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

விடுதலைப்புலிகள் தாக்கினர் என விசேட அதிரடிப்படையினர் கூறுவது சோடிக்கப்பட்ட கட்டுக்கதை என்றும், படையினரே இவர்களை சுட்டுக்கொன்றனர் என்றும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இது விசேட அதிரடிப்படையினரின் திட்டமிட்ட படுகொலை என அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மாயில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்திய போது ஜீப்புக்கு அல்லது அதில் சென்ற விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவருக்குக்கூட காயம் ஏற்படாது கைவிலங்குடன் ஜீப்புக்குள் இருந்த இளைஞர்களுக்கு மட்டும் எப்படி குண்டுபாய்ந்தது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

சம்பவத்தை கேள்வியுற்ற முஸ்லிம் மக்கள் ஆயிரக்கணக்கில் திங்கள் காலை சடலங்கள் வைக்கப்பட்டிருந்த சம்மாந்துறை வைத்தியசாலையில் கூடினர். ''இளைஞர்களை புலிகள் கொல்லவில்லை. விசேட அதிரடிப்படையினரே திட்டமிட்டுக் கொன்றனர்'' எனக்கூறி இவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கல்முனை மாவட்ட நீதிபதி கே.கணபதிப்பிள்ளை சம்மாந்துறை மாவட்ட வைத்தியசாலைக்கு வந்து மரணவிசாரனை நடத்தினார். அப்பொழுது வெளியே திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் மீது விசேட அதிரடிப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்த துடன் இரும்புக் கம்பிகளாலும், பொல்லுகளாலும் தாக்கத்தொடங்கினர்.

சம்மாந்துறை வைத்தியசாலையில் பிரேதபரிசோதனை நடத்தக்கூடிய சட்டவைத்திய அதிகாரி இல்லாததால் கல்முனை வைத்தியசாலைக்கு சடலங்களை எடுத்துச்செல்வதற்கு பொலிஸார் முற்பட்டபோது அந்த வாகனத்தை பொதுமக்கள் தடுத்து மறியல் போராட்டம் நடத்தினர்.

இவர்கள் மீதும் அதிரடிப்படையினர் தாக்குதல் நடத்தினர். மக்கள் சிதறி ஓடிய இடங்களை நோக்கி படையினர் வேட்டுக்களைத் தீர்த்தனர். சுமார் ஒருமணிநேரம் தாக்குதல்கள் தொடர்ந்தன. இச்சம்பவத்தில் 11 பொதுமக்கள் காயமடைந்தனர் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள் , சைக்கிள்கள் சேதமடைந்தன.

### ஆர்ப்பாட்டமும் ஹர்த்தாலும்

இச்சம்பவத்தை அடுத்து புதன்கிழமை நிந்தவூர், சம்மாந்துறை , கல்முனை பகுதிகளில் பொது மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்னர். வர்த்தக நிலயங்களை மூடி ஹர்த்தால் அனுஷ்டித்தனர். வீதிகளில் ரயர்களைப் போட்டு எரித்து படையினருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். காரைதீவு உட்பட அம்பாறை மாவட்டத்தில் தமிழ் முஸ்லிம் கிராமங்களில் உள்ள விசேட அதிரடிப்படை முகாம்களை உடனடியாக மூடிவிட வேண்டும். என ஆர்பாட்டக்காரர்கள் கோரிவருகின்றனர்.

இதே போன்ற சம்வம் ஒன்று 1998 ஆம் ஆண்டிலும் வீரமுனையில் இதே இடத்தில் நடைபெற்றது. பாண்டிருப்பைச் சேர்ந்த சதாசிவம் சஞ்சீவன் என்ற உயர்தர வகுப்பு மாணவனை கல்முனை பொலிஸார் கைது செய்து 23.7.1998 அன்று அம்பாறைக்கு கொண்டு சென்றனர். வழியில் வீரமுனையில் புலிகளுடன் நடந்த மோதலில் இவர் இறந்துபோனார் என்று கூறி சடலத்தை அம்பாறை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இதிலும் ஜீப்புக்கோ பொலிஸாருக்கோ எந்தச் சேதமும் ஏற்படவில்லை. சஞ்சீவனை மட்டும் புலிகளின் குண்டு தாக்கி அவர் பலியானார் என பொலிஸார் விசித்திரமான அறிக்கையை சமர்ப்பித்தனர். இவர் புலி உறுப்பினர் என பெற்றோர் கையொப்பம் இட்டே சடலத்தை பெறவேண்டும் என பொலிஸார் உத்தரவு பிறப்பித்திருந்தனர்.

அதன் பின்னர் கல்முனை மனித உரிமை ஆணைக்குழு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் இம்மரணத் தில் சந்தேகம் இருப்பதாகவும் மீண்டும் மரணவிசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் கோரியது.

இதனையடுத்து நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் சடலம் மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டு பிரேத பரிசோதனை நடத்தப் பட்டது. பிரேத பரிசோதனை நடத்திய மாவட்ட சட்டவைத்திய அதிகாரி டாக்டர் சந்திரபாலன் சமர்ப்பித்த அறிக்கையில் இறநத சஞ்சீவன் மீது மிக அருகில் இருந்தே துபபாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டிருப்பதாகவும் இறப்பதற்கு முதல் அவர் கடுமையான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டிருந்தார் என்றும் தெரிவித்திருந்தார். சஞ்சீவனின் நாக்கு வெட்டப்பட்டிருந்ததாகவும் அடிகாயங்கள் காணப்பட்டன என்றும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

இந்த மாணவனின் மரணவிசாரணை மற்றும் நீதிமன்ற விசாரனைகளிலும் இரசாயன பகுப்பாய்வு மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கையிலும் பொலிஸாரே சுட்டனர் என்று நிரூபிக்கப்பட்டதையடுத்து கொலை என தீர்ப்பளித்த மாவட்ட நீதிபதி அன்ரன் பாலசிங்கம் இக்கொலைக்கு பொலிஸாரே காரணம் என்றும் கூறினார்.

இந்த தீர்ப்பு இரு வருடங்களுக்கு முதல் வழங்கப்பட்டது. மரணவிசாரணையை நடத்தி தீர்ப்பை வழங்கிய நீதிபதி இத்துடன் தனது முதற்கட்ட பணி முடிந்து விட்டதாகவும் இனி பொலிஸார் சந்தேக நபர்களை கைது செய்து குற்றப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வழக்கைத்தொடர வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்.

சந்தேக நபர்களைச் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துமாறு கல்முனை மாவட்ட நீதிபதி கடந்த இரு வருடங்களுக்கு முதல் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்ட போதிலும் இது வரை சம்பந்தப்பட்ட கல்முனைப் பொலிஸார் மீது உரிய சட்டநடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. அவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்படவும் இல்லை.

சம்பவத்தில் தொடர்புடையவர்கள் என கருதப்படும் கல்முனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட ஏனையோர் இடமாற்றம் பெற்று சென்று விட்டனர் என்றும் சிலர் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்று விட்டனர் என்றும் தான் அறிவதாகவும் கல்முனை மனித உரிமைகள் சட்டத்தரணி பேரின்பராசா தெரிவித்தார்.

சஞ்சீவன் படுகொலை விடயத்தில் நீதிமன்ற உத்த ரவைக்கூட அமுல்படுத்துவதில் பொலிஸ் திணைக்களம் திட்டமிட்டரீதியில் அசமந்த போக்கை காட்டிவருகிறது.

மூன்று வருடங்களுக்கு முன் சஞ்சீவனுக்கு நடந்தகதியே இன்று நிந்தவூர் இளைஞர்களுக்கும் நடைபெற்றிருக்கிறது. சஞ்சீவனின் படுகொலை நடந்த போது தமிழ் அரசியல்வாதிகளும் பொதுமக்களும் மௌனமாக இருந்தார்கள். நீதி கேட்டு போராடவில்லை. இன்று மக்கள் திரண்ட போது அவர்களுடன் அரசியல் தலைவர்களும் கைகோத்து நின்று போராடுகிறார்கள்.

முஸ்லிம் மக்கள் மத்தியில் உள்ள ஒற்றுமையும் விழிப்புணர்வும் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படாதவரை தமிழ் அரசியல்வாதிகளின் சுயநலப்போக்குகள் நீங்காதவை. பல சஞ்சீவன்களை இழக்க வேண்டித்தான் இருக்கும்.

இரா.துரைரத்தினம்.

## பித்தன் பதில்கள்



சுகந்தி, வெள்ளவத்தை.
கே : சில கொம்பியூட்டர் சென்ரர்களில் ஆண்கள் ''மௌஸ்'' பிடித்துப் பழக அதிக நாட்கள் எடுப்பதேன்?
ப : *கற்றுக் கொடுப்பவர் கன்னியோ, கரமும் கரமும் பின்னியோ, உரசிக் கொள்ள வாய்ப்புக் கிடைத்தால், ஆண்கள் பாசாவதை விட பெயிலாகவே விரும்புவார்கள்.*

முஹமட் சாபீர், கொம்பனித்தெரு.
கே : ஒசாமா பின்லேடனின் எதிர்காலம் எப்படி இருக்கும்?
ப : *எந்த நேரத்திலும் துப்பாக்கி ரவைகள் அவரை முத்தமிடலாம். எதற்கும் தயாராக அவர் காத்திருக்கிறார்.*

ஜெயந்தி, வவுனியா.
கே : என் காதலன் அவசரக்காரராக இருக்கிறார். இடம் கொடுக்கலாமா?
ப : *ஆராரோ பாடுவது நீங்கள் மட்டும் தானே.*

றிஸ்வான், ஒத்தாச்சிமடம்.
கே : திருமணத்துக்குப் பின்னர் நடிகைகள் கணவர் சம்மதித்தால் நடிப்பேன் என்ற டயலக்கைப் பேசுகிறார்களே! சம்மதிக்காவிட்டால்?
ப : *''டேக்கிற் ஈசி'' என்று டைவோஸ் பண்ணுவார்கள்.*

முரளி, மட்டக்களப்பு.
கே : லைலாவை திருமணம் செய்ய கனவு கண்டேன் நிறைவேற்றி வைப்பியா பித்தா?
ப : *உங்கள் கனவுகளை நனவாக்குவோம் என்று வாக்குறுதி அளித்த அரசியல்வாதிகளைக் கேளுங்கள்.*

பிரஷாத், முல்லைத்தீவு.
கே : எங்களூர் திருவிழாவில் ஆட ஜோதிகா வருவாரா?
ப : *திருவிழாவில் சாமியைப் பார்க்க ஆள் இருக்குமா?*

சாந்தி, வாழைச் சேனை.
கே : பித்தா உமக்கு வயது 90 என்று கேள்விப்பட்டேன் உண்மையா?
ப : *இல்லை. 100. தும்மும் போது அடிக்கடி மனைவி சொல்லுவா.*

மோகன், மல்லாவி.
கே : ஜெயலலிதாவின் வழக்குகள் எல்லாம் தள்ளுபடியாகி தப்பிவிட்டாரே
ப : *வலையில் ஓட்டைகள் இருக்கும் வரை மீன் தப்புவது தவிர்க்க முடியாதது தானே.*



ரமேஸ், பம்பலப்பிட்டி
கே : சில பெண்கள் பகலிலும் இரவு உடையுடன் சுற்றுகிறார்களே?
ப : *அது கூட இல்லாமல் சுற்ற முடியாதே!*



சங்கர், வெள்ளவத்தை.
கே : காதலிக்கு ரோஜாப்பூ கொடுக்கலாமா?
ப : *வாங்கிக் கொடும். மனைவியான பின் வாங்கிக் கொடுக்கவா போகிறீர்.*

ப. செந்தூரன், கொடிகாமம்.
கே : யாழ் தேர்தல் முடிவுகள் என்ன சொல்கின்றன?
ப : *ஏமாளிகள் நாங்களல்லர் என்பதை.*

மே. காந்தன், நல்லூர்.
கே : சந்திரிகாவின் தோல்வி, ரணிலின் வெற்றி மக்கள் கருத்து என்ன சொல்கின்றது.
ப : *நாங்கள் நாடுவது சந்திரிகாவையோ ரணிலையோ அல்ல. தீர்க்கப்பட வேண்டிய நாட்டுப் பிரச்சினையையே என்பதைத்தான்.*

கே. திரேசா, பதுளை.
கே : மற்றவர்களிடம் தட்டிப் பறித்து பொருள் பண்டம் சேர்ப்பவர்கள் குறித்து.
ப : *வெறுமனே வந்தாய். வெறுமனே செல்வாய் இடையில் மானிடா உனக்கேன் ஆசை.*

விக்ரர், மன்னார்.
கே : புதிய பிரதமர் பிரச்சினையை தீர்ப்பாரா?
ப : *தீ... பார்ப்பாரா அல்லது தீர்ப்பாரா என்று வாய்ச் சொல்லை வைத்து கூறமுடியாது. செயலில் இறங்கட்டும் பார்ப்போம்.*

எம். ஆர்.குமார், மட்டக்களப்பு.
கே : புதிய இசையமைப்பாளர்கள் உருவாக்கிய புதிய பாடல்கள் பற்றி?
ப : *இரைச்சலான இன்பம்.*

ஜெகன், புதுக்குடியிருப்பு.
கே : பித்தனே...! மின்வெட்டு மீண்டும் அமுலுக்கு வந்திருக்கிறதே...!
ப : *மின்வெட்டிலும் அரசியல் புகுந்து விட்ட தாக்கும். அம்மா அரசு தேர்தலைக் கருத்தில் கொண்டு மின் வெட்டை நீக்கி விட்டது. அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வும் தாராளமாக வழங்கியது. இப்படி ஏராளமான சலுகைகள். இனி என்ன? ஐயா பாடு திண்டாட்டம் தான்.*

யோகேஸ், கண்டி.
கே : பித்தனே நத்தார் பரிசாக யுத்த நிறுத்தமாமே...!
ப : *கடந்த ஆண்டு நத்தார் பரிசு புலிகள் தந்தது. இந்த ஆண்டு கூட்டாகக் கிடைக்கப் போகிறது.*


சுந்தரம், சாவகச்சேரி.
கே : பணக்காரக் கிழவர்கள் இளம் பெண்களை மணப்பது சரியா?
ப : *பணத்தைக் கொடுத்து இளமையை வாங்குகிறார் கிழவர். இளமையைக் கொடுத்து பணத்தை வாங்கிறாள் குமரி.*



# விமானப்படை வீரர்கள் அணிவகுப்புக்குத் தயார்



இந்தோனேசியாவின் விமானப்படை விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. அண்மையில் ஒரே நாளில் 800 விமானப்படை கடேற் வீரர்கள் பதவியேற்றுக் கொண்டார்கள். பதவிப் பிரமாணம் செய்து கொண்ட விமானப்படை வீரர்கள் அணி வகுப்புக்குத் தயாராகும் காட்சி.



# வெளவால் மனிதனை காண்பதற்கு ஆசை

டெலிவிஷனில் வரும் "பேட் மேன்" எனப்படும் வெளவால் மனிதனைக் காண்பதென்றால் சிறுவர்களுக்கு நன்றாகப் பிடிக்கும். மேற்கிந்தியச் சிறுவர்கள் இருவர் பரஸ்பரம் தங்களுடைய முகங்களில் வெளவால் மனிதனை ஓவியமாகத் தீட்டி மகிழும் காட்சி.

# மெழுகு பொம்மைகள் தயாராகும் வேகம்!



பிரிட்டனிலுள்ள டுஷோட் சிமாட்டி மெழுகுப் பொம்மைக் காட்சியறையில் உலகப் பிரமுகர்களின் உருவச்சிலைகள் இருக்கின்றன. இந்த மெழுகுப் பொம்மைகள் வேகமான முறையில் உருவாக்கப்படுவது வழக்கம். விண்வெளி ஆராய்ச்சி நிபுணர் ஸ்டீபன் ஹங்கிங்கின் உருவச்சிலையை வடிப்பதற்காக ஸ்டீபனின் முகத்தை சிற்பி ஸ்டுவர்ட் வில்லியம் சன் உருவமைக்கும் காட்சி.



# காற்றாலைகள் சுற்றினால் சுற்றாடல் தூய்மை பெறும்

எரி பொருள் விலை அதிகரித்திருக்கும் இவ்வேளையில் காற்றாலைகள் மூலம் மின்சக்தியை உற்பத்தி செய்வது மலிவான உத்தியாக இருக்கிறது. அதே நேரத்தில் சுற்றாடல் அசுத்தம் அடைவதும் தடுக்கப்படுகிறது. மேல் நாடுகளில் திறந்த வெளிகளில் வீசும் காற்று ஆயிரக் கணக்கான காற்றாலைகளை இயக்குகிறது. இதனால் விலை மதிக்க முடியாத மின்வலுவை மக்கள் பெற்றுக் கொள்கிறார்கள்.

# ஒளிந்திருக்கும் முகம் எது?




டிசம்பர் 09, சுடர்ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை திவ்யா உன்னியுடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

1. த. விஜயகுமார், கம்பளை.
2. செ. மல்லிகா, வவுனியா.
3. எம்.சி. அஹமது, மட்டக்களப்பு.

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (16.12.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகர் யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? இசை உலகில் தேவகானம் இசைக்கும் இசையமைப்பாளர். அவரும் கோமாளிப் பாடல்களைப் பாடுவார்.



இந்த முகத்திற்குரியவரைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர்ஒளி'
36/2, பிரெட்ரிக்கா வீதி
கொழும்பு – 06.

மசாலா

இருண்ட கண்டம் என அழைக்கப்படும் ஆபிரிக்காவில் நவரத்தினச் சுரங்கங்கள் அதிகம். ஆழமாகக் குழி பறித்து நவரத்தினங்கல் வேட்டை நடத்துபவர்கள் அண்மைக்காலமாக உயிராபத்தைத் தேடிக் கொள்வது அதிகமாகி விட்டது. ஆயினும் அபூர்வமாகச் சிலர் பிழைத்துக்கொள்வதும் உண்டு. இந்த இரு இளைஞர்களுக்கும் அதிஷ்டம் ஏற்பட வேண்டுமென வாழ்த்துவோம்.



# ஆழமாகக் குழி பறித்து நவரத்தினக்கல் வேட்டை

# சத்திர சிகிச்சையைவிட சிறந்தது கண்ணுக்கு லேசர் சிகிச்சை

கே: எனக்கு குழந்தை பிறந்து இப்பொழுது 7 கிழமைகள் முடிகின்றன. என்னிலே வருகின்ற பால் குழந்தைக்கு போதாமல் இருக்கிறது. இதனால்பால்மா வகைகளைக் கரைத்துக்குடிக்கக் கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. வைத்தியர்கள் தாய்ப்பாலையே கொடுக்கும்படி அறிவுறுத்துகிறார்கள்.இந்த நிலையில் நான் என்ன செய்யலாம். தரமான பால்மா வகைகளை கொடுப்பதாலும் குழந்தைகளுக்கு ஆபத்து ஏற்படுமா? உங்கள் பதிலை விரைவில் எதிர்பார்க்கிறேன்.

ப: *எந்த தரமான பால்மா வகைகளிலும் பார்க்க குழந்தைகளுக்கு தாய்ப்பாலே சிறந்தது. காரணம் தாய்ப்பாலில்*

| [illegible] | Quantity per feed [illegible] | | No. of feeds per day [illegible] | |
|---|---|---|---|---|
| [illegible] | [illegible] | [illegible] | Formula | Others |
| [illegible] | 90 | 3 | 6 | |
| [illegible] | 120 | 4 | 5 | |
| [illegible] | 150 | 5 | 5 | |
| [illegible] | 180 | 6 | 5 | |
| [illegible] | 210 | 7 | 4 | [illegible] |
| [illegible] | 210 | 7 | 3 | [illegible] |

*ஊட்டச்சத்துக்கள் தகுந்த அளவுகளில் இருப்பதுடன் இதில் நோய் எதிர்ப்புச்சக்தியும் இருக்கிறது. இது குழந்தைகளை பல்வேறுபட்ட நோய்களிலிருந்து பாதுகாக்கிறது. அத்துடன் குழந்தைக்கு தாய்ப்பாலைக் கொடுக்கும் பொழுது அவர்களின் உளவியல் ரீதியான வளர்ச்சியும் அதிகமாக இருக்கும். பால்மாவை சரியான முறையில் சரியான அளவுகளில் கரைக்காவிட்டால் அல்லது ஒவ்வொரு தடவையும் பால்போத்தல்களை அவித்து சரியான முறையில் கிருமி நீக்கம் செய்யாவிட்டால். குழந்தைகளுக்கு வயிற்றோட்டம் போன்ற பல நோய்கள் ஏற்பட்டு பாரதூரமான விளைவுகள் உண்டாகலாம். எனவே உங்களில் சுரக்கும் பாலின் அளவு போதா மல் இருந்தால் நீங்கள் கூடியளவு போஷாக் குள்ள உணவு வகை களை உண்பதன் மூலம் உங்களில் சுரக்கும் பாலின் அளவைக் கூட்டிக்கொள்ளலாம். சிறிய ரக மீன்கள், முட்டை, பசுப்பால் போன்றவற்றில் கல்சியம்,புரதம் உட்பட பல போஷாக்குகள் காணப்படு வதால் இவை பாலின் சுரப்பை பெரி தும் அதிகரிக்கும். போதியளவு நீர் அருந்துவதும் தொடர்ந்து பாலூட்டு வதும் பால் சுரப்பை அதிகரிக்கும். குழந்தை பிறந்தவுடன் தாய் அதிகம் நீர் அருந்தக் கூடாது என்ற ஒரு தப்பான அபிப்பிராயம் பொதுவாக நிலவுகிறது. பிள்ளை பிறந்திருக்கும் காலங்களில் தாய் அதிகளவு நீர் அருந்து தல் அவசியமாகும். அவ்வாறு செய்யா விட்டால் பால் சுரப்பு குறைவடைவது டன் கால்களில் அல்லது வயிற்றின் அடிப்பகுதியில் இரத்தம் கட்டிபடுதல் போன்ற பாரதூரமான விளைவுகளும் ஏற்படலாம். மேற்குறிப்பிட்ட நடை முறைகளின் பின்பும் உங்களில் சுரக்கும் பால் போதாமல் இருந்தால் உங்களுடைய பாலுக்கு மேலதி கமாக பால்மாவகைகளைக் கொடுக்க லாம். இது சரியான முறையில் சரியான அளவுகளில் கரைத்துக் கொடுக் கப்பட வேண்டும். இங்கு மிக முக்கிய மான ஒரு விடயத்தை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இலங்கையிலே லக்டோஜன் —1என்ற பெயரு டன் பிரபல்யமாக விற்பனை யாகும் ஒரு குழந்தைப் பால்மா பெட்டியிலே இருக்கும் ஒரு அட்டவணையை இங்கு பிரசுரிக்கிறேன். இந்த அட்டவணை எவ்வாறு பாலைத்தயாரிப்பது என்பதையும் எந்த அளவுகளில் குழந்தைகளுக்கு பாலைக் கொடுக்க வேண்டும் என்பதையும் விவரிக்கின்றது. இதிலே 3ம் 4ம் கிழமை களில் 180 ml பால் கேரண்டி பால்மாவைப் பயன்படுத்தி கரைக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது தவறு. இது உண்மையில் 3 ஆம் 4ஆம் மாதங்க ளில் கொடுக்கப்பட வேண்டிய அளவா கும். அதேபோல 5ஆம் 6ஆம் கிழமைகளில் 210 ml பால் 7கரண்டி பால்மாவைப் பயன்படுத்தி தயாரிக்க வேண்டும் எனக் குறிப்பிடப் பட்டிருக் கிறது. இதுவும் தவறாகும். இது உண்மை யில் 5ம் 6ம் மாதக் குழந்தைகளுக்குரிய அளவாகும். அத்துடன் 5ஆம் 6ஆம் கிழமைகளில் குழந்தைகளுக்கு தானிய உணவு வகைகளை உண்ணப் பழக்குவதற்கு வைத்தியர்கள் சிபார்சு செய்வார்கள் என குறிப்பிடப்பட்டிருக் கிறது. இது மிகப் பெரிய தவறாகும். இந்த வயதிலே குழந்தைகளுக்கு தானிய உணவைக் கொடுத்தால் அவர்களுக்கு வயிற்றோட் டம் ஏற்பட்டு அவர்கள் இறந்துவிடவும் கூடும். இந்தப் பெட்டியிலே ஏனைய மொழிக ளில் சரியாக அச்சிடப்பட்டு தமிழில் மாத்திரம் இந்த தவறு விடப்பட்டி ருக்கிறது. இது மொழிபெயர்ப்பில் ஏற்பட்ட தவறு காரணமாக நிகழ்ந்தி ருந்தாலும் கூட பாரதூரமான விளைவு களை ஏற்படுத்தக்கூடியது. இலங்கையின் பலபாகங்க ளிலும் ஏன் பாடப் புத்தகங் களிலும் கூட தமிழை பிழையாக எழுதி 'தமிழ் கொலை' செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கு செய்யப்பட்டிருக்கும் 'தமிழ்கொலை 'உயிர்கொலையை ஏற்படுத்தக் கூடியது. எனவே உடனடியாக சம்பந்தப்பட்ட நிறுவனம் நடவடிக்கை எடுத்து இந்த தவறைத் திருத்திக்கொள்ள வேண்டும்.*

> சிறிய ரக மீன், முட்டை, பசுப்பால் போன்றவற்றில் கல்சியம் புரதம் உட்பட பல போசாக்குகள் காணப்படுவதால் அவற்றை உட்கொள்வது மூலம் பெண்களுக்கு பால் சுரப்பதில் உள்ள பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்.

இந்த தவறை சுகாதார அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவருகிறோம்.

கே:எனது வயது 22 (பெண்) கடந்த 3 வருட காலமாக short sight (தூரப் பார்வைக் குறைவு) காரணமாக கண்ணாடி பாவித்து வருகிறேன். நான் பரதநாட்டியத் துறையில் ஈடுபட்டிருப் பதால் கண்ணாடி அணிவது கஷ்டம். கண்ணாடி போடு வதற்கு எனக்கு விருப்பமும் இல்லை. இந்தக் குறைபாட்டை மருந்துகள் மூலம் மாற்ற முடியாது என்றும் இதற்கு 'கொன்ரக்ற் லென்ஸ்' பாவிக்க லாம் என்றும் நீங்கள் முன்பு ஒரு தடவை இந்தப் பகுதியில் குறிப்பிட்டிருந்தீர் கள். ஏதாவது சத்திர சிகிச்சை மூலம் இதனைக் குணப் படுத்தலாமா? அப்படிச் செய்ய முடியுமாயின் எனது துறைக்கு அது பெரிதும் வசதியாக இருக்கும். உங்கள் பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

> இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர்சி.சிவன்சுதன். நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:—
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 36/2, பிரெட்றிகா வீதி,
> கொழும்பு — 06.

ப: *உங்கள் பார்வைக் குறைவைக் குணப் படுத்துவதற்கு பல வகையான சத்திர சிகிச்சை முறைகள் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றை இலங்கையிலும் செய்து கொள்ளலாம். ஆனால் இந்த சத்திர சிகிச்சைக ளின் போதும் அதன் பின்னரும் கண்ணிலே சில பாதிப்பு கள் ஏற்படச் சந்தர்ப்பம் இருக்கிறது. எனவே பொதுவாக இந்தக் குறை பாட்டை நீக்குவதற்கு சத்திரசிகிச்சை செய்யு மாறு வைத்தியர்கள் அறிவுறுத்து வது இல்லை. லேசர் சிகிச்சை மூலமும் இந்தக் குறை பாட்டை நிவர்த்தி செய்யலாம். ஆனால் இந்தச் சிகிச்சைக்கு உட்படுத்தப் படும் எல்லோருக்கும் இந்தக் குறைபாடு பூரணமாகக் குணமாவது இல்லை. இந்தச் சிகிச்சை முறை இலங்கையில் இல்லை. இலங்கையில் உள்ள பலர் இந்தியாவுக்குச் சென்று இந்தக் குறை பாட்டை லேசர் சிகிச்சை மூலம் நிவர்த்தி செய்து வந்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக ஒரு வாசகர் சுடர் ஒளிக்கு கடிதமும் எழுதியிருக் கிறார். சாதாரண சத்திர சிகிச்சை யிலும் பார்க்க லேசர்சிகிச் சையின்போது கண்ணுக்கு ஏற்படும் பாதிப்புகள் மிகக் குறைவு. எனவே நீங்கள் விருப்பப்பட் டால் லேசர் சிகிச்சை மூலம் உங்கள் குறை பாட்டை நிவர்த்தி செய்ய முயற்சிக்கலாம்.*

> போதிய உடற்பயிற்சி இல்லாமை, புகைத்தல், எண்ணெய் கூடிய உணவுப் பொருட்கள், குடிவகைப் பாவனை உடலுக்குத் தீங்கு தரும்

கே 60 வயது நிரம்பிய எனக்கு நெஞ்சுவலி வந்து பெரும் கஷ்டத்தைக் கொடுக்கிறது. சிறு பாரமான வேலை செய்தாலும் நெஞ்சை இறுக்கி கொஞ்ச நேரம் ஒன்றும் செய்யமுடியாமல் இருக்கிறது. அதிர்ச்சியான பதற்றமான சூழ் நிலைகளிலும் இந்த வருத்தம் வருகிறது. கிணற்றில் தண்ணீர் அள்ளி னாலோ அல்லது விரைவாக நடந் தாலோ நெஞ்சை இறுக்கிக் கொண்டு வருகிறது. ஒருவேலையும் செய்ய முடியாமல் வீட்டுக்குப் பாரமாக இருக் கிறேன். மனதுக்கு அந்தரமாகவும் கஷ்டமாக வும் இருக்கிறது. இது என்ன வருத்தம் என்பதையும் இதற்கு செய்யவேண்டிய சிகிச்சை முறை என்ன என்பதையும் தயவு செய்து அறியத்தருவீர்களா?

ப : *உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த நெஞ்சு நோவை அஞ்சைனா (Angina) என்று சொல் வார்கள். இது இருதயச் சுவருக்கு குருதி வழங்கும் குருதிக் குழாய்களில் ஒடுக்கம் ஏற்படுவதால் ஏற்படு கிறது. இந்த ஒடுக்கம் காரணமாக இருதயச் சுவ ருக்கான குருதி யோட்டம் குறைவடையும். இதனா லேயே வேலை செய்யும் நேரங்களில் நெஞ்சை இறுக் குவது போன்ற வலி ஏற்படுகிறது. ஆறுத லாக இருக்கும் பொழுது இந்த வலி மறைந்துவிடும். ஒடுக்கம் ஏற்பட்டுள்ள இந்த குருதிக் குழாய்கள் முற்றாக அடைபடுமாயின் இருதயச் சுவரின் ஒருபகு திக்கான குருதி ஓட்டம் முற்றாகத் தடைப்படுவ தால் மாரடைப்பு ஏற்படும். உங்களுக்கு மாரடைப்பு ஏற்டாமல் தடுப்பதற்கும் இருதயச் சுவர்களுக்கான இரத்த ஓட்டத்தைக் கூட்டுவதற் கும் பல மருந்துகள் உண்டு. இவற்றைப் பாவிக்கும் போது நெஞ்சுவலி மறைந்துவிடும். உங்களுடைய குரு தியமுக்கம். இருதயத்தின் தொழிற் பாடு என்பன சோதித்துப் பார்க்கப்பட வேண்டும். அத்துடன் (ECG, X- Ray, Echo) போன்ற வேறுசில சோதனை களும் தேவைப்படும். எனவே உடனடியாக நீங்கள் ஒரு மருத்துவரை சென்று சந்தியுங்கள். உங்களுக்கு சில சமயம் (Curunary bypass surgery) (கொறெநறி பைபாஸ் சேஜறி) எனப்படும் ஒரு சத்திர சிகிச்சையும் தேவைப் படக் கூடும். இவ்வாறான நோய் ஏற் படுவதற்கு கார ணங்கள் போதிய உடற் பயிற்சி இல் லாமை அல்லது வியர்வை சிந்தி வேலை செய்யாமை, புகைத்தல், அதிக எண் ணெய் கொலஸ்ற்ரோல் கூடிய உணவு வகைகளை உண்ணுதல், உயர் குருதி அமுக்க நோயை சரியான முறையில் கட்டுப்படுத்தாது விடுதல் , அதிகரித்த உடல் நிறை, அதிகளவு குடிவகைப் பாவனை போன்றவை ஆகும். எனவே இவற் றைத் தடுப்ப தன் மூலம் இந்த நோய் ஏற்படுவதை பெருமளவு தவிர்க்க லாம். ஒருவரின் இரத்த உற வினருக்கு இந்த நோய் காணப்படின் அவருக்கும் இது ஏற்படுவற்கான சந்தர்ப்பம் அதிகம். எனவே அவர்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.*

# டி.டி.ஓ.எஸ்ஸின் தளம் உங்கள் கொம்பியூட்டர்

## உங்களுக்குத் தெரியாமலேயே நடக்கிறது

இந்த வருடம் பெப்ரவரியில் யாஹூ.கொம், சி.என்.என்.கொம், அமேஸான்.கொம்,ஈ.பே.கொம் போன்ற சில மிகப்பெரிய— ஒரு நேரத்தில் பல்லாயிரக்கணக்கானோர் பார்க்கும் வெப்சைட்டுகள் சில மணி நேரங்கள் முடக்கப்பட்டன. இது உங்களுக்கு நினைவிருக்கலாம்.

டிஸ்ட்ரிப்யூட்ட் டினைல் ஒவ் சேவிஸ் (DDoS) என்ற தாக்குதல் முறை மூலமே இத்தகைய நாசச் செயல் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தாக்குதலினால் மேற்குறிப்பிட்ட வெப்சைட் நிறுவனங்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் ஆயிரம் கோடி டொலருக்கு மேல். இந்த மெகா தாக்குதலை அரங்கேற்றிய, அவர்களின் இந்தத் திட்டத்துக்காக கிட்டத்தட்ட 100க்கும் மேற்பட்ட பேர்ச னல் கொம்பியூட்டர்களை (பி.சிகள்) பயன்படுத்தியிருக்கி றார்கள். அதுவும் உங்கள் கொம்பியூட்டர்களை.

டி.டி.ஓ.எஸ் டெக்னிக் என்றால் என்ன?

போர்ட் ஸ்கானர் (Port Scanners) எனப்படும் மென்பொருளைப் பயன்படுத்தி ஒரு நெட்வேர்க்கை ஸ்கான் செய்வார்கள். அந்த நெட்வேர்க்கில் ஒரு பாதுகாப்பு இல் லாத கொம்பியூட்டர்களைக் கண்டு பிடித்து, அதில் என்ன ஒப்பரேட்டிங் சிஸ்டம் பயன்படுத்தப்படுகிறது, எப்படி அதனுள் நுழையலாம் என்ற தகவல்களை ஸ்கானர் அவர்களுக்குத் தரும்.

இதன் மூலம் அந்த நெட்வேர்க்கில் உள்ள பாதுகாப்பில்லாத நோஞ்சான் கொம்பியூட்டர் கள் எவை என்று கண்டுபிடித்ததும், டி.டி.ஓ.எஸ் தாக்குதலுக்குத் தேவையான மென் பொருளை அதில் ஒளித்து வைப்பார்கள். இதற்காக இவர்கள் பயன்படுத்தும் டி.டி.ஓ.எஸ் புரோகிராம்களில் TRIN00, TFN போன்றவை மிகப் பிரபலம்.

பிறகு அவர்கள் நினைத்த நேரத்தில் எங்கேயோ ஒரு இடத்தில் ஏதோ ஒரு பி.சியில் இருந்து கொண்டு தங்கள் டி.டி.ஓ.எஸ். மென்பொருளை பயன்படுத்தி உங்கள் கொம்பியூட்டர்கள் மூலம் குறிப்பிட்ட வெப்சைட்களை அல்லது கம்பியூட்டர்களை தாக்குவார்கள்.

அதுசரி, இந்த டி.டி.ஓ.எஸ். புரோகிராம் எப்படி இயங்குகிறது? என்ன செய்கிறது?

ஒரு வெப்சைட் என்பது ஒரு கொம்பியூட்டரில் இருக்கும் தக வல் பக்கங்கள் தான். நீங்கள் ஒரு வெப்சைட்டுக்கு விஜயம் செய் யும் போது அந்த கொம்பியூட்டரிடம் தகவல் கேட்டு உங்கள் கம்பி யூட்டர் சில தகவல் பொதிகளை(packets) அனுப்புகின்றது. இது தான் இன்டர்நெட்டில் தகவல் பரிமாறும் முறை. டி.டி.ஓ.எஸ் மென்பொருள்கள் தகவல் கேட்கும் போர்வையில் பிரமாண்டமான அளவு கொண்ட தகவல் பொதிகளை வெள்ளமாக அனுப்புகின்றன. இவ் வளவு தகவல்களையும் கையாள முடியாமல் வெப்சைட் டைக் கையாளும் வெப்சேவர்கள் படுத்துவிடுகின்றன.

ஒரு வெப் சேவர் தாக்குதலுக்கு ஆளாகும் போது ஒரு வெப் பக்கம் உங்கள் பிரவுசருக்கு வர பல மணித்தியாலங்கள்கூட ஆகலாம். ஏன், வராமல் கூடப் போகலாம். அதாவது தகவல் வெள்ளம் அதன் வெப் சேவரை மிகமிக மெதுவாக செயல்பட வைக்கிறது, அல்லது செயலிழக்கச் செய்து விடுகிறது.

யாஹூ, சி.என்.என். வெப்சைட்டுகளுக்கு நேர்ந்த கதியும் அதுதான். வழக்கமாக அந்த சைட்களுக்கு விஜயம் செய்பவர்கள் தாக்குதல் நடந்த அன்று சுமார் 90 நிமிடங்களுக்கு அவற்றை பார்க்க முடியவில்லை.



'மாபியாபோய்' (Mafiaboy) என்ற 15 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவரின் கைங்கரியம் அது என்று பிறகு கண்டுபிடித்தார்கள். அவன் பயன்படுத்தியது பாதுகாப்பில்லாத சில அமெரிக்கப் பல்கலைக்கழக கொம்பியூட்டர்களைத் தான்.

யோசிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் ஒன்றுமறியாத நீங்கள் அப்பாவியாக 'கொம்பியூட்டர் கேம்' விளையாடிக் கொண்டு இருக்கும் போது எவனாவது ஒரு கொம்பியூட்டர் கிரிமினல் உங்கள் கொம்பியூட்டர் மூலம் இந்த வேலையை செய்து கொண்டிருப்பான்.

அது மட்டுமல்லாமல் உங்கள் கொம்பியூட்டரில் சேமித்து வைக்கப்பட்ட ஈ—மெயில், டயல்—அப், பாஸ்வேர்ட்களை திருடி அவற்றை பயன்படுத்தி உங்கள் ஈ—மெயிலைப் படிக்கலாம், கிரடிட் கார்ட் நம்பரைச் சுடலாம். மைடொக்குமென்ட்ஸில் இருக்கும் அந்தரங்கமான பைல்களை, தனிப்பட்ட ஆவணங்களைப் படிக்கலாம்.

பாதுகாப்பில்லாத கொம்பியூட்டர்களில் இது மாதியான எத்தனையோ அயோக்கியத்தனங்களை செய்ய முடியும். இவ் வாறான அயோக்கியத்தனங்கள் செய்வதற்கென பல கொம்பியூட்டர் கிரிமினல்கள் காத்திருக்கிறார்கள். கவனம்! கவனம்!

எஸ்.ஏ.ராஜ்

# மாவீரர் துயிலும் இல்லத்தில் சிறைச்சாலைக் கட்டடமா?

## உணர்வுபூர்வமான விவகாரம் சூடு பிடிக்கிறது




யாழ். குடாநாட்டைத் திறந்தவெளிச் சிறைச்சாலை என்று பொதுவாகக் கூறுகிறார்கள். ஆனாலும் அங்கும் பல மான கட்டுக்காவல்களுடன் கூடிய பெரிய சிறைச்சாலையை நிறுவ வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

நாளாந்தம் பெருகிவரும் குற்றச்செயல்களால் சிறைக்கு வருவோர் எண்ணிக்கை வேகமாக உயர்ந்துள்ளது. இதனால் யாழ். நகரில் பெயருக்கு இயங்கும் ஒரேயொரு சிறைச்சாலைக் கட்டடம் இனித் தாக்குப்பிடிக்காது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

நகரில் தனியார் வீடு ஒன்றே தற்போது சிறைச்சாலையாக மாற்றப்பட்டிருக்கிறது.

குடாநாட்டினுள் இடம்பெறும் குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமன்றி வெளிமாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்படும் கைதிகள், குற்றச் செயல்களில் தொடர்புடைய படையினர் என்று ஏராளமான கைதிகளைத் தனித்தனியே — சிறைச்சாலைக்குரிய அடிப்படை வசதிகளுடன் தங்கவைக்க அங்கு இடவசதி போதவே போதாது. இதனால் கைதிகளுக்குப் பெரும் அசௌகரியங்கள். வேண்டாத பிரச்சினைகள் வேறு அவர்கள் மத்தியில் தலைதூக்குகின்றன.

சிறைச்சாலைக்குரிய பாதுகாப்பு வசதிகளும் அங்கு இல்லை. கொஞ்சம் கவனம் தவறினால் கைதிகள் தப்பிவிடக் கூடிய நிலை. பலதடவைகள் அவ்வாறு நடந்ததும் உண்டு. இதனால் தடுமாறுகின்றது சிறைச்சாலை நிர்வாகம்.

அடிக்குமேல் அடியாகப் பலதடவைகள் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை அடுத்து சகல வசதிகளுடனும் கூடிய சிறைச்சாலைக் கட்டடம் ஒன்றை நிறுவுவதற்குச் சிறைச்சாலைகள் திணைக்களம் இணங்கியிருக்கிறது.

ஆனால் புதிய சிறைச்சாலையை நிறுவக்கூடிய இடவசதி யாழ். நகரப்பகுதியில் இல்லை. குடியிருப்புகள் நெருக்கமாக உள்ள நகரில் சிறைச்சாலைக்கு இடம்தேடுவது சாத்தியப்படாது. இதனால் நகருக்கு வெளியே ஓர் இடத்தைத் தேடவேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆனால் நகருக்கு வெளியே கைதிகளை ஒரே இடத்தில் சிறைவைத்துப் பராமரிப்பதாயின் பாதுகாப்புப் பிரச்சினைகள் ஏற்படும். தனியான பாதுகாப்பு வசதிகளைச் செய்ய நேரிடும். இந்தக் காரணங்களால் ஏற்பட்ட தாமதங்கள், இழுபறிகளுக்குப் பிறகு புதிய சிறைச்சாலைக் கட்டடத்தை அமைக்கக் கோப்பாய்ப் பகுதியில் இடம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. கோப்பாய் பொலிஸ் நிலையத்தை அண்டிய பகுதியில் — 1985 ஆம் ஆண்டுக்கு முன்னைய காலத்தில் — திறந்தவெளிச் சிறைச்சாலை இயங்கிய இடத்தில் புதிய சிறைச்சாலைக் கட்டடத்தை நிறுவ முடிவாகியிருக்கிறது. ஆனால் அங்கேதான் பெரும் சர்ச்சை கிளம்பியிருக்கிறது.



சிறைச்சாலையை நிறுவத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் நிலப்பரப்பின் ஒரு பகுதியில் விடுதலைப் புலிகளின் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருக்கிறது. தற்போது உருக்குலைந்துபோன நிலையில் இருப்பினும் ஈழ விடுதலைப் போரில் மரணித்த பல நூற்றுக்கணக்கான போராளிகளின் உடல்கள் அங்கேதான் புதைக்கப்பட்டிருக்கின்றன. 95 ஆம் ஆண்டின் இறுதியில் புலிகள் குடாநாட்டைவிட்டு விலகும்வரை அந்த மண் புனித பிரதேசமாக மதிக்கப்பட்டு வந்தது. ஒரு தெய்வ சந்நிதிக்குரிய புனிதம் அங்கு பேணப்பட்டுவந்தது. இறந்த போராளிகளின் வித்துடல்கள் புதைக்கப்பட்ட இதுபோன்ற வேறு இரு துயிலும் இல்லங்கள் வடமராட்சி, கொடிகாமம் பகுதிகளிலும் அமைந்திருந்தன.

1995 இன் இறுதியில் குடாநாட்டின் பெரும் பிரதேசத்தை ஸ்ரீலங்காப் படைகள் தங்கள் வசப்படுத்திக் கொண்டபிறகு இந்த மாவீரர் துயிலும் இல்லம் படையினரால் துவம்சம் செய்யப்பட்டது. உடல்களைப் புதைத்த இடத்தில் வரிசையாக நிறுவப்பட்டிருந்த நினைவுக் கற்கள் அடியோடு சிதைக்கப்பட்டு புனிதமான அந்த நினைவிடம் அலங்கோலப்படுத்தப்பட்டது.

போரில் கொல்லப்படுவோரின் சடலங்களையும், நினைவு இடங்களையும் மதித்து நடக்க வலியுறுத்தும் சர்வதேச சட்டங்களை அப்பட்டமாக மீறிப் படையினர் புரிந்த இந்த இழிசெயலுக்காகப் பின்னாளில் குடாநாட்டை நிர்வகித்த மூத்த படையதிகாரிகள் தவறை ஏற்று மன்னிப்புக் கோரினர். இருந்தபோதும் இந்தத் துயிலும் இல்லங்கள் இப்போதும் வெறும் கட்டாந்தரைகளாகவே கிடக்கின்றன.

கோப்பாயில் துயிலும் இல்லம் அமைந்திருந்த நிலத்தை அண்டிச் சிறைச்சாலைக் கட்டடத்தை நிறுவ அதிகாரிகள் இடம் தெரிவு செய்திருப்பது வெளியே காட்டிக் கொள்ளாத வெறுப்பை — அதிருப்தியை — மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கிறது.

கட்டடவேலை இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. ஆயினும் அதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகத் தகவல் வெளியாகி இருக்கிறது.

சிறைச்சாலை நிறுவப்பட்டால் அந்த இடம் பாதுகாப்புக் கெடுபிடிகள் நிறைந்த ஒரு முகாம் போன்று மாறிவிடும். அங்குள்ள நினைவிடத்தின் புனிதம் அதனால் கெட்டுப்போவதும் நிச்சயம்.

உணர்வுபூர்வமான இந்த விவகாரத்தைப் பொறுப்பான அதிகாரிகள் தொடர்ந்து எவ்வாறு கையாளப் போகிறார்கள் என்பதைப் பொறுத்தே இதன் விளைவுகள் அமையும்.

— வலிகாமத்தான்

# கலாநிதிப் பட்டம் பெற எந்தவகையிலும் ஜீவா குறைந்தவர் அல்லர்!

பல்கலைக்கழகங்கள் சமூகத்துடன் ஒன்றி இயங்கவேண்டுமென்பதற்காக பல்கலைக்கழகங்கள் சமூகப்பெரியோர்களைத் தேர்ந்தெடுத்து கௌரவிப்பது வழக்கம். அந்த வகையில் யாழ். பல்கலைக்கழகமும் சிலபெரியோருக்கு கௌரவம் அளிக்க முன்வந்தது. அந்த கௌரவம் எத்தகைய தகுதிகளைக் கொண்டு இனங்காணப்படவேண்டும் என்பது முக்கியம். இவற்றை அந்தப் பல்கலைக்கழகத்தின் மூதவையே முடிவு செய்யும்.

சென்ற முறை சிலருக்கு யாழ் பல்கலைக்கழகம் கௌரவப்பட்டம் வழங்கி கௌரவித்திருந்தது. வீரமணி ஐயர், தங்கம்மா அப்பாக்குட்டி ,மில்க் வைற் நிறுவன உரிமையாளர் கனகரத்தினம் போன்றோருக்கு கலாநிதிப் பட்டங்களை அது வழங்கியிருந்தது.

இவர்களுடைய எத்தகைய செயல்களைக் கொண்டு பட்டம் வழங்கியிருந்தார்கள் என்பதை ஆராய்ந்தால் வீரமணி ஐயர் சமயத்திற்கும், இசைத்துறைக்கும் செய்த, பங்களிப்பும் ,தங்கம்மா அப்பாக்குட்டி சமயத்திற்கு செய்த தொண்டும் ,கனகரத்தினம் சமூகத்திற்கு செய்த தொண்டும் தான் பல்கலைக்கழகத்தால் கணக்கிடப்பட்டிருந்தது.

அப்படிப்பார்க்கையில் ஜீவாவுக்கு முதுகலைமானிப்பட்டம் வழங்கி கௌரவிக்க அவரது நான்கு தசாப்த கால எழுத்தின் வலிமையும், ஆழமும்தான் அவரைத் தள்ளியிருக்கும் என்பது உண்மை.

நான் முதலில் குறிப்பிட்ட மூவரும் ஜீவா அளவிற்கு ஆராயப்பட்டார்களா? என்பது சிந்திக்க வேண்டிய விடயம். உண்மையில் அந்த மூவருக்கும் ஜீவா எந்தளவும் குறைந்தவர் அல்லர். எனவே அவர்களுக்கு கொடுத்த கலாநிதிப்பட்டம் ஜீவாவுக்கும் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

மனிதர்கள் தவறு விடுவது இயல்பு. ஜீவாவின் எழுத்தில் இருக்கும் நேர்மையும், எளிமையும் ,யதார்த்தமும் சில வேளைகளில் அவரது வாழ்க்கை போக்கில் இல்லை என்றும் கூற முடியும்.

அதேபோல் யாழ்பல்கலைக்கழகமும் பல தவறுகளை விட்டிருக்கிறது. குறிப்பாக கொள்கை, எழுத்து, வாழ்வு மூன்றும் ஒன்றாக கொண்டு வாழ்ந்த அமரர் டானியலுக்கு அமரத்துவம் அடைந்த பின்னரும் எந்த கௌரவப்பட்டமும் வழங்கப்படவில்லை. எனவே யாழ்பல்கலைக்கழகமும் தவறுகளை திருத்திக் கொள்ள வேண்டும்.

அளவையூர் தன.சீலன்
வவுனியா

# முற்போக்குவாதிகள் என்று கூறுவோர் சந்தர்ப்பவாதிகள்

ஒரு பட்டம் வழங்கப்படும் போது அதனைப் பெறுபவரின் அந்தஸ்திலேயே அந்த பட்டத்தின் பெருமை தங்கி இருக்கிறது. தகுதி இல்லாதவர்களுக்கு பட்டம் வழங்கப்படும் போது பட்டமும் அதை வழங்கிய நிறுவனமும் மதிப்பை இழக்கின்றன. இதற்கு உதாரணம் ஜீவாவுக்கான பட்டம்.

முற்போக்காளர் என்று தம்மைக் கூறிக் கொள்பவர்கள், சந்தர்ப்பவாதிகள். தமிழக எழுத்தாளர் ஜெயகாந்தன் அதற்கு உதாரணம்.

ஜீவா தனது எழுத்தில் அடிக்கடி தான் எந்தக் கொம்பனுக்கும் தலைவணங்குவதில்லை என்று தெரிவிப்பதிலிருந்து அவரது தாழ்வு மனப்பான்மை வெளிப்படுகிறதேயன்றி அவரது பண்பட்ட அறிவு துலங்கவில்லை.

அவர் போன்றவர்களது முற்போக்கு யாழ்ப்பாணத்தில் குறிப்பிட்ட ஒரு சாதியினரைக் குறிவைத்து தாக்குகிறதே தவிர வேறில்லை.

ஜீவாவின் கடின உழைப்பை நிச்சயம் பாராட்ட வேண்டும். ஆனால் அவரது எழுத்து ,செயல்,பேச்சு, இலட்சியம் என்றும் முற்போக்கானவை அல்ல. இதுவரை அவர் சமூக விழிப்புணர்வை எது விதத்திலும் ஏற்படுத்தவில்லை. இனிமேலும் அது அவரால் முடியாது.

இப்படியானவரை பட்டத்துக்காக தெரிவு செய்த பல்கலைக்கழக அறிவு ஜீவிகள் பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது. தகுதியானவர்களை தெரிந்தெடுக்கத் தவறுவதும் எதற்கும் சண்டை சச்சரவை ஏற்படுத்துவதும் தமிழ் சமூகத்துக்கே உரிய தனிப்பண்பு. காலம்தான் இந்தப் பண்பை மாற்ற வேண்டும்.

ச. இராமச்சந்திரன்
சிலாபம்.

# யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் மௌனம் ஏன்?

ஜீவாவுக்கு கலாநிதிப்பட்டம் வழங்காதது பற்றிப் பலர் குறைகூறி எழுதியபோதிலும் இது பற்றி ஒரு வார்த்தையாவது கூறாது இருக்கும் யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் ஊமையா? நாங்கள் 'கப்சிப்' என்று இருப்போம். அவர்கள் எதையும் எழுதட்டும் எங்களை எவரும் ஒன்றும் செய்துவிட முடியாது என்ற அகங்காரத்தினால் எழுந்த மௌனமா?

கௌரவப் பட்டங்களின் வரலாறு அறிந்தவர்கள், பெரிய பெரிய ஆராய்ச்சி செய்கிறவர்கள் அங்கு இருப்பார்கள். அவர்கள் இதைப் பற்றி ஒரு, ஆராய்ச்சியே செய்து கட்டுரை எழுதினால் அவர்களின் பதவி உயர்வுக்கு உபயோகப்படுமல்லவா?

இந்தியாவில் இருப்பவர்களைக் கூட்டிக் கொண்டு வந்து கலாநிதிப் பட்டம் வழங்கப்படுகிறது. இது ஒரு வகை வியாபாரம் என்றும் பேசப்படுகிறது.

எமது மண்ணில் தோன்றிய பெரியோர்களுக்கு கலாநிதிப் பட்டம் வழங்கினால் யாழ். பல்கலைக்கழகம் குறைந்து போகுமா!

யாழ். பல்கலைக்கழகத்தில் கௌரவப் பட்டம் வழங்கும் முறை புதிராக உள்ளது. இதைப்பற்றிக் குறிப்பிடுங்கள் அறிந்து கொள்ள ஆவலாயாக இருக்கிறது. மானங்கெட்டாலும் கையுண்டு பொத்துவதற்கு என்று இருக்க வேண்டாம்.

க.நடேசு,
கொக்குவில் மேற்கு;

## சர்ச்சைக்கு முடிவு

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் நீண்டகால இலக்கியப் பணிக்காக அவருக்கு முதுகலைமானிப் பட்டம் அளித்து அவரை கௌரவிக்க யாழ். பல்கலைக்கழகம் முன்வந்தது. ஆனால் வழக்கத்துக்கு மாறாக வழங்க முன்வந்த இந்த முதுகலைமானிப் பட்டத்தைத் தம்மால் ஏற்க முடியாது என்று டொமினிக் ஜீவா பல்கலைக்கழகத்துக்கு அறிவித்தார்.

டொமினிக் ஜீவாவுக்கு அநீதி இழைக்கப்பட்டதா என்பது தொடர்பான வாசகர்களின் கருத்துக்கள் கடந்த சில வாரங்களாக சுடர் ஒளியில் இடம்பெற்று வந்தன. அந்த சர்ச்சை இந்த இதழுடன் முடிவடைகிறது.

# அதிகரித்துவரும் தீவிரவாதத்தினால் உலக நாடுகள் அச்சம்

## டில்லியின் மையப்பகுதி ஆகப்பிந்திய இலக்கு



இந்தியாவின் தலைநகரான டில்லியில் தீவிரவாதிகள் பயமின்றி நடமாடக் கூடிய ஓர் இடம் இருக்கிறதென்றால் அது இந்திய நாடாளுமன்றமாகத் தான் இருக்கும்.

அந்தளவுக்கு அங்கு தீவிரவாதிகள் ஏதோ ஒரு வகையில் திடீர் தாக்குதல்களை நடத்துவதும் — மாயமாக மறைவதும் அடிக்கடி நடக்கும் நிகழ்வுகள்.

ஆனால், இம்முறை தீவிரவாதிகளின் திட்டம் சிறிது அதிகரித்ததாகவே கருதப்படுகிறது.

இந்திய நாடாளுமன்றத்திற்குள் நுழைந்து நாடாளுமன்றம் கூடியிருந்த வேளையில் அங்கிருந்த பிரதமர் வாஜ்பாய் — எதிர்க்கட்சித் தலைவி சோனியா ஆகியோரைச் சுட்டுக் கொல்வதும் —

ஏனையவர்களில் பலரை பணயக் கைதிகளாக்கி தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதுமே தீவிரவாதிகளின் நோக்கமாக இருந்திருக்கலாம்.

அல்லது வாஜ்பாயை உயிருடன் கடத்திச் சென்று பணயமாக வைத்து அதன்மூலம் இந்தியாவின் பல்வேறு சிறைகளிலும் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தங்கள் சகாக்களை விடுவிக்கவும் திட்டமிடப்பட்டிருக்கலாம்.

ஆனால், கார்கில் பகுதியில் நடந்த போரில் கொல்லப்பட்ட இந்திய வீரர்களின் தேவைக்காக சவப்பெட்டிகள் வாங்கப்பட்ட போது அதில் ஊழல் நடந்ததாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி கூச்சல் குழப்பம் பண்ணியதால் அன்றைய தினம் 11 மணிக்கு கூடிய நாடாளுமன்றம் 11.10க்கு ஒத்திவைக்கப்பட்டு விட்டது.

அதனால் அங்கிருந்த 200க்கு மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவி போன்றோர் சபையில் இருக்கவில்லை. ஏற்பட இருந்த பாரிய பாதிப்பு இதனால் தான் தவிர்க்கப்பட்டிருக்கிறது.

### தாக்குதல் நடந்தது எப்படி?

கடந்த 13 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 11 மணியளவில் இந்திய நாடாளுமன்றத்தின் இரு சபைகளும் கூடியிருந்தன.

அப்போது கார்கில் சவப்பெட்டி ஊழலுக்குப் பொறுப்பேற்று பாதுகாப்பு அமைச்சரான ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பதவி விலக வேண்டுமெனக் கேட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூச்சலும் குழப்பமும் செய்தனர்.

இதனால் நாடாளுமன்றத்தை தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. கூட்டம் ஆரம்பமாகி 5—10 நிமிடங்களிலேயே இரு சபைகளையும் சபாநாயகர் ஒத்தி வைத்தார்.

இதனால் அங்கிருந்த எம்.பிக்கள் பலர் அவையை விட்டு வெளியேறிக் கன்டீனிலும் — வெளிமண்டபங்களிலும் நின்று கொண்டிருந்தனர். எதிர்க்கட்சித் தலைவியான சோனியா காந்தி புறப்பட்டுச் சென்று விட்டார். நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட விவரம் பிரதமருக்கு அறிவிக்கப்பட்டது. அதனால் அன்று பிரதமர் வாஜ்பாய் சபைப் பக்கமே வரவில்லை.

இவ்வாறான நிலையில் — விவரம் எதுவும் தெரியாத நிலையில் — நாடாளுமன்ற வளாகத்தை நோக்கி வெள்ளை நிற அம்பாஸிடர் கார் ஒன்று வேகமாக வந்து கொண்டிருந்தது.

அந்த காரில் மேல் புறத்தில் சிவப்பு நிற விளக்கு விட்டுவிட்டு எரிந்தபடி இருக்க சைரன் ஒலித்தபடி இருக்க — அதன் முன்புறத்தில் நாடாளுமன்ற அனுமதி அட்டையும் — உள்துறை அமைச்சினால் வழங்கப்படும் அனுமதி சின்னங்களும் ஒட்டப்பட்டிருந்தன.

இந்தக் கார் வெகுவேகமாக நாடாளுமன்றத்தின் 12 ஆவது நுழைவாயிலில் புகுந்தது. காரில் ஒட்டப்பட்டிருந்த அனுமதி அட்டை, சிவப்பு விளக்கு, சைரன் ஒலி என்பவற்றை கண்ட பாதுகாப்பு அதிகாரிகள் சலாம் அடித்து காரை உள்ளே அனுப்பிவைத்தனர்.

### பெண் பொலிஸுக்கு முதலாவது சூடு

ஆனால் இந்தக் காரில் சந்தேகம் கொண்ட மத்திய ரிசர்வ் படையின் பெண் அதிகாரியான கமலேஷ்குமாரி காரை நிறுத்தி சோதனை போட வேண்டுமென்றார்.

அப்போது காருக்குள் இருந்து வெளியே நீட்டப்பட்ட துப்பாக்கி ஒன்று பெண் பொலிஸ் அதிகாரிமீது குண்டுகளை பொழிந்தது. அவர் பிணமாகச் சாய்ந்தார்.

பின்னர் காரிலே வந்தவர்கள் காரை வேகமாக செலுத்தி மிகமிக முக்கிய பிரமுகர்கள் (V.V.I.P) செல்லும் நுழைவாயிலினூடாக நாடாளுமன்ற வளாகத்தினுள் செல்ல முயற்சித்தனர்.

அங்கே இருந்த 11ஆம் 12ஆம் நுழைவு வாயில் கதவுகள் மூடப்பட்டிருந்ததால் காரை பின்பக்கமாக செலுத்தி வேறு பாதையால் உள்ளே செல்ல வழிதேடினர்.

அப்போது அங்கு நின்று கொண்டிருந்த துணை ஜனாதிபதியின் பாதுகாப்பு அதிகாரிகளின் கார் ஒன்றின் மீது இந்தக் கார் இடித்து நின்றது. இந்த இடிப்புதான் தீவிரவாதிகளின் திட்டம் தவிடு பொடியாகக் காரணமாக அமைந்தது.

இந்த களேபரத்தைக் கண்ட சில பாதுகாப்புப் படையினர் காரை நோக்கி ஓடிவந்தனர். இதனால் குழம்பிப்போன காரில் இருந்தவர்கள் உடனே காரை விட்டு இறங்கி எவராவது நெருங்கி வந்தால் சுட்டுக் கொன்று விடுவோம் என எச்சரித்தனர்.

அப்போது தான் நிலமையின் விபரீதம் அங்கே இருந்தவர்களுக்கு உறைத்தது. உள்ளே புகுந்தவர்கள் தீவிரவாதிகள் என்பதை உணர்ந்து அதிரடி நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதனைக் கண்டு பயந்து போன ஒரு நாடாளுமன்ற ஊழியர் நிலத்திலே படுத்துக் கொண்டு நாடாளுமன்ற கதவுகளை மூடுமாறு கத்தினார்.

### தற்கொலைத் தாக்குதல்

தொடர்ந்து தீவிரவாதிகள் தங்கள் வேலையைக் காட்டத் தொடங்கினர். துணை ஜனாதிபதியின் பாதுகாவலர்களை நோக்கி சுட்டபடி நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்லும் 1ஆவது நுழைவாயில், உள்துறை அமைச்சர் செல்லும் 8 ஆவது நுழைவாயில், பிரதமர் செல்லும் 5 ஆவது நுழைவாயில் என்பவற்றை நோக்கி ஓடினர்.

நாடாளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்ட விடயம் தெரியாமலேயே சபையினுள் நுழைய முயன்ற தீவிரவாதிகளை சுற்றி வளைத்து படையினர் தாக்கத் தொடங்கினர். இதனால் ஒரு தீவிரவாதி தனது உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்க வைத்து இறந்து போனார்.

ஏனைய தீவிரவாதிகளும் ஒவ்வொருவராகச் சுட்டுக் கொல்லப்பட்டனர். தொடர்ந்து 50 நிமிடங்கள் நீடித்த இந்த சமரின் பின்பு 5 தீவிரவாதிகளும் 6 பாதுகாப்பு அதிகாரிகளும் நாடாளுமன்ற தோட்ட ஊழியர் ஒருவரும் கொல்லப்பட்டனர்.



நாடாளுமன்ற வளாகத்தினுள் நுழைந்த போது தீவிரவாதிகள் கறுப்புப்பூனை படையினர் போல கறுத்த நிற சீருடையுடனேயே காணப்பட்டனர்.

ஆனால் பின்னர் படையினர் சுற்றி வளைத்ததும் தம்முடைய சீருடைகளை களைந்து சாதாரண மக்கள் போல் தப்பிச்செல்ல முயற்சித்தனர். ஆனால் வந்த 6 தீவிரவாதிகளில் ஐவர் மட்டுமே கொல்லப்பட இன்னொருவர் இந்த தந்திரத்தை பயன்படுத்தி தப்பிப் போய் விட்டார் என்று சொல்லப்படுகிறது.

மேடையில் மைக்கை பிடித்து வீரவசனம் பேசிய எம்.பிமார்கள் வெளியே துப்பாக்கிச் சண்டை நடைபெறுவது பற்றி கேள்விப்பட்டதும் பீதி அடைந்தனர். அகப்பட்ட அறைகளில் போய் ஓடி ஒளிந்து கொண்டனர். இண்டு — இடுக்குகள் வழியாக நாடாளுமன்ற ஊழியர்களை கூப்பிட்டு திரும்பத் திரும்ப தண்ணீர், தண்ணீராகக் கேட்டு வாங்கி குடித்துத்தள்ளினர்.

இன்னும் சிலர் தவழ்ந்தும் — புரண்டும் எங்கே போவது என்று தெரியாமல் அலை மோதினர் என்று சொல்லப்படுகிறது. ஆயினும் அமைச்சர்களான அத்வானி, ஜோர்ஜ் பெர்னாண்டஸ், ஜஸ்வந்த் சிங் ஆகியோர் எந்தவித பதற்றமுமில்லாமல் இருந்தார்கள்.

தாக்குதலுக்கு பாகிஸ்தானிய தீவிரவாத இயக்கமான லஷ்கர்-ஈ — தொய்பா என்ற அமைப்பே காரணம் என கருதப்படுகிறது.

தீவிரவாதிகள் பயன்படுத்திய காரைக் கைப்பற்றி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் அந்தக் கார் தனியார் வங்கி ஒன்றிடம் இருந்து களவாடப்பட்டதாக தெரிய வந்திருக்கிறது.

அவர்கள் பாவித்த கையடக்க செல்லிடத் தொலைபேசியும் கைப்பற்றப்பட்டிருக்கிறது. இந்த தொலைபேசி மூலம் 260 க்கு மேற்பட்ட உரையாடல்கள் நடத்தப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அந்த உரையாடல்களுக்கான இலக்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டு பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர். கைது செய்யப்பட்டவர்களில் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரும் அடங்கியுள்ளார்.

சம்பவம் நடந்தபோது நாடாளுமன்றத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற பல செய்தியாளர்கள் நடந்த சம்பவத்தை நாடாளுமன்ற கட்டடத்தில் இருந்த தமது அறையிலிருந்து தொலைக்காட்சிகள் மூலம் பார்க்கவும் றேடியோ மூலம் கேட்கவும் தான் முடிந்ததாம்.

ஏனென்றால் சண்டை ஆரம்பித்ததும் அவர்கள் தங்கியிருந்த அறைக் கதவு வெளியே பூட்டப்பட்டு விட்டது தான் காரணமாம்.

இத் த தாக்குதல் காஷ்மீர் தீவிரவாதிகளான லஷ்கர்— ஈ—தொய்பா வினாவிலேயே நடத்தப்பட்டுள்ளதாக இந்திய உளவுத்துறை தெரிவிக்கிறது. நாடாளுமன்றத்தில் துப்பாக்கியால் சுட்டபடி முன்னேறிய தீவிரவாதிகள் பாகிஸ்தான் ஆதரவுக் கோஷங்களை எழுப்பியபடியே தாக்குதல்களை நடத்தினர் என்று அங்கிருந்த நாடாளுமன்ற ஊழியர்கள் சிலர் தெரிவித்துள்ளனர். சுட்டுக்கொல்லப்பட்ட தீவிரவாதிகளில் இருவர் ஆப்கானிஸ்தானியரின் சாயலில் இருந்தனர் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறான ஒரு தாக்குதல் நடக்கப் போவது பற்றி ஏற்கனவே மத்திய உள்துறை அமைச்சுக்கு தகவல் கிடைத்திருந்ததாகவும் — கைது செய்யப்பட்ட அல்குவைய்தா தீவிரவாதி ஒருவரிடமிருந்தே இந்தத் தாக்குதல் திட்டத்தகவல்கிடைத்ததாகவும், இதுபற்றி டெல்லி பொலிஸுக்கு தகவல்கள் அறிவித்திருந்தபோதிலும் எல்லாம் விழலுக்கிறைத்த நீராகி விட்டதே என்றும் கவலைப்படுகின்றார்கள் அதிகாரிகள்.

அமெரிக்காவில் உலக வர்த்தக மைய இரட்டைக் கோபுரம் தாக்கப்பட்ட பின்னர். உலகில் இடம் பெற்ற இரண்டாவது பெரிய தீவிரவாத தாக்குதல் இந்திய நாடாளுமன்றம் மீதான தாக்குதல் ஆகும். உலக நாடுகள் கலங்கிப் போய் இருக்கின்றன.

— றாஜ்

# காத்திருந்து கிடைத்தது ஏமாற்றம் நடந்தது தேங்காய்ப் போராட்டம்

## பிரச்சினை தீர்ந்தது என்கிறார்கள் சங்கத் தலைவர்கள், ஆனால்... மீண்டும் வெடிக்கலாம்

தமிழன் எதற்கும் போராட்டம் ஒன்றை நடத்தினால் தான் காரியத்தை சாதிக்க முடியும் போல் இருக்கிறது.

தேசியப் பிரச்சினையான தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினைக்கும் சரி — யாழ்ப்பாணத்துக்கு தேங்காய் அனுப்பும் பிரச்சினைக்கும் சரி போராட்டம் நடத்தினால்தான் காரியம் நடக்கும் போல் தெரிகிறது.

யாழ்ப்பாணத்துக்கு தேங்காய் போன்ற சில



சிதறிக் கிடக்கும் தேங்காய் குவியல்

பொருட்களை ஏற்றும் சில சிறு வியாபாரிகளுக்கு அண்மைக் காலமாக கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் பொருட்களை ஏற்றி இறக்கும் சரக்கு கப்பலில் இட ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

அவர்களது பொருட்களை இந்தா ஏற்றுகிறோம் — அந்தா ஏற்றுகிறோம் என்று கூறி மாதக் கணக்காக இழுத்தடிக்கப்பட்டது.

இதனால் இரண்டு கப்பல்களைத் தவறவிட்ட அவர்கள் —

இனியும் பொறுக்க முடியாது —

வாங்கிய தேங்காயில் பெருமளவானவை அழுகி விட்டன என்ற நிலையில் —

இனியும் நீதி கிடைக்காதென்று போராட்டத்தில் குதித்தனர்.

தங்கள் பொருட்களை அனுப்பாத முகவர் ஒருவரின் கடையின் முன்னால் தேங்காயைப் போட்டு உடைத்தனர்.

அதன் பின்னர் கப்பலிலே பொருட்களை ஏற்றுவதற்கு பொறுப்பாக உள்ள சிலர் அலறி அடித்துக் கொண்டு ஒடிவந்து அவர்களைச் சமாதானப்படுத்தினர்.

உடனடியாக தமது சங்கக் கூட்டத்தைக் கூட்டி இந்த சிறு வியாபாரிகளின் பொருட்களை விரைவில் கப்பலில் ஏற்ற நடவடிக்கை எடுப்பது என்றும் —

அவர்களுக்கு ஏற்பட்ட நட்டங்களைக் கொடுத்து தீர்ப்பது என்றும் — முடிவெடுத்தனர்.

இதனால் தற்போது நிலைமை சீருக்கு வந்துள்ளது. ஆயினும் மீண்டும் (தேங்காய்) வெடிக்கும் போல்தான் தெரிகிறது.

எனவே இதுபற்றி சிறிது விசாரித்துப் பார்க்கக் கிளம்பினோம். சிறுவியாபாரி ஒருவருடன் தொடர்பு கொண்டோம்.

''கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பொருட்களை ஏற்றும் பணியை யாழ்—கொழும்பு ஷிப்பிங் அசோசியேஷன் என்ற அமைப்பே மேற்கொண்டு வருகிறது.

''இதில் வழமையாக கீழ் தட்டில் பழுதடையாத பல்வேறு பொருட்கள் ஏற்றப்படுவது வழக்கம். அதன் பின் மேல் தட்டில் விரைவில் பழுதடையக் கூடிய தேங்காய், மரக்கறி, பழவகை போன்ற பொருட்களைப் போட்டு அனுப்ப வசதி செய்து தரப்படுவது வழமை. ஏனென்றால் அழுகக் கூடிய பொருட்களை கொழும்பிலே கடைசியாக ஏற்றி – பருத்தித்துறையில் முதலிலே இறக்க முடியும்.

''ஆனால் கடந்த சில மாதங்களாக எமக்கு கப்பலிலே இடம் வழங்கப்படவில்லை. செப்டம்பர் மாதத்தில் எமக்கு கப்பலிலே இடம் ஒதுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதனையடுத்து நாம் பொருட்களை வாங்கிச் சேர்த்து களஞ்சியங்களில் போட்டுவிட்டு காத்திருந்தோம். பின்னர் அந்தக் கப்பல் ஒழுங்கு சரிவரவில்லை என அறிவிக்கப்பட்டது.

''பின்னர் நவம்பர் மாதத்தில் கண்டி கப்பலில் இடம் ஒதுக்குவதாக சொல்லப்பட்டது. பின்னர் அது நிறைந்துவிட்டது. கோமாரியில் ஏற்றுவோம் என்றார்கள். கடந்த 3ஆம் திகதி கோமாரியும் பொருட்களை ஏற்றிச் சென்று விட்டது. எமக்கு இடமில்லை என்று சொல்லப்பட்டது.

''இதனால் இரண்டரை மாதங்கள் களஞ்சிய அறைக்கும் துறைமுகத்துக்கும் எடுத்துச் செல்வதும் — திரும்புவதுமாக இருந்ததால் பொருட்களில் பல பழுதடைந்து விட்டன. இதனால் ஆத்திரமுற்ற நிலையிலேயே எங்களில் ஒருவர் அந்தப் பொருட்களையெல்லாம் உடைத்து தனது எதிர்ப்பைக் காட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது'' என்றார்.

தேங்காய் உடைத்து எதிர்ப்பைக் காட்டிய காந்தன் என்ற வியாபாரியைச் சந்தித்தோம்.

''தேங்காயிலே ஏற்பட்ட நட்டத்தை விட அதனை களஞ்சியத்திலிருந்து துறைமுகத்துக்கு எடுத்துச் செல்வதும் திருப்பிக் கொண்டு வருவதுமாக இருந்ததினால் ஏற்பட்ட செலவே எனக்கு 61 ஆயிரம் ரூபாவுக்கு மேல். அதனால்தான் அப்படி தேங்காய்களை உடைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

''அதன் பின்னர் சங்கத்தினர் கூடி அடுத்து பொருட்களை ஏற்றப் போகும் இந்துருவவலி கப்பலில் எங்களுக்கு 600—700 மூடைகள் போட அனுமதி தருவதாகவும் — பழுதடைந்த பொருட்களுக்கு ஏனைய வியாபாரிகளிடமிருந்து நஷ்டஈடு பெற்றுத் தருவதாகவும் சொல்லியிருக்கிறார்கள்'' என்றார்.

இன்னொரு பெயர் குறிப்பிட விரும்பாத வியாபாரி ஒருவர் கூறினார்.

''சங்கக்காரர்கள் ஓரவஞ்சனையாக நடக்கிறார்கள். முகவர்கள் எது ஏற்றினாலும் கேட்பதில்லை. தற்போது பொருட்களை ஏற்றும் கப்பல் சேவை குறைவு.

''சீரற்ற காலநிலை, தேர்தல் போன்ற காரணங்களால் கப்பல் போக்குவரத்து குறைவாக இருக்கிறது. இதனால் பெரிய வியாபாரிகள் பொருட்களை அள்ளி அமத்தி ஏற்றுகிறார்கள்.

''இன்னும் சில நாட்களில் கடலடி கூடினால் கப்பல் ஓடாது. எனவே பொருட்களைக் கொண்டு போய்ச் சேர்த்தால் கப்பல் நின்றதும், கூட விலைக்கு விற்கலாம் என்பது அவர்கள் எண்ணம். எனவே அவர்களின் பொருட்களை ஏற்றித் தள்ளுகிறார்கள். எம்மை ஓரங்கட்டி விடுகிறார்கள்.

''சரி ஏற்றுகிறது தான் ஏற்றுகிறார்கள். மக்களுக்கு அவசியத் தேவையான பொருட்களை ஏற்றினால் பரவாயில்லை. போன கப்பலின் மேல் தட்டிலே பெயின்ட் வகையை அள்ளி ஏற்றி அனுப்பியதால் தான் எமது பொருட்களைப் போட முடியாது போனது''— என்றார்.

''இப்போதைய நிலையில் பெயின்ட் யாழ்ப்பாணச் சனத்துக்கு தேவையா?'' என்று கேட்டார்.

''நீண்ட நாளாக தேங்காய் ஏற்றாததால் எமக்கு மட்டுமல்ல யாழ்ப்பாணத்துக்கு மக்களுக்கும் நட்டம் தான். ஏனென்றால் அங்கு தேங்காய் விலை பயங்கரமாக ஏறிவிட்டது'' என்றும் அவர் சொன்னார்.

இது பற்றி சங்கக்காரர் தரப்பு நியாயத்தைக் கேட்க முயன்றோம். சங்கச் செயலாளரான கஜமுகலிங்கம் என்பவருடன் தொடர்பு கொண்டோம். ஏற்கனவே சுடர் ஒளி நாளிதழில் இது பற்றி செய்தி வெளியாகியிருந்ததால் கடுப்பாகி போயிருந்த அவர், ''நீங்கள் வந்தீர்கள், படம் பிடித்தீர்கள், உங்கள் பாட்டில் போனீர்கள். நாங்கள் தலைவர், செயலாளர் என்றெல்லாம் இருக்கிறோமே. எம்மிடம் ஒரு வார்த்தை கேட்டீர்களா? இப்போ மட்டும் என்ன கேட்கிறீர்கள்'' — என்று ஏகத்துக்கு எகிறினார்.

''ஐயா — அப்போது செய்தியை வெளியிட்டோம். இப்போது நடந்தவைகள் பற்றி எல்லாத் தரப்பிடமும் கேட்டு எழுதப் போகிறோம். இன்று உங்கள் தரப்பு நியாயத்தைச் சொல்லுங்கள்'' — என்கிறோம்.

''எங்கள் தரப்பில் நியாயம் ஒன்றுமில்லை. அப்படியென்றாலும் அதனை எவருக்கும் சொல்ல வேண்டிய அவசியமில்லை'' என்றார் அவர் சிறிது கடுகடுப்பாக.

''சரி அன்றைய பிரச்சினை இப்போ தீர்த்து வைக்கப்பட்டு விட்டதா என்பதையாவது சொல்லுங்களேன்'' என்றோம்.

''அது எங்கள் பிரச்சினை. உங்களுக்கு தேவையில்லாதது'' என்றும் சினந்தார்.

இவரிடம் இருந்து எதுவும் வெளிவராது என்ற நிலையில் சங்கத்தின் தலைவரான குணம் என்பவருடன் தொடர்பு கொண்டோம்.

''இது பற்றி நான் எதுவுமே கூற இயலாது. செயலாளரின் குரலிலேயே எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளுங்கள். எனக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை'' என்று அவர் தன்னைத் தவிர்த்துக் கொண்டார்.

எனவே மீண்டும் செயலாளரான கஜமுகலிங்கத்துடன் தொடர்பு கொண்டோம். நட்டஈடு வழங்கப்படுமா என்று கேட்டோம். அடுத்த கப்பலில் இடம் கிடைக்குமா என்றும் விசாரித்தோம்.

மீண்டும் ''இதெல்லாம் எங்கள் பிரச்சினை — இதனை வெளியாருக்கெல்லாம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. பேப்பர்காரருக்கு இதில் எந்தச் சம்பந்தமும் கிடையாது. இதெல்லாம் நீங்கள் கேட்க வேண்டிய தேவையும் இல்லை. நாங்கள் சொல்லவும் மாட்டோம்'' — என்று மீண்டும் ஏகத்துக்கு எகிறினார்.

''சங்கப் பிரச்சினையை நாங்கள் எமது உறுப்பினர்களுடன் தீர்த்துக் கொள்வோம் — நீங்கள் தேவையில்லை'' என்று முடித்துக் கொண்டார்.

அவரது பேச்சைப் பொறுமையுடன் கேட்டுவிட்டு நாங்கள் தொடங்கினோம்.'' இது தனிப்பட்ட பிரச்சினை என்கிறீர்களே. கடந்த 3 மாதங்களாக யாழ்ப்பாணத்துக்கு தேங்காய் அனுப்பவில்லை. அதனால் அங்கே தேங்காய் விலை அதிகரித்து விட்டது. இதனால் அங்குள்ள மக்கள் கஷ்டப்படுகிறார்களே. இது பொது விஷயமில்லையா?

''உங்கள் உறுப்பினர்கள் தேங்காய் உடைப்புப் போராட்டம் நடத்தப்போகிறோம் என்று எங்களை அழைத்து வைத்துக் கொண்டு நடுவீதியில் தேங்காயை உடைத்தார்களே அது பொது விஷயமில்லையா?

''மக்களது அத்தியாவசியப் பொருட்கள், அழுகிப் போகக் கூடிய பொருட்கள் கரையிலே காத்திருக்க, பெயின்ட் டின்களை ஏற்றி அனுப்ப அனுமதிக்கிறீர்களே, இதனை பொது விஷயமென்று கருதி நாங்கள் கதைக்கக் கூடாதா?

''உங்கள் மீதும் உங்கள் சங்கம் மீதும் நம்பிக்கை இல்லாது பத்திரிகையாளர்கள் ஊடகத்துறையினரின் உதவியை வியாபாரிகள் நாடிய பின்பும் — நாம் அது பற்றி கதைக்கும்போது — இவ்வாறாக ஏகத்தனமாக கதைப்பதை வைத்துப் பார்க்கும்போது வியாபாரிகள் சொல்லும் குற்றச்சாட்டுகள் உண்மையாக இருக்குமென்றே நாம் கருத வேண்டி உள்ளது'' என்று நாமும் பிடிகொடாமல் பேசினோம்.

அவரது குரலில் அதன்பின் கொஞ்சம் தணிவு ஏற்பட்டது. ''இவையெல்லாம் முகவர்களின் வேலை. அவர்களுடன் கதையுங்கள் எமக்குத் தெரியாது'' — என்றார்.

''ஐயா நீங்கள் சங்கமொன்றை வைத்திருக்கிறீர்கள். எனவே கப்பலில் பொருள் ஏற்றுவது தொடர்பான சகல அலுவல்களையும் நீங்களே கவனிக்க வேண்டும். சங்கத்தின் இரகசியங் களை வெளியே சொல்ல முடியாதென்கிறீர்களே. நாளை எரிபொருள் ஏற்றுவது தொடர்பாக பெற்றோலிய கூட்டுத்தாபனமும் —

உணவு அனுப்புவது தொடர்பாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களமும் இரகசியங்களை வெளியிட முடியாதென்று கூறிவிட்டு தாங்கள் நினைத்தபடி செயல்பட்டால் யாழ் மக்களின் நிலை என்ன?'' என்று கேள்விகளை அடுக்கினோம்.

கொஞ்சம் அமைதியானவர் ''அவ்வாறு பொருட்களை கண்டபடி போட்டு அனுப்புவது முகவர்களின் வேலை. நாங்கள் என்ன செய்வது?'' — என்றார்.

''முகவர்களை கட்டுப்படுத்த வேண்டியது சங்கத்தின் கடமையல்லவா? முகவர்கள் தாம் நினைத்தபடி செயல்படுவதானால் சங்கம் என்று ஒன்று தேவைதானா?'' என்றோம்.

''அவர்கள் தாங்கள் நினைத்தபடிதான் செய்கிறார் கள். எங்களால் எதுவும் செய்ய முடியவில்லை. வேண்டுமென்றால் இவைகளைப் பற்றி பேப்பரில்



மற்றொரு குவியல்

எழுதுங்கள்''— என்றார்.

அடுத்து முகவர் நிலையம் ஒன்றுக்குப் பொறுப்பான மருதவாணருடன் தொடர்பு கொண்டோம்.

''சுடர் ஒளியிலிருந்து கதைக்கிறோம் என்றோம். ''இதெல்லாம் உங்களுக்கு எதற்கு? நஷ்ட ஈடுதரப்போகிறீர்களா.'' என்று கேட்டவர் (நகைச்சுவையாக வென்றுதான் நினைக்கிறோம்).

''தற்போது அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டது. எனவே அதனை மீண்டும் கிளறாதீர்கள்'' என்று முடித்துக் கொண்டார்.

''எவ்வாறு தீர்க்கப்பட்டது?'' என்று கேட்டபோது ''தீர்க்கப்பட்டு விட்டது அவ்வளவும் போதுமே...' என்றார்.

எவ்வாறு தீர்க்கப்பட்டது என்று அறியும் ஆவலில் பலரையும் தொடர்பு கொண்டதில் ஒவ்வொரு முகவருக் கும் இவ்வளவு சி.பி.எம் என்ற கணக்கில் கப்பலில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. ஆனால் இறுதி நேரத்தில் இந்த அளவு கூடலாம் அல்லது குறையலாம் — ஏன் இல்லாமலும் போகலாம் என்று வெறுப்பான பதிலே வந்தது.

— குமரன்

# தொலைக்காட்சிப் பேட்டி விவகாரம்
## மீனா, ரம்பா, பிரசாந், முரளி, மும்தாஜ்
## நடிக்கத் தடை


முரளி


பிரசாந்

தமிழ்த் திரையுலகின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு திரை உலகின் முக்கிய அமைப்புகள் ஒன்று கூடி ஒருசில தீர்மானங்களை எடுத்தன. அதன்படி, "திரைப் படங்களின் பாடல்காட்சிகளை 90 விநாடிகளுக்கு அதிகமாக, அதாவது ஒன்றரை நிமிடங்களுக்கு மேலாக எந்த தொலைக் காட்சி அலைவரிசைக்கும் எந்தத் தயாரிப் பாளரும் கொடுக்கக் கூடாது"

"பாடல் காட்சிகள், டிரெய்லர்கள் ஆகிய வற்றை தயாரிப்பாளர்கள் நேரடியாக எந்த சட்டலைற் தொலைக்காட்சிக்கும் கொடுக்கக் கூடாது. தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் மூலம் கொடுக்க வேண்டும்"

"படத் தொடக்க விழா, ஒளிநாடா வெளியீட்டுவிழா படங்களின் வெற்றிவிழா ஆகியவைகளை தொலைக்காட்சி அலைவரிசைகள் படமாக்கலாம், ஒளிபரப்பலாம். ஆனால் படப்பிடிப்புக்களில் தொலைக்காட்சியின் கமெராக் களை எந்தத் தயாரிப்பாளரும் அனுமதிக்கக் கூடாது"

"நடிகர், நடிகைகள், இயக்கு நர்கள், தயாரிப்பாளர்கள், இசை யமைப்பாளர்கள் ,பாடகர்கள், தொழில் நுணுக்க வல்லுநர்கள் ஆகிய யாரும் எந்த ஒரு தொலைக்காட்சி அலைவரி சைக்கும் பேட்டி கொடுக்கக் கூடாது. இவையே தமிழ் திரையுலகின் முக்கிய அமைப்புக்கள் விடுத்த தீர்மானங்கள்.

அதுசரி அமைப் பென்றால் தீர்மானங் களை எடுப்பதும் வெளியிடுவதும் சகஜம் தானே. இதிலென்ன விஷேசம் இருக் கிறது என்று நினைக்கிறீர்களா? இங்கேதான் விஷயமே இருக் கிறது.

இந்தத் தடைகளை மிறி கடந்த தீபாவளிக்கு உங்கள் அபிமான நட்சத்திரங் களான பிரசாந், முரளி, மீனா, ரம்பா ஆகியோர் தொலைக்காட்சிகளுக்கு பேட்டி கொடுத்து மாட்டிக் கொண்டிருக்கின் றனர்.


மீனா

தடையை மீறிப் பேட்டி கொடுத்த தனால் இவர்கள் நடிப்பதற்கு தயாரிப் பாளர் சங்கம் தடைவிதித்தது.

புதிய படங் களுக்கு ஒப்பந்தம் செய்வதற்கு யாரும் இவர்களை அணுகக் கூடாது. மீறினால் மீறுபவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும். என்று கறாராக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திடீர் தடையினால் திரையுலகில் பரபரப்பு ஏற்பட்டது.

ஏற்கனவே குறிப்பிட்ட நட்சத்திரங்களை வைத்துப் படமெடுத்தவர்கள் என்ன செய்வது என்று முழிபிதுங்கினர்.

இப்படி இருக்கையில், தாங்கள் கொடுத்தது பழைய பேட்டி புதியது அல்ல இந்தத் தடை அமுலுக்கு வருமுன்னரே கொடுத்தது என்று குறிப்பிட்ட நட்சத்திரங்கள் தடாலடி பதில் கொடுத்தனர்.

நடிகர் பிரசாந்த் இது பற்றிக் கூறும் போது, "தீபாவளிக்கு எனது படம் எதுவும் வெளியிடப் படவில்லை. தீபாவளிக்கு ஒரு மாதத்திற்கு முன்பு நான் தொலைக் காட்சிக்குப் பேட்டி கொடுத்தேன்.

அந்தப்பேட்டி தான் தீபாவளிக்கு ஒளிபரப்பப்பட்டது" என்றார்.

முரளி கூறுகையில், 'எனது பேட்டி கடந்த செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி பதிவு செய்யப்பட்டு தீபாவளியன்று ஒளிபரப்பப்பட்டது. இதில் என்பிழை எதுவு மில்லை. நான் இதுபற்றி நடிகர் சங்கத் தலைவர் விஜய காந் திடம் பேச உள் ளேன் என்றார். ரம்பா கூறுகையில், "பேட்டி எடுக்கும் போது திரை யுலகத்தினர் விதித்திருந்த கட்டுப்பாடு பற்றி எனக்கு எதுவும் தெரியாது இனிமேல் பேட்டி கொடுக்க மாட்டேன்" என்றார்.


மும்தாஜ்

மீனாவோ "கட்டுப்பாடு விதிப்பதற்கு முதல் கொடுக் கப்பட்டது தான் எனது பேட்டியும் நான் திரையுல கினரின் கட்டுப்பாட்டை மீற வில்லை. இது குறித்து விஜய காந்த் ஸாரிடம் பேசி விட்டேன் "என்றார். எப்படி இருந்த போதும் மேற்குறிப்பிட்ட எல்லா நட்சத் திரங்களும் திரையுலகசங்கத்தினரின் முடிவுக ளுக்குக் கட்டுப்படுகிறோம். இனிமேல் எந்தத் தொலைக் காட்சிக்கும் பேட்டி கொடுகக மாட்டோம் என்று கூறியுள்ளனர்.

—ஷாம்.



# வெளிநாட்டில் "நந்தா"வுக்கு ஏகப்பட்ட வரவேற்பு

இதுவரை எந்தத் தமிழ்ப்படத்திற்கும் இல்லாத அமோக வரவேற்பு 'நந்தா' படத்திற்குக் கிடைத்துள்ளது. பொதுவாகத் தமிழ்ப்படங்களில் அதுவும் பிரபல ஹீரோக்களின் படங்களுக்கு ஏழு முதல் எட்டு பிரிண் டுகள்தான் போடப்படுவது வழக்கம். ஆனால் 'நந்தா' பதினெட்டு பிரிண்டுகள் போடப்பட்டு சாதனை படைத்திருக்கிறது. 'நந்தா' வின் கதை இடம்பெயர்ந்து வாழும் தமிழர்களுக்குப் பிடித்திருப்பதனால் வெளிநாடுகளில் நந்தாவிற்கு அமோக வர வேற்பாம்.

## இனி இவர்கள்.....!

* 'சாக்லேட்' படத்தின் தயாரிப்பாளர் மாதேஷ் அடுத்து தயாரிக்கப்போகும் படம் 'பவர்' இதில் விஜயகாந்த் ஹீரோவாக நடிக்கிறார்.

* குட்வில் நிறுவனம் சார்பில் ஜி.கே லோகநாதன் ராஜகணேஷ் இணைந்து தயாரிக்கும்படம் 'கொலம்பஸ்' ராஜசுந்தரம்— புதுமுகம் வாணி இணைந்து நடிக்கிறார்கள்.

* 'தேவன்' படத்தைத் தயாரிக்கும் அருண் பாண்டியன் 'பசுபதி' என்ற படத்தில் கதாநாயகனாக நடிப்பதற்கு ஒப்பந்தமாகியுள்ளார். ஜோடியாக விந்தியா நடிக்கிறார்.

* 'ப்ரியமுடன் படத்தைத் தந்த வின்சென்ட் செல்வா மீண்டும் விஜயை வைத்து 'யூத்' படத்தை இயக்கப்போகிறார்.

# ரம்பாவுக்கு ஜோதிகா கண்டிசன்

ரம்பா தயாரிக்கும் 'த்ரீ ரோஸஸ்' படத் தில் நடிப்பதற்கு ஒப்புக் கொண்டு போட்டோ செஷனிலும் கலந்து கொண் டார் ஜோதிகா. சம்பளமாக ஐம்பது லட்சமும் பெற்றுக் கொண்டார்.

ஏற்கனவே சிம்ரன் நடிக்க ஒப்புக் கொண்டு பின்னர் விலகிக் கொண்ட தனால் ஆரம்பத்தில் ஜோதிகாவின் அத் தனை கண்டிசன்களையும் ஏற் றுக் கொண்டு ஒப்பந்தம் செய்தார் ரம்பா. இப்போது என்னடா வென்றால் ரம்பா தன் கைக்குள் சிக்கியதும் ஜோதிகா புதுப்புது கண்டிசன்களைப் போடத் தொடங்கி யுள்ளார். அதில் ஒன்று, படத்தின் முழு ஸ்கிரிப்டையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து தனக்கு ஒரு பிரதி தரவேண் டும். ஸ்கிரிப்டில் குறிப்பிடப்படாத ஷொட்களை ஸ்பொட்டில் எடுக்கக் கூடாது. ஜோதிகா இப்படி அதிரடி கண்டிசன் களில் ஆர்வம் காட்டுவதற்குக்காரணம் — ரம்பா வின்சொந்தப்படம் என்பதனால் உங்கள் கரெக் டரை டம்மியாக்கி விடப்போகிறார் என்று திரையுலகத்தினர் ஜோதிகாவின் காதில் ஓதியதுதானாம்.


—ஜோதிகா



### திரை மறைவில்

தேவலோக ஆடலழகியின் பெயர் கொண்ட நடிகையின் உடைகளை வடிவமைப்பவர் அவரது அக்கா பானு. அடிக்கடி வெளிநாடுசென்று தங் கைக்கு கவர்ச்சியான உடைகளை வாங்கி வந்து குவிப்பதோடு தான் சந் திக்கும் தமிழ் நடிகைகளுக்கும் அறி வுரை வழங்குகிறாராம்.

* *

பார்த்தால் மிகவும் அப்பாவியாகத் தெரியும் ரப்பர் நடிகர் டேக்கின் போது கூட நடிக்கும் நடிகையிடம் சில்மிஷம் செய்து வாங்கிக் கட்டிக் கொள்கிறார்.

* *

பெயரிடப்படாத படமொன்றில் கதாநாயகியாக நடிக்கும் கோணலான மோனல் நடிகை முதல்முறையாக இதில் சண்டைக் காட்சிகளில் நடித்துள்ளார். அம்மணியின் உடல்வாகு ஸ்லிம்மாக இல்லாததனால் காட்சிகளை எடுக்கும் போது அங்கங்கே அடிபட்டு வீங்கி விட்டதாம்.

* *

ஷாமுடன் சுற்றிய 'ரன்' நடிகையுடன் இப் போது புதிய ஒருவர் காணப்படுகின்றார். அம்மணி எங்கே போனாலும் அட்டை போல் ஒட்டிக் கொண்டு இருக்கிறார். நடிகையைக் கேட்டால் க்ளோஸ் பிரண்ட், நேட்டிவ் ஹரியானா என்று கூறி மெல்ல நழுவு கிறார் ரன் நடிகை.

* *

இப்போதெல்லாம் தேவநடிகையை சிஸ்டர் என்றே அழைக்கிறார் புராமிஸ் கிங் ஏன்ஸார் இந்தத் திடீர் பாசம் எங்கேயிருந்து வந்தது என்று கேட்டால்,

''அவங்களுக்கு இப்போ கல்யாணமாகி விட்டது. அதனால் தான் மரியாதையாக 'சிஸ்டர்' என்று அழைத் தேன் என்கிறார்.

* *

வங்கத்து நடிகையைத்தொடர்ந்து ரோஜா, மதுபாலா, கௌதமி என்று திரை நட்சத்திரங்கள் சின்னத்திரைக்குவந்துகொண்டிருக்கிறார்கள். இப்போது லேட்டஸ்ட்டாக சின்னத் திரையில் களம் புகுந்திருப்பவர் 'தாஸ்' நடிகை. சினிமாவில் கதா நாயகியாக நடிப்பதோடு மட்டு மல்லாமல் தனது குரலாலும் ரசிகர் களைக் கட்டிப் போட்டிருக்கிறார் நடிகை.





ரீமா

## லைலாவின் நப்பாசை

இதுவரை எந்தப் படத்திலும் படாத கஷ் டத்தை 'நந்தா' படத் திற்காகப் பட்டிருக் கிறேன். 'நடிப்பை யதார்த்தமாக பிழிந்து நடித்திருப் பதாக படத்தைப் பார்த்த வர்கள் கூறுகின்றனர்.

நிச்சயம் எனக்கு 'நந்தா' படத்தின் மூலம் தேசிய விருது கிடைக்கும் என்று சொல்லிச் சொல்லி மகிழ்கிறார் லைலா. இந்த விஷயத் தைக் கேள்விப்பட்ட லைலா வின் காதலர் என்று அழைக்கப்படும் டைரக்டர் 'நந்தா' படத்தில் லைலாவை நடிக்க வைப்பதற்கு எவ்வளவு பாடு பட்டேன் என்கிறது எனக்குத் தான் தெரியும் என்று தனக்குத் தெரிந்தவர்களிடம் சொல்லிச் சிரிக்கிறாராம்.

## கவர்ச்சிக்கு ரீமாவா

ஹீரோக்களைக் கண்டாலே வால் பிடித்து குழைந்து குழைந்து பேசும் நடி கைகளிலி ருந்து மாறுபட்டவராக இருக் கி றார் ரீமாசென். எந்த ஆண்களுடன் நின்று பேசி னா லும் எட்டி தள்ளி நின்றே பேசுகிறார். ''நெருக் கமாக நின்று பேசினால் உடனே தப்புக் கணக்கு போட்டுவிடுறாங்க. எதுக்கு வம்பு? என்று எச்ச ரிக் கை திலகமாக இருக்கும் ரீமாவுக்கு கோபத்தை ஏற்படுத்தும் விஷயம் அதிக கவர்ச் சியாக நடிக்கச் சொல் வது தானாம். அலட்டிக் கொள்ளாமல் ரீமா தாராளமாகக் கவர்ச்சியாக நடித்தாலும் சில தயாரிப்பாளர்கள் கதை சொல் லும்போது சொன் னதைவிட காட்சிகள் அமைக்கும் போது அதிக கவர்ச்சியைப் புகுத்திவிட எத் தனிக் கிறார் களாம். நடிப்போடு கூடிய அள வான(!) கவர்ச்சி என்றால் பரவாயில்லை. அதி கமாக கவர்ச்சியாக நடித்தால் என்இமேஜ் என்னா கிறது. கவர்ச்சிக்கு மட்டுமா ரீமா? என்று குமுறுகிறார்.



## சாக்ஷியின் சமஸ்தானம்

தமிழில் காலூன்று வதற்குப் படாதபாடுபட்டு வருகிறார் சாக்ஷி 'வாஞ்சிநாதன்' வஞ் சித்து விட்டது. வேதத்தை எதிர்பார்த் திருந்தார். வேதம் அர்ஜுனின் பெயர் சொல்லியதோடு சரி. சாக்ஷியைக் கைவிட்டு விட்டது. இதற்கிடையில் சாக்ஷி தனக்குப் பதில் அவரது தங்கையைப் படப்பிடிப்பு களுக்கு அனுப்பு கின்றார் என்ற வதந்தி யும் சேர்ந்து கொண் டது. இதனால் பழையபடி தெலுங்குப் பக்கமே போய்விட லாமா? என்று சாக்ஷி யோசித்துக் கொண் டிருந்த வேளையில் தான் சரத் குமாரிற்கு ஜோடியாக 'சமஸ்தானம்' படத்தில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்திருக்கின்றது.

சாக்ஷி

## ஏலேலோ பாட வருகிறார் சிம்ரன்

பரபரப்பாகப் பூஜை போடப்பட்ட 'ஏலேலோ' படத்தின் படப்பிடிப்பு விரை வில் தொடங்கப்பட உள்ளது.

ஏ. ஆர். ரஹ்மானின் இசையமைப்பில் சமீபத்தில் இரண்டு பாடல்களுக்கு லண்டனில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. இதற்கிடையில் ஏலேலோ நாயகன் பார்த்திபன் புதிய படமொன்றை தயாரித்து இயக்கி நடிக்கவும் போகிறார்.

புதிய படத்தில் இவருடன் ஏலேலோ பாடப் போகிறவர் சிம்ரன். படத்திற்கு இசை — யுவன் சங்கர் ராஜா.

## கவர்ச்சிக்கு ரெடி

கதைக்குத் தேவையென்றால் கவர்ச்சிக்கு ரெடி என்று கூறிக் கொண்டு திரைக்களத்தில் இறங்குகின்றார் மம்தா. முரளி கிருஷ்ணா இயக்கும் 'பேசாத கண்ணும் பேசுமே' படத்தில் இரண்டாவது கதாநாயகியாக அறிமுக மாகிறார். இதில் கதாநாயகனாக குணால் நடிக்க இவருக்கு ஜோடியாக பிரதியுஷா, மம்தா நடிக்கிறார்கள். பரணியின் இசையில் உரு வாகும் இந்தப்படத்தில் நடிப்பதன் மூலம் தமிழுக்கு வருவதற்கு சந்தர்ப்பம் கிடைத் திருக்கின்றது என்று கூறும் மம்தா எல்லா புதுநடிகைகளும் சொல்வது போன்றே,, ''கதைக்குத் தேவையென்றால் கவர்ச்சி யாகவும் நடிக்கத் தயார். ஆனால் எப்போதுமே எல்லைமீற மாட்டேன் என்கிறார்.

## ரசிகர் பத்திரிகை

சினிமா நடிகர்களின் பெயரில் ரசிகர் மன்றங்கள் பத்திரிகை நடத் துவது பழைய ஃபாஷன். இப்போது புதிய ஃபாஷன் என்ன வென் றால் நடிகைகள் பெய ரிலும் பத் திரிகை ஆரம் பிப் பது.

இந்தியா விலேயே முதன்முத லில் நடிகை பெய ரில் ரசிகர்கள் பத்திரி கை யொன்றை ஆரம்பிக் கப் போகி றார்கள். இந்த அதிர்ஷ் டக்கார நடிகை வேறு யாருமல்ல, மும்தாஜ்தான். பத்திரிகைக் குப் பெயர்— 'மும்தாஜ் ரசிகன்'

## தேசிய விருதுகள்

திரைப்படத்துறையினருக்கான தேசிய விருது வழங்கும் விழா டிசம்பர் 12ஆம் திகதி டெல்லியில் நடைபெற்றது. விழாவில் இந் தியாவின் ஜனாதிபதி கே. ஆர் நாராயணன் விருதுகளை வழங்கினார்.

திரைப்படத்துறையினருக்கான உயர்ந்த விருதான தாதா சாகேப் பால்கே விருது பிரபல பின்னணிப்பாடகி ஆஷா போஸ்லேக்கு வழங்கப் பட்டது.

சிறந்த நடிகராக அனில் கபூர் தெரிவு செய்யப் பட்டார்.

சிறந்த நடிகைக்கான விருது 'தாமின்' படத்துக் காக ரவீனா டண்டனுக்கு வழங்கப்பட்டது.

சிறந்த படமாக 'சாந்தம்' (மலையாளம்) தேர்ந் தெடுக்கப்பட்டிருந்தது. இதற்கான விருதை ஜெய ராஜ் பெற்றுக் கொண் டார். சிறந்தடைரக்டர்—ரிது பர்னோ கோஷ் (வங்காளம்)

நர்கீஸ் விருது 'புக்கார்' படத்துக்காக சந்தர் கபூருக்கு வழங்கப்பட்டது.

தமிழில் பாரதி படத்திற்கு 4 விருதுகள் கிடைத்தன. சிறந்த திரைக்கதை ஆசி ரியர்— பாரதிராஜா (கடல் பூக்கள்)

சிறந்த பின்னணிப் பாடகி பவதாரணி

சிறந்த பொழுது போக்குப் படம் 'வானத்தைப்போல' (தங்கத்தாமரை விருது — விக்கிரமன்.

சீர்திருத்தப்படம் — வெற்றிக்கொடிகட்டு' — சேரன்




## RAIN BOW TRAVELS (Pvt) LTD

No.113, Chatham Street, (Ground Floor) Colombo - 01.
Tel: 320645, 321072, 075-363341 Fax: 075-363343



**நியாயமான விலையில் மகத்தான சேவை**

மத்திய கிழக்கு நாடுகள், அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், லண்டன், சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்திரேலியா, சென்னை, திருச்சி, திருவானந்தபுரம் போன்ற நாடுகளுக்கு விமானச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

## Sethu Travels, Communication and Agency Post Office

49 C, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel: 075-557311-2, 075-550076
Fax: 075-522491

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கான விமானப் பயணச்சீட்டுக்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளவும் அத்துடன் எமது முகவர் தபால் நிலையமூடாக வெளிநாடுகளில் வசிக்கும் நண்பர்கள், உறவினர்களுக்குத் தேவையான உடுதுணிகள், உணவுப் பொருட்கள், அன்பளிப்புக்கள் ஆகியவற்றை விரைவில் அனுப்பிவைப்பதற்கு உத்தரவாதம் வழங்கப்படும்.

இதர சேவைகள் IDD, Local, Fax, Laminating, Translation, Typing, net 2 phone

கனடாவில் தொடர்பு:
குணபதிப்பிள்ளை ரவிச்சந்திரன்
தொலைபேசி: (416) 8987284

## TRAVEL DATA TOURS & TRAVELS



**Agent for all Air Lines**

யாழ்ப்பாணம், வவுனியா Transport வசதியும் எம்மிடம் உண்டு.

Toronto: Mr.Param
416-6098381

எம்மிடம்
Zurich - Colombo-Rtn
Toronto-Colombo-Rtn
London-Colombo-Rtn
விமான் டிக்கெட்டுக்களை கொள்வனவு செய்பவர்களுக்கு விமான நிலையத்திற்கான போக்குவரத்து வசதி இலவசம்!

# ஆப்கான் போரில் அமெரிக்காவை ஆச்சரியப்படுத்திய ஓர் போராளி!

ஆப்கானிஸ்தானின் வடக்கு முன்னணி படையினரால் கைதிகளாக பிடிக்கப்பட்டவர்களுள் ஒருவர் அப்துல் ஹமீத். உயரமானவர். மெலிந்தவர். இஸ்லாம் மதத்தை தழுவிய அமெரிக்கர். 20 வயது.

வடக்கு ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற நான்கு நாள் சண்டையின் இறுதியில் யுத்தக் கைதிகளாக பிடிக்கப்பட்ட 86 தலிபான் போராளிகளில் இவரும் ஒருவர். துப்பாக்கி காயங்களுக்குள்ளானவர்களை பொருட்களை ஏற்றும் லொறிகளில் ஏற்றி தடுப்புமுகாமுக்குக் கொண்டு செல்வதற்கு ஆயத்தமானவேளை இவர் தன்னைப் பற்றிய சில விவரங்களை தெரிவித்திருக்கின்றார். தான் எவ்வாறு எதற்காக ஆப்கானிஸ்தான் வரநேர்ந்தது என்பது பற்றி எல்லாம் அவர்கூறினார். அப்பொழுதுதான் பிடிபட்டவர் அமெரிக்கர் என்பது தெரியவந்தது.

இவர் அமெரிக்காவின் வாஷிங்டன் மாநிலத்தைச் சேர்ந்தவர். ஆனால் அமெரிக்காவின் வேறு மாநிலம் ஒன்றில்தான் சிறுபராயத்தில் வளர்ந்தார்.

சரளமாக பேசுபவரான இவர் தனது 16 வயதில் இஸ்லாம் மதத்தைத் தழுவினார் குர் — ஆன் படிப்பதற்காக பாகிஸ்தான் சென்றதாகக் கூறுகிறார்.

ஆறு மாதங்களுக்கு முன்னர்தான் இவர் ஆப்கானிஸ்தான் சென்றார். இஸ்லாமியச் சட்டப்படி நாட்டை நிர்வாகம் செய்யும் ஒரே நாடு ஆப்கானிஸ்தான் மட்டுமே என்று இவர் கூறுகிறார். அதனால்தான் அங்கு செல்ல விரும்பியதாக அவர் தெரிவிக்கிறார்.

செப்டம்பர் 11 ஆம் திகதிய தாக்குதல்களில் தனக்கு பங்கு உண்டா இல்லையா என்பது பற்றி தெளிவாக ஒருவர் அறியவேண்டுமானால் தான் நீண்டதும் சிக்கலானதுமான கதையைக் கூறவேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். அத்தாக்குதலுக்கு தனது ஆதரவு இருந்தது என்பதை அவர் மறுக்கவில்லை.

கைது செய்யப்பட்டு வடக்கு முன்னணிப் படையினரால் அடைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில், கிளர்ந்தெழுந்தவர்கள் பலர் சுட்டுக் கொல்லப்பட்ட பின் அதிலிருந்து உயிர்தப்பிய 86 பேரில் இவரும் ஒருவர்.

குண்டூஸ் நகரம் முற்றுகைக்குள்ளாகியிருந்த இரண்டு வாரங்களும் தான் தலிபான்களுடன் சேர்ந்து போரிட்டதாகவும், இறுதியில் ஏற்படுத்தப்பட்ட சமரசம் ஒன்றின் பேரில் 500 வரையான தலிபான்களுடன் தானும் வடக்கு முன்னணிப் படையினரிடம் சரணடைந்ததாகவும் ஹமீத் கூறினார். 500 பேர்களும் ஒரு கோட்டையினுள் கொண்டு செல்லப்பட்டு அடைக்கப்பட்டனர். அவ்வேளையில் தலிபான்களில் இருவர் தாம் மறைத்து வைத்திருந்த கிரனேட்டுகளை எறிந்தனர். அதனால் வடக்கு முன்னணிப் படையைச் சேர்ந்த சிலர் இறந்தனர்.

''அதனைத் தொடர்ந்து அவர்கள் எங்களை ஒரு கட்டடத்தின் அடித்தளம், கீழ்அறை ஆகியவற்றினுள் அடைத்தனர். மறுநாட்காலை அவர்கள் எங்களை ஒவ்வொருவராக வெளியே எடுத்தனர். அப்பொழுது எம்மில் பலர் பயத்தில் அழத்தொடங்கினார்கள்.

எங்கள் எல்லோரையும் கொல்லப் போகிறார்கள் என்று நினைத்தோம். அங்கே இரண்டு அமெரிக்கர்கள் நின்றனர். ஒருவர் டிஜிற்றல் கமராவும் மற்றவர் வீடியோ கமராவும் வைத்துக்கொண்டு படமெடுத்தபடியிருந்தனர்.

அப்போது தலிபான்களின் கடைசிப் போராளி வெளியேவந்த நேரம் அவர்களில் எவரோ ஒருவர் ஒரு கிரனேட்டை வீசிவிட்டார். களேபரம் தோன்றியது. துப்பாக்கி வேட்டுகள் சரமாரியாகத் தீர்க்கப்பட்டன. நான் ஒரு சில மீற்றர் தூரத்திற்கே ஓடினேன். காலில் ஒரு ரவை தைத்தது. நான் அங்கே வீழ்ந்து கிடந்தேன்.



தலிபான் படையில் இணைந்து போராடிய அமெரிக்கரான அப்துல் ஹமீத்

அந்த அமெரிக்கர்கள் இருவரும் மைக் ஸ்பான், தாவே எனப்படும் சீ.ஐ.ஏ. உளவு நிறுவனத்தினர். அவர்கள் சாகும்வரை தலிபான் கைதிகளால் தாக்கப்பட்டனர். பின்னர் கைதிகளால் சுடப்பட்டனர்.

வெகுண்டெழுந்த வடக்கு முன்னணி படையினர் தம்மிடம் அகப்பட்ட அத்தனையையும் பாவித்து எம்மைத் தாக்கினர். குண்டுகளை வீசினர். அது மிகவும் கோரமான காட்சியாயிருந்தது.

செவ்வாய்க்கிழமை காலை வந்தது. வடக்கு முன்னணிப்படையினர் தரைமாடிக்கும், தரைகீழ் மாடிக்கும் பெற்றோலை ஊற்றி தீ வைத்தனர். இதனால் எஞ்சியுள்ள தலிபான்களும் இறந்திருப்பர் என்று அவர்கள் எண்ணினர்.

வியாழக்கிழமை மீண்டும் அங்கு வந்த வடக்கு முன்னணிப் படையினர் இறந்த தலிபான்களின் சடலங்களை அப்புறப்படுத்த முயன்றனர். ஆனால் அந்த நிலத்தடி மாடியில் 100 வரையான தலிபான்கள் அப்போதும் உயிருடன் இருந்ததைக் கண்டனர்.

அதிர்ச்சி அடைந்த முன்னணியினர் ஆட்டிலறி எறிகணைகளால் அக்கட்டடத்தின் தரைமாடியை தாக்கினர். ''பயங்கரமோ பயங்கரம்'' என்றார் ஹமீத்.

எறிகணைகள் மண்டபத்தினுள் வீழ்ந்து வெடித்தன. நாம் சிறு அறைகளினுள் பதுங்கிக் கிடந்தோம். படிக்கட்டுகள் சடலங்களால் குவிந்து கிடந்தன. மறுதினம் வெள்ளிக்கிழமை வடக்கு முன்னணிப்படையினர் தரைமாடிக்கு தண்ணீரை இறைத்தார்கள். அன்றி ரவு முழுவதும் அந்த குளிர்நீரில் கிடந்தோம். எழுந்து நிற்கும் வலுவுள்ளவர்கள் தப்பிக்கொண்டனர். காயமடைந்தவர்களால் எழுந்திருக்க முடியவில்லை. அவர்கள் அதோகதியானார்கள். சனிக்கிழமை காலையே படையினர் தண்ணீர் இறைப்பதை நிறுத்தினார்கள்.

இப்படி அமெரிக்கரான ஹமீத் கூறினார்.

ஹமீத்திற்கு என்ன நடக்கும் என்பது எவராலும் ஊகிக்க முடியாத புதிராக உள்ளது. அமெரிக்க இராணுவ விசாரணையை அவர் எதிர்நோக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ராசி பலன்

**23.12.2001 முதல் 29.12.2001 வரை பொ.சந்திரன்.**

### மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

சுக்கிரன், சந்திரன், ராகு ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். சூரியன், செவ்வாய் போன்ற கிரகங்கள் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் கவனம் குறையலாம். மன அமைதி இருக்காது. நினைத்ததை செயலாக்க முடியும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். தேக ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம். பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில் துறையில் பெரிதாக முன்னேற் றம் இருக்காது. நண்பர்களால் பொருட் செலவுக்கு இடமுண்டு.

### இடபம்: கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2.

குரு, சந்திரன், புதன் ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். செவ்வாய், கேது போன்ற கிரகங்கள் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் தட்டுப்படலாம். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன சஞ்சலம் இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். பிரயாண வாய்ப்பு உண்டு. திருமண வாய்ப்பு உண்டு. எண்ணியதை செயலாக்க தடை வர வாய்ப்புள்ளது. உடல் நிலையில் நல்ல ஆரோக்கியம் இருக்கும். தொழில் துறையில் சிலசமயம் பின்னடைவு வரலாம்.

### மிதுனம் : மிருகசீரிடம் 3,4. திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

சுக்கிரன், புதன், சந்திரன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். செவ்வாய் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் தட்டுப்படலாம். கல்வியில் கவனம் குறையலாம். மன சஞ்சலம் இருக்கும். வீடு, வாகனம் லாபம் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. நினைத்ததை பக்க உதவியோடு செயற் படுத்தலாம். நோய் விலகி உடல் நிலையில் நல்ல ஆரோக்கியம் இருக்கும். தொழில் துறையில் தடைவரினும் முன்னேற்றம் இருக்கும்.

### கடகம் : புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.

சனி, ராகு, கேது போன்ற கிரகங்கள் நன்மை செய்யும் சூரியன், சந்திரன் ஆகிய கிரகங்களால் ஓர் அளவு நன்மை இருக்கும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். நினைத்ததை நிறைவேற்ற முடியும். பிரயாண வாய்ப்பு உண்டு. வீடு, வாகனம் லாபம் தரும். நோய் விலகும். உடல் நிலையில் நல்ல ஆரோக்கியம் இருக்கும். தொழில் துறையில் சீரான முன்னேற்றம் இருக்கும்.

### சிங்கம் : மகம், பூரம், உத்தரம் 1.

குரு, புதன், சுக்கிரன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். சனி, ராகு ஆகிய கிரகங்கள் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். எண்ணியதை நல்லமுறையில் செயற்படுத்தலாம். பிரயாண வாய்ப்பு உண்டு. திருமண வாய்ப்புண்டு. உடல் நிலையில் நல்ல ஆரோக்கயம் உண்டு. தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் இருக்கும்.

### கன்னி : உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2.

புதன், சுக்கிரன், குரு போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். செவ்வாய், ராகு ஆகிய கிரகங்கள் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எண்ணியதை செயல்படுத்த முடியும். வீடு, வாகனம் லாபம் தரும். பிரயாண வாய்ப்புண்டு. திருமண வாய்ப்பு உண்டு. உடல் நிலையில் சிறுபாதிப்பு வரவாய்ப்புள்ளது. தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு.

### துலாம் : சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3.

குரு, கேது, சுக்கிரன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். சூரியன், சந்திரன் ஆகிய கிரகங்கள் ஓர் அளவு நன்மை செய்யும். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் கவனம் குறையலாம். மன அமைதி இருக்காது. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். நினைத்ததை பக்க உதவியோடு செயல்படுத்த முடியும். நோய் விலகும் உடல் நிலையில் நல்ல ஆரோக்கியம் இருக்கும். திருமணவாய்ப்புண்டு. பிரயாண வாய்ப்புண்டு. தொழில் துறையில் பின்னடைவு வரலாம்.

### விருச்சிகம் : விசாகம் 4, அனுஷம், கேட்டை

சுக்கிரன், புதன், செவ்வாய் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். சந்திரன் ஓர் அளவு நன்மை செய்யலாம். பணத் தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்காது. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். நினைத்ததை செயல்படுத்த பல தடைகள் வர வாய்ப்புள்ளது. உடல் நிலையில் நல்ல ஆரோக்கிம் இருக்கும். தொழில்துறையில் ஏற்ற இறக்கம் இருக்கும். நண்பர்களின் உதவி இருக்கும்.

### தனு : மூலம், பூராடம், உத்தராடம் 1.

புதன், குரு, சந்திரன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். சுக்கிரன், செவ்வாய் ஆகிய கிரகங்கள் ஓர் அளவு நன்மை செய்யும். பணத்தட்டுப்பாடு வரலாம். கல்வியில் கவனம் குறையலாம். மனஅமைதி இருக்கும். நினைத்ததை செயல்படுத்த முடியும் வீடு, வாகனம் லாபம் தரும். உடல் நிலையில் சிறுபாதிப்பு வர வாய்ப்புள்ளது. திருமணபலன் உண்டு. பிரயாண பலன் உண்டு. தொழில்துறையில் நல்ல முன்னேற்றம் இருக்கும்.

### மகரம் : உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2.

சனி, ராகு, கேது போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். சந்திரன் ஓர் அளவு நன்மை செய்யும். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். மனஅமைதி இருக்காது. நினைத்ததை செய்து முடிக்கலாம். பக்க உதவி இருக்காது. வீடு, வாகனம் லாபம் தரும். உடல் நிலையில் நல்ல ஆரோக்கியம் இருக்கும். தொழில் துறையில் ஏற்ற இறக்கம் இருக்கும். நண்பர்களின் உதவி இருக்காது.

### கும்பம் : அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3.

குரு, சுக்கிரன், புதன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். சூரியன், கேது ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக் கும். நினைத்ததை செய்து முடிக்க முடியும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். பிரயாண அனுகூலம் குறைவு. திருமண யோகம் உண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. இடமாற்றம் வரவாய்ப்புள்ளது. நண்பர்கள் உதவுவர்.

### மீனம் : பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

புதன், சூரியன், சனி போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். குரு, சுக்கிரன் ஆகிய கிரகங்கள் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் தட்டுப்படலாம். கல்வியில் கவனம் குறையலாம். மன அமைதி இருக்கும். நினைத்ததை செய்து முடிக்கலாம். பக்க உதவி இருக்கும். வீடு, வாகனம் லாபம் தந்தாலும் செலவும் இருக்கும். நோய் விலகும். ஆரோக்கியம் இருக்கும். தொழில் துறையில் அபிவிருத்தி தென்படும். பதவி உயர்வு இருக்கும்.

# படையினர் இல்லாத போர்க்களம்


# 2020 இல் ரோபோ புரட்சி

யுத்தத்தில் ஈடுபடும் படையினர் மூன்று கேள்விகளுக்கு பதில் தெரிந்தவர்களாக இருந்தல் வேண்டும். நான் எங்கு நிற்கின்றேன்? எனது தரப்பிலுள்ள மற்றவர்கள் எங்கு நிற்கிறார்கள்? எதிரி எங்கு நிற்கின்றான்?

இந்த மூன்று கேள்விகளுக்கும் விடை காண்பதே வேவு பார்த்தல் ஆகும். ஆப்கானிஸ்தானில் இன்று முக்கிய தந்திரோபாயமாக இதுவே கையாளப்பட்டு வருகிறது.

பாரம்பரிய முறைகளை விட இந்த முறை வித்தியாசமானது: அதாவது வேவு பார்ப்பதை இப்போது இயந்திரங்களே செய்கின்றன.

பிறிடேற்றர் (Predator) எனப்படும் ரோபோ விமானம் ஆப்கான் மலைப்பகுதியில் வட்டமிட்டு ஒளிப்படங்களை எடுத்து அமெரிக்க நிலையங்களுக்கு அனுப்பிவைக்கிறது.



இதனால் தலிபான்களின் நடமாட்டம், ஆட்லறி நிலைகள் பற்றிய படங்கள் உடனுக்குடன் படைத்தலைமைக்கு கிடைத்து விடுகின்றன.

பிறிடேற்றர் விமானங்களுக்கு விமானி தேவையில்லை. இந்த வகையில், எதிர்காலத்தில் உலோகத்தினாலும், இலத்திரனியல் சாதனங்களாலும் தயாரிக்கப்பட்ட துருப்பினரே போர்க்களத்தில் சண்டைகளை நடத்தப் போகின்றனர்.

ரோபோக்களுக்கு பசியெடுப்பது கிடையாது. அவைகளுக்கு ஓய்வு தேவையில்லை. அவை விடுமுறை பெறுவதில்லை. ஆபத்தானவையும், கேவலமானவையுமான பணிகளை அவை செய்யக்கூடியவை. அவைகளிடம் ஆயுதங்களைக் கொடுத்து இயக்கச் செய்யமுடியும். இதனால் இராணுவ தொழில்நுட்ப நிறுவனங்கள் இந்தத் துறைசார்ந்த ஆராய்ச்சிக்கு பெருந்தொகை பணத்தை செலவிட்டு வருகின்றன. 2020 ஆம் ஆண்டளவில் பெரும் ரோபோ புரட்சி நடைபெறும் என்று நியூமெக்சிகோவிலுள்ள இராணுவ தொழில் நுட்ப ஆய்வு நிலையம் எதிர்பார்க்கிறது.

முதலில் இஸ்ரேல் 1982 இல் லெபனானின் பெக்கா பள்ளத்தாக்குப் பகுதியை வேவு பார்க்க விமானியின்றி செலுத்தப்படும் உளவுவிமானத்தைப் பயன்படுத்தியது. இதனால் உந்தப்பட்டு அமெரிக்கா தயாரித்த, மிகவும் உயரப்பறந்து வேவுபார்க்கும் 'குளோபல் ஹோக்' என்னும் விமானமே இப்பொழுது ஆப்கானிஸ்தானில் பயன்படுத்தப்படுகிறது.

வான்பரப்பை போலன்றி, தரையில் வாகனங்களை இயக்குவதில் சிக்கல்கள் உள்ளன. பாலைவனத்தில் ஓடுவதற்கு ஏற்றதாக தயாரிக்கப்பட்ட வாகனங்கள் காட்டுப்பகுதியில் ஓடுவதற்கு பயன்படமாட்டா.

இதனைக் கருத்தில் கொண்டு அமெரிக்க இராணுவம் சாரதியில்லாத வாகனங்களை தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளது. இந்த ரோபோ வாகனங்கள நிலக்கண்ணிகளை அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்படும். உலகம் முழுவதிலும் 7 கோடி நிலக் கண்ணிகள் விதைக்கப்பட்டிருக்கின்றன. ஆப்கானிஸ்தானில் மட்டும் ஒரு கோடி வரையான நிலக்கண்ணிகள் விதைக்கப்பட்டிருக்கின்றன.

1990 களில் பால்கன் யுத்தத்தின்போது அமெரிக்கா இரண்டு ரோபோ வாகனங்களை பயன்படுத்தியிருந்தது. ஒரு வாகனம் சாரதியின்றி நகரும் எம் – 60 ரக யுத்ததாங்கியாகும். இதன் முன்புறத்தல் உருளைகள் பொருத்தப்பட்டிருக்கும். இது, பாரிய இரும்புவடத்தினால் நிலத்தில் அடித்து மிதிவெடிகளை செயலிழக்கச் செய்துவிடும். குண்டு வடிவத்தில் அமைந்துள்ள மேலும் ஒருவகை ரோபோ வானில் பறக்கவும், நீரினடியில் ஓடவும் கூடியதாக உள்ளது. இது ஈருடக தாக்குதல்களில் பயன்படுத்தக்கூடியது.

சார்ஜ் என்ப[illegible] வது 8 சக்கரங்கள் பொருத்தப்ப[illegible] வேவுபார்க்கும் ரோபோ. சாதா[illegible] ான வாகனமொன்று இதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இதி[illegible] நான்கு கமராக்கள் பொருத்தப்பட்டிருக்கும். இந்த நான்கு கமராக்களில் இரண்டு வேவு நடவடிக்கைகளுக்கு மற்றவை இரண்டும் தொலைவிலிருந்து இவ்வாகனத்தை இயக்குபவர் ஏதேனும் தடைகள் தெரிகின்றனவா என்பதைப் பார்த்து தெரிந்துகொண்டு வாகனத்தை நகர்த்துவதற்கு பயன்படும்.

படையினர் புதிய நகரங்களுக்கு செல்லும் போது கைகளில் காவிச் செல்லக்கூடிய இலகு ரோபோ மாதிரிகளை இப்போது பாதுகாப்புத்துறை ஆய்வு கூடங்கள் உருவாக்கி வருகின்றன.

இவற்றில் ஒன்று சாக்கடைகள், குகைவழிகளில் மறைத்து வைக்கப்பட்டிருக்கக்கூடிய வெடிபொருட்கள், இரசாயன, உயிரியல் ஆயுதங்கள் என்பவற்றை கண்டறியக்கூடியது. அவ்வாறு ஒன்று காணப்படுமாயின் அதனை அகற்றும் பணியில் வேறு ஒரு ரோபோ ஈடுபடுத்தப்படும். இந்த அன்ட்றோஸ் (Andros) ரோபோ 17 அங்குல அகலமானது. இது குறித்த வழியில் சென்று குறித்த புள்ளியை அடையவும் கைகளால் எந்தவொரு கதவையும் திறக்க கூடியது.

ஆனால் இவ்வாறான ரோபோக்களில் குறைபாடு ஒன்றும் உள்ளது. இவற்றின் கை,கால்கள் மனிதர்களைப் போலவோ, விலங்குகளைப் போலவோ லாவகமாக அசைவதில்லை. மனிதனின் பாதங்கள் போல பல விதமாகவும் நெளித்து, திருப்பிக் கொள்ளும் நெகிழ்வுத்தன்மை இருப்பதில்லை. விலங்குகளின் மூட்டுக்கள், தசைகள் போன்ற ரோபோக்களின் உறுப்புகள் நெ[illegible]வு கொண்டவையல்ல.

அண்மை[illegible]ங்களில் இது பற்றியும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. உயிரினங்களின் உறுப்புகளின் இயக்கங்கள், அவை எவ்வாறு தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவோ, உணவு சேகரிக்கவோ உறுப்புகளை அசைக்கின்றன என்பன பற்றி ஆய்வுகள் நடைபெறுகின்றன. பிற்ஸ்போக் என்னுமிட[illegible]திலுள்ள மெல்லோன் பல்கலைக்கழகம், விலங்குகளின் உடற்கூற்று அமைவுகொண்ட ரோபோ கையொன்றை தயாரித்துள்ளது. விலங்கின் எலும்பு, தசை, நரம்புகள் போன்ற உறுப்புகளை வைத்து அந்தக் கை செய்யப்பட்டுள்ளது. உணர்திறன்களை வெளிக்காட்டும் விதமான கருவிகள் இதில் பொருத்தப்பட்டுள்ளன. இதன் கையிலிருந்து ஒரு பொருள் நழுவி விழுமாயின் அப்பொருள் நழுவும் போதே அந்த ரோபோ அதுபற்றி உணர்ந்து கொள்ளும் விதமாக அது செய்யப்பட்டுள்ளது. பெரும் எண்ணிக்கையான சிறு உறுப்புகள் ஒன்றுக்கொன்று கூட்டாக இயங்கும் 'திரள்நுண்ணறிவை' ரோபோக்களுக்கு ஊட்டுவதற்கான முயற்சிகளும் நடைபெறுகின்றன.

உடல்ரீதியாக மிகுந்த சுறுசுறுப்புடைய பல ரோபோக்கள் கூட்டாக இயங்கும் போது அவைகளே ஓர் இராணுவம் போன்று செயற்படத்தக்கனவாயிருக்கும்.

ஆனால் சுயமாக செயற்படக்கூடிய இயல்பு மட்டுமே குறைபாடாக இருக்கும். இராணுவ ரோபோக்களை தொலைவிலிருப்பவர் வானொலி மூலம் கட்டுப்படுத்துவார்.

சந்தியாகோவிலுள்ள படைத்துறை நிலைய ஆய்வாளர்கள் ஆயுதங்கள் தாங்கும், தந்திரோபாய முறையில் பிரதிபலிப்புகளை வெளிக்காட்டும் ரோபோக்களை கண்டுபிடித்துள்ளனர். நகர்ந்து செல்கையில் இவைகள் ஒருவித உணரிகளை பயன்படுத்துகின்றன. தாமாகவே இயங்கும் ரோபோக்களுக்கு ஒருவரை கொல்லும் ஆற்றலை செய்யும் வசதியை வழங்குவது இப்போதைக்கு நடைமுறைப் படுத்தப்படமாட்டாது. இதற்கு தொழில் நுட்பரீதியான தடையேதுமிருக்காது. ஆனால் இந்த ரோபோக்களுக்கு கட்டளைகளை பிறப்பிக்கவும் அவற்றைக் கட்டுப்படுத்தவும் பிரச்சினைகள் உண்டு. "இப்பகுதியில் வேட்டுக்களைத் தீர்" என்பன போன்ற கட்டளைகளை மனிதனே இவற்றுக்கு வழங்க வேண்டும்.

ரோபோக்கள் தாமே தீர்மானம் செய்து துப்பாக்கிகளை பயன்படுத்துமா என்பது பற்றி அமெரிக்க வான்படையின் வேவுத்துறை தலைவர் லெப்டினன்ட் கேர்ணல் டக்ளஸ் பூனே சந்தேகம் தெரிவித்துள்ளார்.

படைவீரர்களின் ஒருபகுதி வேலைகளை ரோபோக்களிடம் ஒப்படைப்பதனால் வெற்றி வாய்ப்புக்கள் அதிகம், மனித அழிவுகள் குறையும் என்பது ஆய்வாளரின் கருத்து. வரும் காலங்களில் யுத்தங்களின் போது, இன்றைய நிலைக்கு மாறாக மனிதர்கள் ஒரு சிலர் ஆனால், ரோபோக்கள் ஏராளம் என்ற நிலையே இலக்கு.

"எது எவ்வாறாயினும் எமக்கு எதிரிகளாக வரப்போகிறவர்கள் எந்தவொரு ரோபோ முறையையும் கற்றுக்கொண்டு அவற்றை தொழில் நுட்பரீதியில் முறியடிக்கவே செய்வர். வளைகுடா போரில் நாம் பயன்படுத்திய தொழில்நுட்பங்களுக்கு மாற்று நடவடிக்கைகளை இப்போதே எதிரிகள் தெரிந்து கொள்ளவில்லையா?" என்று அமெரிக்க இராணுவ ஆய்வாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தமிழில்: தர்மலிங்கம்

## வாசகர் இதயம் பேசுகிறது

இலங்கையில் நடைபெற்ற 12 ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் ''வெற்றிவாகை சூடப்போவது ஐ.தே.முன்னணியே'' என கருத்துக் கூறியது சுடர் ஒளி. இது முன்கூட்டியே கூறப்பட்டது. மேலும் தமிழர் கூட்டமைப்புக்கும் தடுக்கமுடியாத வெற்றிவாய்ப்பு கிட்டுமென்றும் தரவுகளை முன் கூட்டியயே ''சுடர் ஒளி'' தந்திருந்தது. பாராட்டுக்கள் .

கவிக்குயிலன் ,
சேனையூர்—6

டிசம்பர் 9 இல் வெளியான முஸ்லிம் இளைஞர்களை பலி எடுத்த தேர்தல் தின வெறியாட்டம் மற்றும் யுத்தத்துக்கு முடிவு வராதா? இந்த அவலம் நீங்காதா? போன்ற செய்திகள் மனதை நெகிழ வைத்தன. என்றுமே மங்கா ஒளி சுடர் ஒளிதான்.

வி.பிரேம்,
வவுனியா.

டிசம்பர் 9 இல் வெளியான முன் அட்டைப்படம் அட்டகாசமாகவும் மிகவும் தெளிவாகவும் வடிவமைக்கப் பட்டிருந்தது. அத்தோடு ''வடக்கு – கிழக்கில் வன்முறை முத்திரை பதித்த தேர்தல்'', ''இலங்கை எதிர் நோக்கும் புதிய அரசியல் சிக்கல்'', ''முஸ்லிம் இளைஞர்களைப் பலி எடுத்த தேர்தல் தின வெறியாட்டம்'' போன்ற செய்திகள் என்மனதை உருக்கிவிட்டன.

கே.அக்கீத்,
செட்டிக்குளம்.

சுடர் ஒளி மிகவும் தமிழ் உணர்வுடன் வெளிவருவது கண்டு மகிழ்ச்சி அடைகின்றேன். இன்று தமிழ் இனம் அடக்கி ஒடுக்கப்பட்டு வரும் வேளையில் சுடர் ஒளி அடிமைத் தளை அறுத்து தமிழரின் உரிமை மீட்க, தலை நிமிர்ந்து வீறுநடை போட்டு வருகின்றது.

ஈழப்பிரியன் , வன்னி.

உலகத்தில் மூலை முடக்குகள் எல்லாம் தோன்றி மறைகின்ற, சமூகங்க ளுக்கிடையிலான பிரச்சினைகளை மிகவும் துல்லியமாக எமக்கு தந்து அவற்றை எமது மனங்களில் நிறுத்தி விடுகிறாய். நவம்பர் 11 வந்த வார இதழில், ஒரு சிறுமிக்கு ஏற்பட்டு இருக்கின்ற நிலையினை பார்கின்ற வேளை ''மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த'' கதைதான் ஞாபகம் வந்தது.

ந.உதயகுமார்,
முள்ளியவளை.

பகைமை கொப்பளிக்க பதவிப்பிரமாணம் என்ற தலைப் புடன் வெளியான சுடர் ஒளி அட்டை ப்படம் தற்போதைய அரசியல் யதார்த்த நிலையை அப்படியே புட்டுக் காட்டுகிறது. அப்படியென்றால் எதிர்காலத்தில் ஜனாதிபதிக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையில் பலப்பரீட்சைதான்.

ஈஸ்வரன், வெள்ளவத்தை




காண்டி எழுதிய பெண் களுக்கான P.T.141 என்ற ஆக்கத்தை படிக்கப் படிக்க சிரிப்புத்தான வந்தது. இப்படியான நகைச் சுவைகலந்த ஆக்கங்களை தொடர்ந்து பிரசுரியுங்கள்.

ப.சோபன்,
மருதானை.

# வெறும் கையால் முழம்போட நினைத்தால் மீட்சி வந்துவிடாது

## பணம் தேடும் வழியைப் பார்ப்பதுவே அரசின் முதல் பணி

''தேர்தலுக்குப்பிறகு புது ஆட்சியில் அமைதி வரும் என்று பார்த்தால், முந்தின காலத்தை விட இனிமேல்தான் பெரும் பிரச்சினை வரும் போல கிடக்கு'' என்றபடியே மாஸ்டருடன் தேரடியில் வந்து அமர்ந்தார் விநாசியர்.

''என்ன அண்ணை வயித்திலை புளியைக் கரைக்கிறியள்?'' கேட்டான் லோகன்.

''பின்னை என்ன தம்பி, முந்தின ஆட்சியிலை தங்கடை விருப்பத்துக்கு பொதி, சொதி என்று ஒன்றைத் தயாரித்துப் போட்டு அதை எங்களுக்கு மேலை திணிக்கப்பாத்தினம். இப்பவும் ஐயா, தன்ரை விருப்பத்துக்கு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்தியாவின் உதவிபெற, அங்கை போகிறார். உந்த மாதிரி தங்கடை விருப்பத்துக்கு நடந்து போட்டு, பிறகு விடுதலைப் புலிகளின் மீது சமாதானத்துக்கு வருகினமில்லை என்றுபழிபோடுகிறது தானே ஏழு வருஷமா நடந்தது. பிறகு இவையும் அதையே செய்தால் எப்படி நம்பிறது'' சஞ்சலத்தைக் கொட்டித் தீர்த்தார் விநாசியர்.

''அப்ப இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து ஆலோசிக்கத்தான் இந்தியா போகிறார் என்ற கதை பொய்யோ?'' ஏக்கத்துடன் கேட்டான் லோகன். இதற்கு மாஸ்டர் பதில் சொல்லத் தொடங்கினார்.

''நாடு இன்றைக்கு பெரும் வங்குரோத்திலை இருக்கு. அம்மாவும், அவவின்ரை ஆட்களும் எப்படியும் அதிகாரத்திலை இருக்க வேணும் என்ற மோகத்திலை இனத்துவேசத்தை வளர்த்து யுத்தத்தை நடத்தினதோட, தேர்தல்களும் அடுத்தடுத்து நடக்கக் காரணமாக இருந்து போட்டினம். இப்ப ஐயா ஆட்சியை ஏற்றதாலை வெறுங்கையாலை முழம்போட்ட நிலைமை. அதைச் சரிக்கட்ட, அவர் வெளிநாடுகளிட்டையும், உலகவங்கி போன்றவற்றிட்டமும் கையேந்திறார். ஆனால் யுத்தத்தை முடிச்சு, பிரச்சினை தீர்ந்தாத்தான் காசு என்று அதுகள் சொல்லிப்போட்டுதுகள். அதாலை இப்ப ஐயா நாடகத்தைத் தொடங்குகிறார் என்று தான் நினைக்கிறன்.''

''அப்பிடியெண்டாலும் அமைதி வரட்டுமன்'' அங்கலாய்த்தான் லோகன்.

''தம்பி, இப்பிடி அவசரத்திலை அள்ளித் தெளிச்சு கோலம் போட்டால் அது சரியாக வருமே? கடன் தாற வெளிநாடுகளை சரிக்கட்ட சமாதானப் பேச்சு, பொதி, பொட்டலம் என்று கதை விடுறதும், பிறகு பெரும்பான்மை ஆள்களை சமாளிக்கிறதுக்காக வாங்கின கடனிலை ஆயுத்தங்களை வாங்கிக் குவித்து யுத்தத்தை தொடருவதும் அம்மாவின்ரை ஸ்டைல். ஐயாவும் இப்ப வங்குரோத்திலை ஓடுற பொருளாதாரத்தைச் சரிக்கட்ட அம்மாவின்ரை முதல் வழியை கடைப்பிடிக்கிறார் போல. அடுத்தவழியிலும் போவாரோ தெரியாது?'' விளக்கினார் மாஸ்டர்.

''ஆனால் இந்தத் தேர்தலிலை சிங்கள மக்கள் சமாதானத்தை ஐயா தருவார் என்று நம்பித்தானே அவருக்கு வாக்களிச்சவை. அவைக்குப் பிழை விட ஏலுமே'' கேட்டான் லோகன்.

''உதென்ன மச்சான், தெரியாத விஷயம் போலக் கேட்கிறாய். தேர்தலிலை சமாதானத்தைக் கொண்டு வருவினம் என்று நம்பித்தான் அவைக்கு வாக்களித்து ஆட்சியிலை ஏத்தப்படுகினம். ஆனால் பிறகு எங்களுக்கு உண்மையாகக் கிடைக்க வேண்டிய உரிமைகளைத் தர வெளிக்கிட்டால், இனவாதக்தைக் கிளப்பி, யுத்தம் தொடர்ந்தாலே தாங்கள் வளமாக இருக்கலாம் என்ற நிலையில் உள்ள பெரும்பான்மையினரின் சமய, அரசியல் தலைகள், ''சிங்களவர் இனி வாழஏலாது, எல்லாம் தமிழரிட்டை கொடுபடுகுது'', என்று கூப்பாடு போடுவினம். ஆட்சிக்காரரும், அதோடை சுத்தி வளைச்சு புலிகளின் மீது பழியைப் போட்டுட்டு யுத்தத்தை தொடருவினம். இதுதானே இவ்வளவு நாளும் நடந்தது. நண்பனின் சந்தேகத்தைத் தீர்க்க முயற்சித்தான் டானியல்.




''எண்டாலும் மக்கள் ஆணை தந்ததாலை அந்தக் கும்பலை தள்ளிப் போட்டு இனப் பிரச்சினையைத் தீர்க்கலாம் எல்லே'' விடாமல் கேட்டான் லோகன்.

''தம்பி, சுயநலமில்லாத, பதவி ஆசையில்லாத, மானம், ரோசம் இருக்கிற ஒழுக்கமான அரசியல்வாதிகள் இருந்தால் நீர் சொல்லுறது நடக்கும் தான். ஆனால் இங்கை அப்படி இல்லையே. வாக்காளர்கள் வாக்களித்ததோட சரி. பிறகு அவையின்ரை குரல்பெரிசா எழும்போது, அதுக்குப் பிறகு எழும்பிறது, மதத்தலைவர்கள், அரசியல் வாதிகள் என்று இவையின்ர சத்தம் தான். அதனாலை, அடுத்த தேர்தலிலை வெல்ல வேணுமென்றால் இவையின்ரை குரலுக்கு மதிப்புக் கொடுக்க வேணும். அப்ப என்ன செய்யிறது? தமிழரை நசுக்கிப் பிழியிற வேலையைத்தான் ஈசியாச் செய்யலாம்; செய்வினம் ''அனுபவத்தை உரைத்தார் மாஸ்டர்.

''உதோட இன்னுமொரு பிரச்சினையும் இருக்கு. இண்டைக்கு இனப்பிரச்சினையை தீர்க்கிற கட்சி மக்களிடம் செல்வாக்குப் பெற்று, குறைந்தது அடுத்த தேர்தலிலாவது மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுவிடும் என்பது ஐயாவுக்கும் தெரியும். அம்மாவுக்கும் தெரியும். இந்த நிலையிலை பிரச்சினையைத் தீர்த்து நல்ல பெயரை ஒரு கட்சி எடுக்க மற்றக் கட்சி விடாது!''

''அப்ப இரண்டு கட்சியும் சேர்ந்து செய்யலாமே?'' கேட்டான் லோகன்.

''இருந்தாலும் அதிகாரத்திலை இருக்கிற கட்சிக்குத்தானே பெயர் கிடைக்கும். அதனாலைதானே சேகுவேராக்கள் தங்கடை கட்சி வளரும் நேரத்திலை பெரிய கட்சியிலை ஒன்று பிரச்சினையைத் தீர்த்து பெயர் வாங்கி விடக்கூடாது என்பதிலை கவனமாக இருக்கினம்'' முடித்து மூச்சு வாங்கிக் கொண்டார் மாஸ்டர்.

''அப்ப ஐயாவும் எங்களுக்கு 'பெப்பே' காட்டப் போறாரோ? ''ஏங்கினான் டானியல்.

''எங்கடை சனம் நம்பி ஏமாறு வதற்கெண்டே பிறந்திருக்கு. அணிலை மரத்திலை ஏறவிட்டுப் போட்டு சுத்தி சுத்திக் குதிக்கிற நாய்போல உவை எல்லாத்தையும் தூக்கித் தருவினமெண்டு இன்னும் நம்பிக் கொண்டு கிடக்குதுகள். உப்பிடியே கிடக்க, கடைசியா அவை எல்லாரும் சேர்ந்து, எங்கள் முழுப்பேரையும் முடிக்கப் போகினம்'' சீறி வந்தது சின்னாச்சியின் குரல்.

''ஆத்திரப்படாதை சின்னாச்சி, விளங்காட்டி விளங்கப்படுத்தத்தானே வேணும்'' என்று கூறிய விநாசியர் மேலும் தொடர்ந்தார்.

''தம்பி எங்கடை பிரச்சினை 50 ஆண்டுகளாக இருந்து வருகுது. நாங்களும் அவை கிழிப்பினம், இவை கிழிப்பினம் என்று நம்பி நம்பி மோசம் போய்த்தான் நாங்களே தேவையானதை எடுக்கிறம் என்று வெளிக்கிட்டனாங்கள். இந்தநிலைமையிலை, ஆட்சிக்கு வந்த 6 மாதத்திலை பிரச்சினை தீருமென்றோ, உடனே தேவையானதெல்லாம் கிடைக்குமென்றோ நாங்கள் எதிர்பார்க்க ஏலாதுதான். ஆனால் முதல் கோணல் முற்றிலும் கோணல் என்று ஆகக்கூடாதெல்லே?''

''ஏன் அண்ணை, அந்த ஆள் பிரச்சினையைத் தீர்க்கத்தானே ஆலோசிக்க இந்தியா போறார். பிறகு ஏன் சந்தேகப் படுறியள்?'' விடாமல் கேள்வியைப் போட்டான் லோகன்.

''உது பிள்ளைபெறப் முன்னர் பெயர் வைச்ச கதையெல்லோ? ஜே.ஆரும் உந்தப் பிழையைவிட்டுக் கொட்டினவர். பிறகு உவரும் அதையே செய்தால் சந்தேகம் வரும் தானே?'' பதில் கேள்வி போட்டான் டானியல்.

''அது தானே தம்பி, பிரச்சினை தமிழருக்கும் பேரினவாத அரசுக்கும். இதுக்கு இடையிலை மத்தியஸ்தத்துக்கு வாற ஆளை இரண்டு தரப்பும் எல்லே சேர்ந்து ஒத்துக் கொள்ள வேணும். அதை விட்டுட்டு, தன்ரை பாட்டிலை இவர் இந்தியாவோடை போய்க் கதைக்கிறதெண்டால் கச்சதீவுப் பிரச்சினையைக் கதைக்கட்டும். அதை விட்டுட்டு எங்கடை பிரச்சினைக்கை அவையை ஏன் இப்பவே இழுக்கிறார்?'' கேட்டார் விநாசியர்.

''உதிலை இன்னொரு ரகசியமும் இருக்காம். ஐயா, சாயிபாபா மாதிரி ஆள்களை சந்தித்து ஆசிவாங்கத்தான் போறார். அதோடை இந்திய அரசிடம் நிதிப்பிச்சையும் கேட்பார். உதுகளை மறைக்கத்தான் பிரச்சினை, ஆலோசனை என்று நாடகம் போடுறார் என்று சொல்லுகினம்'' சொன்னான் டானியல்.

''நான் இன்னொரு கதை கேள்விப்பட்டனான். தமிழ் எம்.பிமாரைச் சமாதானப்படுத்தி, அம்மாவிட்டையிருந்தும் கொஞ்சப்பேரை இழுத்து அவவின்ரை அதிகாரத்தை ஆட்டம் காணவைக்க ஐயா திட்டம் போடுறாராம். அது நிறைவேறும் வரைக்கும் காலத்தை ஓட்டத்தான் சமாதானம் முயற்சியில் ஈடுபடுவதாக கதை விடுகிறாராம்'' கேள்விப்பட்டதைக் கூறினார் மாஸ்டர்.

''எண்டாலும் உதெல்லாம் உண்மையென்று உடனை நம்பக்கூடாது?'' சமாளித்தான் லோகன்.

''சரி மச்சான், உதுகளை நம்ப வேண்டாம். ஆனால் ஆட்சிக்கு வந்ததும் இந்தியா விட்டை ஆலோசனைக்குப் போற ஐயா, குடாநாட்டுக்கான போக்குவரத்து அனுமதி முறை, வவுனியா ''பாஸ்'' முறை, வன்னிக்கான பொருளாதாரத்தடை, ஆகியவற்றை நீக்கி, விசாரணையின்றிப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறையிலை வாடும் எங்கடை பிள்ளைகளையும் விடுவிக்கிறதையெல்லே முதலில் செய்ய வேணும். அதுகளுக்கும் இந்தியா விட்டையே ஆலோசனை நடத்த வேணும்?'' கிடுக்கிப் பிடி போட்டான் டானியல்.

''உதிலை எங்கடை ஆள்களுக்கும் கொஞ்சம் நிம்மதிபோல. இப்பதானே கதிரையைப் பிடிச்சவையள். ''பாருங்கோ ஐயா, எங்கடை பிரச்சினையைத் தீர்க்க கடல் கடந்து போறார். அதுதான் நாங்கள் கொஞ்சம் பொறுமையாக இருக்கிறம் என்று பழைய சாட்டைச் சொல்லிக் கொண்டு தங்கடை பாடுகளிலை கவனம் செலுத்தலாம் எல்லே?'' சிரித்தபடி கூறினார் விநாசியர்.

''உதுக்கு இனி அவை வேற ஆட்களைப் பார்க்க வேணும். இனியும் உந்த மாதிரி மதில் மேல் பூனையாக காலத்தை தள்ள நினைச்சால் ''டோர்ச்லைட்மூடி'' கடிதத்தோடை அவை, அவை வீட்டு அடுப்படியிலை தான் கிடப்பினம்!'' எச்சரிக்கைத் தொனியில் சொன்னாள் சின்னாச்சி.

''ஐயாவின்ரை பக்கமும் ஒரு சிக்கல் இருந்ததாம். முந்தி பொதி தயாரிக்க பேராசிரியருக்குத்தான் ஐயாவும் அரசமைப்பு விவகாரங்களை முதலில் கொடுத்தவராம். ஆனால் இவர் தயாரித்த பொதியை அம்மா கொண்டு வரேக்கை எதிர்த்துப் போட்டு, இப்ப அவர் புதிசா தயாரிக்கிற பொதியை ஆதரியுங்கோ என்று சொன்னால் ஊர் சிரிக்குமென்று தான் அந்தப் பொறுப்பை அவருக்கு கொடுக்கேல்லையாம்'' என்றார் மாஸ்டர்.

''உப்பிடி எல்லாத்திலையும் நொட்டை சொல்லாமல், எங்கடை பக்கத்திலை இருந்து ஒரு தீர்வை கொடுக்கலாமெல்லே?'' கேட்டான் லோகன்.

''இண்டைக்கு உவருக்கு ஏழரைச் சனி பிடிச்சிருக்குப் போலை'' என்ற சின்னாச்சி மேலும் தொடர்ந்தாள்,

''எங்கடை முடிவைத்தான் எப்பவோ சொல்லியாச்சே. அந்த முடிவைவிட்டு கீழிறங்கி ஒரு தீர்வுத் திட்டத்தை கொடுத்தால் என்ன நடக்கும் தெரியுமே? அவையின்ரை காவிகள் குட்டையைக் குழப்ப நாளடைவிலை அந்த தீர்வுத் திட்டத்தை கைவிடுவினம். பிறகு வேறொன்று கேட்பினம். அப்ப முந்திக் கொடுத்ததைவிட நீர்த்துப் போன தீர்வை கொடுக்க வேண்டி வரும். அதுவும் குழப்பியடிச்சு கடைசியா அடிமைச் சாசனம் எழுதிக்கொடுக்கிறதிலை வந்து நிற்கும். இப்பிடியொரு நிலைமை தமிழருக்கு வரக்கூடாது, நாங்கள்பட்டபாடுகள் வீணாகக் கூடாது என்று தான் தமிழரின் ''தாகம்'' என்னவோ அதிலேயே நிற்கிறோம். அவை பிரச்சினையைத் தீர்க்க வேணும் என்று உண்மையாக விரும்பினால், எங்களுக்குத் தர வேண்டியதைத் தரும்படியான தீர்வை முன்வைக்கட்டும். நாங்கள் அதை ஏற்றுக் கொள்ளுறம். அதைவிட்டுப் போட்டு பொதி, சொதி, குழம்பு என்று தலையைச் சுத்துற கதை கதைச்சால் பிறகு தெரியும் தானே?'' சினத்துடன் வெடித்த சின்னாச்சி ஓய்ந்தாள்.

''அப்ப என்னதான் நடக்குமென்று சொல்லுறியள்?'' தவிப்புடன் கேட்டான் லோகன்.

''சமாதானத்தை விரும்பும் சிங்கள மக்களின் குரல் பலமாக ஒலித்து அரசியல்வாதிகளுக்கும், மதத் தலைவர்களுக்கும் அழுத்தத்தை கொடுக்க வேண்டும். ஏன் படையினர் கூட தாங்கள் மிகமோசமான அநீதி ஒன்றின் பக்கம் இருப்பதை உணர்ந்து யுத்தத்துக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும். இதற்கு சிங்கள தேசாபிமான தலைவர்கள் பாடுபட வேண்டும்.

''அதோடை எங்கடை எம்பிமாரும் நழுவல் வேலைகளை விட்டுப் போட்டு, தடையை நீக்கிறியா? இல்லையா? என்று சட்டையைப் பிடிக்க வேணும். அதைவிட்டுப்போட்டு தேர்தல் காலத்திலை விளம்பரம் செய்ய வசதியாக மட்டும் நாடாளுமன்றத்திலை பேசியதை விட்டுட்டு, உண்மையான தேவைகள் உடனடியாக கிடைக்க உரத்துக் குரல் கொடுக்கத் தொடங்க வேண்டும். அதுக்குப் பிறகு எல்லாம் அவன் கையில்''

மேலே பார்த்து கும்பிட்டபடி எழுந்தார் மாஸ்டர்.

தேரடி கலைந்தது.

— ஏகலைவன்



'' இந்த குடிகார ஆசாமி ரஜனியோட பழைய நண்பரா இருக்கும்.''

''எப்படிடா சொல்ற?''

'' ஏன் சார் இப்படி தினசரி குடிக்கிறீங்கன்னு கேட்டா என் வழி தண்ணி வழின்னு சொல்லிட்டு போறாருடா''



''டாக்டர் எனக்கு ஒரே பசியா இருக்கு. ஆனா எதுவுமே சாப்பிட முடியல''

'' இந்த இரண்டு மாத்திரைகளையும் சாப்பிடுங்க''

''அப்போ வயிறு நிரம்பிடுமாங்க?''

# இருளில் ஒரு வெளிச்சம்

கிறிஸ்மஸ் சிறுகதை

காலை எட்டு மணியிருக்கும். மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரிக்குச் சமீபமாக உள்ளூர் அச்சகத்தை ஒட்டினாற் போல அமைந்திருக்கும் அந்தச் சின்னஞ்சிறிய அறைக்கு முன்னால், சைக்கிள் விடுவதற்காகப் போடப்பட்டிருக்கும் சீமெந்துக் கட்டில் பத்துப் பதினைந்து பேர் குந்திக் கொண்டிருக்கிறார்கள். வயதானவர்களாகவும், வாழவழியில்லாததால் கையேந்துபவர்களாகவும் காட்சிதரும் அந்த ஏழைகளை அடுத்து, ஜென்ரில்மேன் கோலத்தில் ஆறேழு பேர் அங்கு நிற்பதும் தெரிகிறது.

இந்த இருவகைக் கூட்டத்தினரும் யாரோ ஒருவரை எதிர்பார்த்திருப்பதை அவர்களின் முகங்கள் துலாம்பரமாகக் காட்டுகின்றன. உள்ளத்தின் கவலைகளையும், எண்ண ஓட்டங்களையும் ஒன்றாகவே காட்டும் அம்முகக் கண்ணாடிகள் ஏதோ அன்று ஒருநாள் மட்டும்தானா அந்தச் சின்னஞ்சிறு அறையை முற்றுகையிடுகின்றன. இல்லவே இல்லை..... எப்போதும் இதே காட்சிதான்!

அதோ....... அவர் வந்து கொண்டிருக்கிறார். அறுபது வயதுக்கு மேல் மதிக்கத்தக்க அந்தக் கத்தோலிக்கத் துறவி ஆறு அடி உயரமாவது இருப்பார். நல்ல கறுப்பு. ஆனாலும் ஒரு துறவிக்கே உரிய பிரமச்சாரியக் கம்பீரம் கறுப்பிலும் ஒரு மிடுக்கைக் கலந்து விடுகின்றது. அளவுக்கு மீறி சிந்திப்பதனாலோ அல்லது இந்தச் சனங்களின் ஈனநிலை கண்டு கவலைப்படுவதனாலோ என்னவோ நன்கு வெளுத்துப் போன தலைமயிர் ஒவ்வொன்றாக உதிர்ந்து கொண்டிருக்க ஒன்றிரண்டு மட்டும், நாங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கீழே இறங்க மாட்டோம் என்று அடம்பிடிப்பது போல, துறவியின் உச்சித் தலையில் ஒட்டிக் கொண்டிருக்கின்றன.

நீண்ட வெண் அங்கி தரித்து இடையில் ஒரு கறுப்புப் பட்டியோடு காட்சி அளிக்கும் வித்தியாசமான அந்த மனிதர் வாய் நிறைந்த சிரிப்போடு, மிதித்த புல்லும் சாகாமல் நடந்து வருகின்றார். உள்ளத்தின் பூரணத்துவத்தைக் காட்டும் அந்த ஒளிச் சிரிப்பு, கருமேகத்திடையே பிரகாசிக்கும் நட்சத்திரம் போல் அனைவரையும் அள்ளிக் கொள்கிறது.

துறவி, அவசர அவசரமாகத் தனது அறைக்கதவைத் திறந்து உள் நுழைகின்றார். பின்பு அதே வேகத்தில் வெளியில் வந்த அவர், தன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அந்த ஏழை, எளிய ஜென்மங்களை நோக்கி எட்டி நடக்கின்றார். அவர்களின் கைகள் மட்டுமல்ல, மனங்களும் நிறைகின்றன.


கையும் மனமும் நிறைந்தவர்கள், அவரைக் கடவுளாகவே எண்ணிக் கைகுவிக்கிறார்கள். அவருக்குச் சிரிப்பு வருகிறது.

கூடவே கேட்கின்றார்.... "என்னை ஏன் கும்பிடுறீங்க....? நானும் உங்களைப் போல ஒரு மனிஷன் தான்"....

அவரின் வார்த்தைகள், மனத்தாலும் ஏழைகளான அந்த மனிதப் பூச்சிகளின் காதுகளில் விழுந்தனவோ இல்லையோ கும்பிட்ட கை எடுக்காமல் மெதுவாக வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். அதனைக் கவனித்த துறவிக்கு மீண்டும் சிரிப்புவருகிறது.

அடுத்து, ஜென்ரில்மேன்களுக்கான தரிசனம் ஆரம்பமாகின்றது. ஒவ்வொருவரோடும் அவர் நீண்ட நேரம் சிரித்துச்சிரித்து உரையாடுகின்றார். எவ்வித முகச் சுழிப்பும் இல்லாமல் அவர்கள் சொல்வதையெல்லாம் உற்றுக் கேட்கின்றார். இடைஇடையே ரெலிபோன் மணியின் நச்சரிப்பு.. எழுந்து போய் அதற்கும் பதில் சொல்கிறார்... விட்ட இடத்தில் இருந்து உரையாடல் மீண்டும் தொடர்கின்றது.

சந்திக்க வந்தவர்கள்



அலுவல்களை முடித்துக் கொண்டு திரும்புகின்றார்கள். அப்போது அவர்கள் முகத்தில் மட்டுமல்ல, துறவியின் முகத்திலும் திருப்தி தெரிகிறது. சிறிது நேரம் செல்கிறது..... கதவைச் சாத்திவிட்டு தனது அறைக்குப் பின் புறமுள்ள சிறுவர் பூங்காவிற்குள் அவர், அவசர அவசரமாக நுழைகின்றார்.

இருபது ஆண்டுகளுக்கு மேலாக இந்த மண்ணை சுடுகாடாக ஆக்கிக் கொண்டிருக்கும் யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளின் மனநலனுக்காகத் தாம் பெரிதும் சிரமப்பட்டு உருவாக்கிய அந்தச் சிறுவர் பூங்காவுக்குள் எப்போதும் போல அன்றும் நுழைந்த துறவியை குழந்தைகளின் கும்மாளம் வரவேற்கின்றது. அதனால், அதிகமாகவே கவரப்பட்டு ஆட்டமும் பாட்டுமாக பூங்காவை அமர்க்களப்படுத்திக் கொண்டிருக்கும் அந்தக் குழந்தைகளோடு தானும் ஒரு குழந்தையாக ஐக்கியமாகி விடுகின்றார்.

மட்டக்களப்பு நகரில் இருந்து இரண்டு மைலுக்கப்பால் சற்று ஒதுக்குப் புறத்தில் அமைந்திருக்கும் தமது தியான இல்லத்தில் அமர்ந்திருக்கிறார் இந்தத் துறவி. அவர் மனமெல்லாம் அன்று சிறுவர் பூங்காவில் தாம் கண்டு மகிழ்ந்த குழந்தைகளைச் சுற்றியே வலம் வருகின்றது.

எவ்வளவு அன்பான, புத்திசாலித்தனமான குழந்தைகள்.... இந்த நாட்டின் உண்மையான செல்வங்கள்... இந்த நாட்டின் உண்மையான செல்வங்கள் இந்தப் பிள்ளைகள்தான்...

குழந்தைகளின் நினைவில் குளித்துக் கொண்டிருந்தவர், சட்டென நாட்டை நரகமாக்கும் யுத்தத்தை நினைத்துக் கொள்கிறார். நினைவு அவரை நெருப்பாக சுடுகின்றது.

இந்த யுத்தத்தால எத்தனை குழந்தைகள் அநாதையாப் போயிற்றுதுகள்... தாய் தகப்பனை இழந்து அநாதைகளான இந்தச் சின்னஞ்சிறிசுகளைக் கவனிக்க யார் இருக்கிறாங்க...? இதுகளின் எதிர்காலம் எப்படி இருக்கப் போகுது...?

போரினால் பெரிதும் மனம் புண்ணாகிவிட்ட குழந்தைகள் பற்றிய நினைவுகளும் எண்ணங்களும் தமது நெஞ்சை நெருப்பாகச் சுட்டாலும், அந்த நெருப்பிலே நீண்ட நேரம் நிலைத்துவிட்ட அவரை, மேசையின் மீது இருந்த அந்த ஆங்கிலப் புத்தகம் தன் பக்கமாக இழுத்துக் கொள்கிறது.

முதல் நாள் இரவு படித்துவிட்டு, மேசையில் வைத்த "சமயமும் சமூகமும்" எனும் தலைப்பிலான அந்த ஆங்கிலப் புத்தகத்தைத் துறவியின் கரங்கள் பற்றிக் கொள்கின்றன. மனம் அதில் ஆழ்ந்து போகின்றது.

சமயம் சமூகத்தின் ஒரு பகுதி ஆகும். இந்த ஒரு பகுதிக்குள் இருந்துகொண்டு ஒரு துறவி அல்லது குரு ஆற்றும் பணி சடங்குமயமானது மட்டுமன்றி குறிப்பிட்ட ஒரு வட்டத்திற்கே அது உரியதாகின்றது. எனவே, ஒரு சமுதாயத்தின் மாற்றத்திற்காக மறுமலர்ச்சிக்காக உண்மையாகவே உழைக்க விரும்பும் ஒரு துறவி தன்னைச் சுற்றியுள்ள குறுகிய வட்டங்களை உடைத்தெறிந்துவிட்டு பரந்த அளவில் பணியாற்றும் போதுதான் அதனால் முழுச் சமுதாயமும் பெரும் பயன் அடைகிறது.

மனித சேவை என்பது எல்லை கடந்தது. இதற்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டு அன்னை தெரேசா....

புத்தகத்தில் உள்ள அந்த சிவப்பு வரிகளில் ஆழமாகவே லயித்துப் போன துறவி, அதற்கு மேல் தமது வாசிப்பைத் தொடராமல், அதே வரிகளையே மீண்டும் மீண்டும் அசைபோடுகின்றார். கூடவே, அன்னை திரேசாவின் வாழ்க்கை.. கல்கத்தா நகரம்..... தொழுநோயாளரின் பரிதாப நிலை...... அனைத்தும் அவரின் மனத்திரையில் விரிகின்றன...

சிந்தனை அலைகளுக்குள் நன்றாகவே சிக்கிக்கொண்ட துறவி, அவற்றின் அழுத்தம் காரணமாகச் சோர்ந்து போகின்றார். அந்த நேரம் பார்த்து ரெலிபோன் மணி அலறுகின்றது. எளிதில் எவ்வித உணர்ச்சிக்கும் ஆளாகாத அவர் றிசீவரை எடுத்துக் கொள்கிறார்.

ரெலிபோனில் யாரோ நீண்ட நேரம் கதைப்பது தெரிகிறது. துறவி சில கேள்விகளை மட்டும் இடைஇடையே கேட்கின்றார். முகம் மட்டும் வழக்கம் போல் அழுத்தமாகவே இருக்கிறது... றிசீவரை வைக்கிறார்.

மேசையில் இருந்த கடிகாரத்தை துறவி பார்க்கின்றார்.... எட்டு மணி... அது இரவு உணவுக்கான நேரம்.. ஆனாலும் அது பற்றிய பிரக்ஞையே இல்லாமல் உடனடியாக உடைமாற்றிக் கொண்டவர், அறையிலிருந்து வெளியே வந்து தமது ஜீப் டிரைவரைக் கூப்பிட்டுச் சொல்கின்றார்.

" நாம் இப்ப செங்கலடிக்கு அவசரமாகப் போக வேணும்.. அங்க ஏதோ பிரச்சினையாம்... சனங்களெல்லாம் வீடு வாசல விட்டுட்டு பாடசாலைகளிலேயும் கோயில்களிலேயும் இருக்கிறாங்களாம்.. பாவம்.."

இந்தச் சனங்களின் வாழ்க்கைப் பிரச்சினையில் அளவுக்கதிமாக அக்கறை எடுத்துக் கொண்டு அதற்காகவே அல்லும் பகலும் அலைந்து திரியும் துறவியின் மன இயல்பை நன்றாகவே அறிந்திருந்த டிரைவர் ஓடிப்போய் ஜீப்பை வெளியே எடுக்கிறார்.

இருள் இரவைத் தனது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் அமாவாசைக்காலம் அது. வெளி இருளை விட, உள் இருளாலேயே அடிக்கடி அவலங்களுக்குள்ளாகும் இந்த பரிதாபத்துக்குரிய மக்களை, நோக்கித் தெளிவான ஒரு மனித வெளிச்சம் போய்க்கொண்டிருக்கிறது. அந்த வெளிச்சத்தின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் உணர்ந்ததாலோ என்னவோ பிரதான வீதியின் 'செக் பொயின்டுகள்' எல்லாம் ஒதுங்கி வழிவிட்டு நிற்கின்றன.

-- வாகரைவாணன்.

(யாவும் கற்பனை)

# மின்னும் காளான்கள்



இங்கின் காளான்கள் என்ற ஒரு வகை உண்டு காளான்கள் பகலில் சாதாரணமாக இருக் கும் இவை இரவு மற்றும் பயங்கர மான மழை பெய்த பின்னர் ''பள பள'' வென்று மின்னு கின்றன. இரவுப்பூச்சி களிடம் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளத்தான் இப்படி ஒளி வீச கின்றனவாம். இவற்றை உண் பதற்காக வரும் இர வுப் பூச்சிகள் இவற் றின் வெளிச் சத் தில் நன்கு தெரிந்து விடுவ தால் இப் பூச்சி கள் தங்களது எதிரிக ளின் கண் களில் பட்டு விடு வோம் என்ற பயத் தில் இந்த ஜங் கின் காளான் களின் பக்கம் வரு வதே இல் லையாம்.

வே.ரமணன்,
தரம் – 9,
யா/கரணவாய் மகாவித்தியாலயம்.

## எமது பாடசாலை

எமது பாடசாலை மின்பெயர்பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி. இது 1951 ஆம் ஆண்டு நிறுவப் பட்டது.

எமது அதிபரின் பெயர் திரு. முத்துக் குமார சாமி. எமது அதிபர் – ஆசி ரியர்கள், மாணவர் களை அன்போடு வழி நடத்து கிறார்.


இங்கு க. பொ. த உயர்தரம் வரை வகுப்புக் கள் உள்ளன. எமது பாடசாலை ஆலயம், ஆய்வுகூடம், நூலகம், விளையாட்டு மைதானம் உட்பட எல்லா வசதிகளோ டும் அமைந்துள்ளது.

அத்துடன் வருடா வருடம் விளையாட்டுப் போட்டிகள், பரிசளிப்பு விழா, பல சமய, சமூக, கலாசார நிகழ்ச்சி களை நடாத்து வதிலும் முன் னிற்கின்றது. எமது பாட சாலையை நான் மதிக் கிறேன்.

எமது பாட சாலை யையிட்டு நான் பெரு மிதம் கொள்கிறேன்.

ஸ்ரீஸ்கந்தா திருவாரூரன்
ஆண்டு – 1B
இந்துக்கல்லூரி,
கொழும்பு.

கிறிஸ்மஸிற்காக நத்தார் தாத்தா பரிசுகள் கொடுப்பதற்கு வந்திருக்கிறார். ஆனால் வழி தான் சிக்கலாக இருக்கிறது. எங்கே சிறுவர்களுக்கு வழி காட்டி அவர்கள் நத்தார் தாத்தாவிடம் பரிசுகளை வாங்குவதற்கு உதவி செய்யுங்கள் பார்ப்போம்.





## சிந்தனைக்கு சில...

* சந்தேகம் எறிகுண்டை விடவும் எரிமலையை விடவும் உளைச்சலில் கொடுமையானது.
* அனுபவமே ஒருவனது உன்னத ஆசான் ஆவான்.
* நெஞ்சில் தைரியமும் உண்மையும் இருந்தால் தம்மைத் தாமே தற்காத்துக் கொள்ளலாம்.
* புகழை நாங்களே தேடிப் போனால் அது போதையாகி விடும்.
* எண்ணங்களுடன் சிறப்பான நோக்கங்கள் இணைந்தால் நல்ல விளைவுகள் ஏற்படும்.

நா. தாரணி, தரம் – 10,
கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்.

## யூரோ நாணயம்

பதினொரு ஐரோப் பிய நாடுகள் ஒன்று சேர்ந்து தமக் கென உரு வாக்கிய பொது நாண யமே யூரோ ஆகும்.

இது 1999 ஜனவரி 01 முதல் அமுலுக்கு வந் தது. ஆனால் 2002 ஜன வரியில் இருந்தே யூரோ நோட்டுக்களும் நாண யங்களும் புழக்கத் துக்கு வரவுள்ளன. இதன் பின் இந்நாடுக ளுக் கென தனித்தனி நாணயம் இருக்கமாட்டாது.

*இங்கிலாந்து டென் மார்க், சுவீடன் ஆகிய நாடுகள் யூரோ நாண யத்தை இன்னும் ஏற்றுக் கொள்ள வில்லை. அவர்கள் 2002 இன் பின் இதனை ஏற்றுக் கொள்வதாக அறிவித் துள்ளனர்.

க. துஷ்யந்தி, தரம் – 11,
யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.

## மரத்தில் வாழும் மீன்கள்!

மீன்கள் நீரில் வாழ்வது தான் உங்களுக்குத் தெரிந்தது. மரங்களில் மீன்கள் வாழ்கின்றன என்றால், உங்களுக்கு ஆச்சரியமாகத் தான் இருக்கும். இவ்வாறான மரத்தில் வாழும் மீன்கள் ஈரவலய காடுகளில் நீர்க் குட்டைகளை அண்மித்து வாழ்கின்றன. இவற்றை ''மட் ஸ்கிப்பர்ஸ்'' (Mud skippers) என்கிறார்கள். ஆனால் இவை முற்று முழுதாக மரங்களில் வாழ் வதில்லை. ஆனால் பெருமளவு காலத்தை மரங்களிலேயே கழிக் கின்றன. இவை தமது உடலிலுள்ள ஒட்டும் தன்மை வாய்ந்த அங்கங்களினால் மரத்துடன் ஒட்டிக் காணப்படுகின்றன. இவை வெளியில் இருந்து ஓரளவிற்கு சுவாசிக்கும் ஆற்றலைக் கொண்டுள் ளன. இவை தமது உணவுக் கால்வாயில் நீரைச் சேகரித்து வைத்துக் கொண்டே அருகிலுள்ள மரங்களில் ஏறுகின்றன? இவை வாழும் தடாகங்களை பெரும்பாலும் பனிக் கட்டிகள் மூடிக் கொள்கின்றன. இதனால் உணவு கிடைப்பது மிகவும் அரிதாகவே இருக்கின்றது. எனவே மரங்களில் உள்ள பாசிகளை (இம்மரங்கள் ஈரமான சூழலில் வாழ்வதால் பாசிகள் நிறைந்து காணப் படுகின்றன.) உண்பதற்காகவே இவை மரங்களில் ஏறுகின்றன.

யாழ் – இந்துவின் மைந்தன்

## ஒரு தீர்

ஷர்மிலா

## ஆசான்

ஒரு குழந்தை பெற்றோருக்கு அடுத்தபடியாக காணும் தெய்வம் குரு. அன்பினாலும், பண்பினாலும் மாணவரை நல்வழிக்கு இட்டுச்செல்வதில் பெரும் பங்கு வகிப்பவர்கள் ஆசிரியர்களே! என் கூறுவதில் ஐயமில்லை.

ஏன்! இவர்களை கொடைவள்ளல்கள் என்றும் கூறலாம். தாம் கற்ற கல்வியை தாரைவார்த்துக் கொடுக்கிறார்கள். அது மட்டுமா தானறிந்த உலகியல் விபரங்களையெல்லாம் மாணவர்களாகிய எமக்கு சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு அள்ளி அள்ளி வழங்கி எமது அறிவை விருத்தி செய்கின்றனர். எமது சந்தேகங்களை தீர்த்து நன்கு புரியும்படி அழகாகவும், தெளிவாகவும், விரிவாகவும் எடுத்துரைக் கின்றனர்.

தீய வழியில் செல்லும் மாணவரைக் கூட தமது அன்பினால் நல்லவனாக்கும் வல்லமை கொண்டவர்கள். சமூகத்தில் நற்பிரஜைகளை உருவாக்கும் பிரமாக்கள். எம் வாழ்வு தித்திக்க தம் வாழ்வை அர்ப்பணிக்கும் தியாகிகள்.

உ. லலிதாம்பிகை
தரம் – 10A, ப/ நில்பார்க் த.ம.வி

## சிறுவர் கைவண்ணம்



K. கோஷலா,
தரம் – 7A,
இ/றை. தமிழ் மகா வித்தியாலயம்,
பலாங்கொடை.



த. தர்ஷிகா,
தரம் – 8,
யா/சாவ. இந்துக் கல்லூரி.



அமெரிக்காவின் நாசா வெப்தளத்தின் மூலம் சூரியகுடும்பம், செயற்கைக் கோள்கள் உள்ளிட்ட பல்வேறு விண்ணுலகபொருட்களைநம்கண்ணருகில் கொண்டு வந்திருக்கின்றனர். அத்துடன் 3 டி அனிமேஷனில் அமைக்கப்பட்டுள்ள படங்கள் சிறுவர் களைக்குதூகலிக்கச்செய்வதாகஅமைந்துள்ளது. இதே போன்று ஹப்பிள் ஸ்பேஸ் டெலஸ்கோப்பினால் எடுக்கப்பட்ட முக்கிய படங்களைப் பார்ப்பதற்கும் வெப்தளங்கள் இருக்கின்றன.

## வெப்தளத்தில் பிரமிக்க வைக்கும் சூரிய குடும்பம், செயற்கைக் கோள்கள்

### விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்புகளும்

1. நியூட்டன்........................ புவியீர்ப்புவிசை
2. தொம்சன்............................ இலத்திரன்
3. இரதபோட்............................ புரோத்திரன்
4. சட்விக்............................ நியூத்திரன்
5. வில்லியம்ஹார்வே......... குருதிச்சுற்றோட்டம்
6. லான்ஸ்ரெய்னர்.............குருதி இனங்கள்
7. ஹேட்ஸ்..................வானொலி அலைகள்
8. லீனியஸ்..................அங்கிகளின் பெயரீடு
9. மெண்டலீவ்.......... ஆவர்த்தன அட்டவணை
10. லாவோசியர்..............திணிவுமாறாவிதி

ரூ. கோகுலரமணன், தரம் – 13,
பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.

இமயமலைப் பகுதியில் தங்கம், சீசியம் உள்ளிட்ட ஏராளமான கனிமப் பொருட்கள் மண்டிக்கிடப்பதாக புவியியல் ஆராய்ச்சியாளர்கள் தெரி வித்துள்ளார்கள். லடாக் உள்ளிட்ட இமய மலைப் பகுதியில் கடந்த ஆண்டு களாக ஆராய்ச்சி செய்ததில் அங்கு தங்கம், சீசியம், லித்தியம், போரெக்ஸ் போன்ற கனிமங்கள் மண்டிக் கிடக்கின்றன. ஆனால் இவற்றை தோண்டி எடுப் பதற்குரிய நவீன கருவிகள் இந்தியாவில்



## அறிவியல் விந்தைகள்

இல்லை. இரண்டு கிலோ மீற்றர் ஆழத்துக்குக் கீழே மேற்கண்ட கனிமப்பொருட்கள் உள்ளன.

வெளிநாட்டில் உள்ளது போன்ற அதிநவீன கருவி வசதியில்லாததால் இவற்றை பயன்படுத்த இயலாத நிலை உள்ளது. தற்போது விண் ஆராய்ச்சி நிலையங்கள் ரொக்கெட் மூலம் செயற்கைக்கோளை விண்ணுக்கு செலுத்துகின்றன. இந்த ரொக்கெட்டின் எரிபொருள் பாகத்தில் சீசியம் முக்கிய பொருளாக பயன்படுத்தப்படுகிறது. இமயமலைப் பகுதியில் வெந்நீர் ஊற்றுக்கள் உள்ளன. இவை மூலம் 10 ஆயிரம் மெகாவோல்ற் மின்சாரம் வரை தயாரிக்கலாம். இதுபோன்ற ஊற்றுக்கள் உள்ள இடத்தில் லித்தியம், கந்தகம், ஆன்டிமனி, பாதரசம், காரீயம், துத்தநாகம், கோபால்ற, தங்கம், சீசியம் போன்றவை மலிந்து கிடக்கின்றன. ஒரு கிராம் சீசியத்தின் விலை மூவாயிரத்து நூற்று இருபது ரூபாய். எனவே, இந்த வளங்களை பயன்படுத்தினால், இந்தியா பொருளாதாரத்தில் சிறந்தோங் கும். இமயமலைப் பகுதியில் 3 கிலோ மீற்றர் ஆழத்தில் பூமி யின் வெப்பம் 250 பாகை செண்ரி கிரேட் அளவுக்கு உள்ளது.

கடந்த 20 ஆண்டுகளாக சீனாவும் இது போன்ற ஆராய்ச்சிகளை மேற்கொண்டு கனிமங்கள் மண்டிக்கிடக்கக் கூடிய 500 இடங்களை தேர்வு செய்து ள்ளது. தற்போது அதிநவீன கருவி களை கொண்டு இவற்றை தோண்டியெடுக்கும் பணியை ஆரம்பித் துள்ளது.

## கிவிபற்றி அறிந்துகொள்வோம்

கிவிப் பறவைக்கு சிறகுகள் இல்லை. இதனால்பறக்கமுடியாது. பறவைஇனங்களிலேஇது வித்தியாசமானது. நெருப்புக்கோழி இனத் தைச் சேர்ந்த பறவைகளில் மிகவும் சிறியது. இது பகல் முழுக்கக்குழிகளைவிட்டுவெளியேவரு வதில்லை. இரவில் தான் வெளியே வந்து நாக்குப் பூச்சி இருக்கும் இடத்தை மோப்ப சக்தியினால் கண்டு பிடித்து உண்ணும். இதனுடைய அலகு நீளமாக இருக்கும். இதனுடைய அலகில் சுவாசத்துளைகள் இருப்பதினால் அலகை குழிகளுக்குள் விட்டு நாக்குப் பூச்சிகள் இருக்கிறதா இல்லையா என்று எளிதில்கண்டுபிடித்துவிடும்.

கிவி ஆண்டுக்கு இரண்டே இரண்டு முட்டைதான் இடும். ஆனால் அளவில் பெரியதாக இருக்கும். இதனால் இவை எண்ணிக்கையில் குறைவாகவே காணப்படுகின்றன.

எம்.ஐ.எம்.றிஸ்வான், தரம் 10 "பி"
சாஹிறா தேசிய பாடசாலை, கல்முனை.

## எனது பொழுது போக்கு

எனது பொழுது போக்கு புத்தகம் வாசித்தல் ஆகும். இது ஒரு சிறந்த பொழுது போக்காகும். ஏனென்றால், நல்ல புத்தகங்களை வாசிப் பதன் மூலம் நாம் பல நல்ல விடயங்களை அறிந்து கொள்ளலாம். நல்ல புத்தகம் ஒரு சிறந்த நண்பன் என்பார்கள்.

நான் பல புத்தகங்களை சேகரித்து வைத்துள் ளேன். எனது புத்தக அலுமாரியில் மகாத்மா காந்தியின் சத்திய சோதனை, மகாகவி பாரதியாரின் கவிதைகள், திருக் குறள், பகவத் கீதை மற்றும் அனைத்து புத்தகங்களும் உள்ளன.

பே. பிரதீபன்,
தரம் – 7,
கி.ச.பா, வெள்ளவத்தை



'ஸ்கேட்டிங்' எனப்படும் பனிச் சறுக்கு விளை யாட்டுக் கள் குளிர் வலய நாடுகளில் மிகவும் பிரபலம் பெற் றவை. கோல்ப் விளை யாட்டை அடுத்து இந்த விளை யாட்டையே பெரும் பாலான மக்கள் விரும்பு கின்றனர்.

## விடுகதைகள்

1. குளிக்காவிட்டால் சிவப்பு குளித்து விட்டால் கறுப்பு அது என்ன?
2. அண்டை வீட்டில் குடியிருக் கும் அக்கா தங்கை நாங்கள் பக்கத்தில் இருந்தாலும் தொட்டுக் கொள்ள மாட்டோம். நாங் கள் யார்?

விடைகள்

1. நெருப்பு
2. விழிகள்

க. கேதார்ணி, தரம் – 9,
உடுவில் மகளிர் கல்லூரி.

# படைத்தரப்பின் போர் முனைப்பு கிழக்கில் மீண்டும் அதிகரிப்பு

## துணைப் படையினர் இன்னும் அரசின் செல்லப் பிள்ளைகள்

**பொ**துஜன ஐக்கிய மு ஏழு ஆண்டுகால ஆட்சி மு ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம பதவிக்கு வந்தபோது தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட சிறு நம்பிக்கையும் தற்போது தளர ஆரம்பித்து விட்டது. எதிர்பார்த்ததுக்கு மாறாக பாதுகாப்புக் கெடுபிடிகளும், போர்ச் சூழலும் அதிகரித்து வருகின்றன. கிழக்கில் நிலைமை மோசமடைந்து வருகின்றது.

அரசாங்கத்திற்கும் அரச படைகளுக்கும் பெரும் நெருக்கடியைக் கொடுத்துக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளை அழித்து விட்டால் அல்லது ஓரங்கட்டி தனிமைப்படுத்தி விட்டால் பிரச்சினை தீர்ந்து விடும் என்ற மனப்பாங்கே சிங்களத் தலைவர்களுக்கு இன்னும் இருந்து வருகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்திலும் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள், மனித உரிமை மீறல்கள், தாக்குதல்கள் படுகொலைகள் நடைபெற்றன. ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட ஆட்சிக்காலச் சம்பவங்களையும் மக்கள் இன்னும் மறக்கவில்லை.

1990 ஆம் ஆண்டிலிருந்து 1994ஆம் ஆண்டுவரை மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் சுமார் 10 ஆயிரம் பொதுமக்கள் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

சித்திரவதைக் கூடங்களும், இரத்தவாடையும், பிணவாடையும் கிழக்கு மாகாணத்தை ஆக்கிரமித்திருந்தன. சிங்கள மக்கள் பலம் வாய்ந்த மரம். அதை சுற்றிப்படரும் சிறு கொடிகள்தான் தமிழர்கள் என பேசி இந்த நாட்டில் தமிழ் மக்கள் எந்த உரிமையையும் கோரமுடியாது என்று அன்றைய ஜனாதிபதி விஜயதுங்க கூறிய இருண்டகாலம் அது.

இந்தக் கொடிய யுகத்திலிருந்து மீளமுடியாதா என ஏங்கி கண்ணீர் விட்டுக் கொண்டிருந்த வேளையில் தான் 1994இல் சந்திரிகா குமாரதுங்க சமாதானப்புறாவாக இலங்கை மக்கள் முன் குறிப்பாக வடக்கு கிழக்கு மக்கள் முன் தோன்றினார்.

''நீண்டகாலமாக தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டு வந்திருக்கிறது. இனப்பிரச்சினை இருப்பதை ஏற்றுக் கொள்கிறேன். என்னிடம் ஆட்சி அதிகாரத்தைத் தந்தால் விடுதலைப்புலிகளுடன் பேசி ஒருவருடகாலத்திற்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டு விடுவேன். கொடிய யுத்தத்தை முற்றாக நிறுத்திவிடுவேன். சர்வாதிகாரப் போக்குடைய ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு எனக்கு வாக்களியுங்கள்'' எனக் கூறி சந்திரிகா அம்மையார் ஆட்சியை கைப்பற்றிக் கொண்டார்.

### தமிழ்மக்கள் வைத்த நம்பிக்கை

சந்திரிகா அம்மையாருக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பாக நூறுவீத தமிழ் வாக்காளர்களைக் கொண்ட பட்டிருப்புத் தொகுதியில் 85 வீதத்திற்கு அதிகமான வாக்குகள் கிடைத்தன.

சந்திரிகா அவரின் சொந்த ஊரான அத்தனகல தொகுதியை விட இலங்கையிலேயே ஆகக்கூடிய வாக்கை பட்டிருப்பு தொகுதியிலேயே பெற்றார். ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்த வெறுப்பும் சமாதானத்தைக் கொண்டு வருவேன் என்ற சந்திரிகாவின் வாக்குறுதியும் தான் அதற்குக் காரணம்.

சர்வ அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை கையேற்று 7 வருடங்கள் கடந்துவிட்டன. ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்படவும் இல்லை. இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவும் இல்லை. மாறாக மிகக்கோரமான யுத்தத்தை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆரம்பித்தது. வடக்கில் மிகப்பெரிய இடப்பெயர்வும், படுகொலைகளும் இடம்பெற்றன. கிழக்கிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் என்ற போர்வையில் தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு தொடர்ந்தது. ஐக்கிய தேசியக்கட்சிக்கு என்றும் சளைத்தவர்கள் அல்லர் என்பது போல படுகொலைகள், கைதுகள், சித்திரவதைகள், காணாமல்போதல் என்பன தொடர்ந்தன.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் தமிழ் மக்கள் மட்டுமல்ல, சிங்கள மக்களும் நம்பிக்கை இழந்ததன் விளைவாகவே இன்று ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி பீடம் ஏறியிருக்கிறது.

ஏதோ ஒரு நூல் இழை நம்பிக்கையில் தமிழ் மக்கள் ஆட்சி மாற்றம் ஒன்றை விரும்பினார்கள். அது கைகூடி இருக்கின்ற போதிலும் அவர்களின் நம்பிக்கைகள் அனைத்தும் சிதறடிக்கப்படும் வகையிலான நடவடிக்கைகளே தற்போதைய ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலத்திலும் தொடர்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு உழவு இயந்திரங்களை எடுத்துச்செல்ல படையினர் தடை விதித்துள்ளனர். முன்னர் விதிக்கப்பட்டிருந்த தடை தேர்தல் காலத்தில் சற்றுத் தளர்த்தப் பட்டிருந்தது. தேர்தல் முடிந்ததும் மீண்டும் இத்தடை அமுல்படுத்தப்பட்டிருக்கிறது.

இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு உழவு இயந்திரங்களை எடுத்துச் சென்றால் விடுதலைபுலிகள் அதை பயன்படுத்துவார்கள் என்று காரணம் கூறியே தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

விடுலைப்புலிகள் தமது பாவனைக்கு அதிகமான உழவு இயந்திரங்களையும், வாகனங்களையும் வைத்திருக்கிறார்கள். அவர்கள் பொதுமக்களின் உழவு இயந்திரங்களை பாவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற உண்மையை படைத்தரப்பு உணர மறுக்கிறது.

தேர்தலுக்குப்பின்னர் கிழக்கு மாகாணத்தில் படைத்தரப்பின் போர் முனைப்புகள் அதிகரித்தே காணப்படுகின்றன.

விடுதலைப்புலிகள் மீது பதுங்கியிருந்து தாக்குதல், சுற்றிவளைப்பு தேடுதல், கைதுகள் என்பன அதிகரித்து வருகின்றன.

### எறிகணை வீச்சு

என்ற படை நடவடிக்கை ஒன்றையும் பாரிய அள ில் மேற்கொள்வதற்கான ஒத்திகைகளை மட்டக்களப்பில் உள்ள படையினர் மேற்கொண்டு வருகின்றனர். தினசரி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களை நோக்கி இரவு வேளையில் எறிகணைத் தாக்குதல்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

படையினருடன் இணைந்து செயற்படும் துணைப்படையினரின் அராஜகப்போக்கும் அதிகரித்து வருகிறது. அதற்கு படையினரின் ஆசீர்வாதம் தொடர்ந்து கிடைத்து வருகின்றது. மட்டக்களப்பு ஆரையம்பதி, செங்கலடி, வாழைச்சேனை ஆகிய இடங்களில் இராணுவத்தினருடன் இணைந்துசெயற்படும் ...னரின் அராஜகங்கள் ...ன்ற போதிலும் அது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்தால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை.

ஆரையம்பதியில் இராணுவ துணைப்படையாக செயற்படும் ராசிக் குழுவைச் சேர்ந்தவர்கள் மேற்கொண்டு வரும் சித்திரவதைகள், மனித உரிமை மீறல்கள் குறித்து 23 தடவைகள் பொலிஸில் முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என ஆரையம்பதி இராஜதுரை கிராமத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் மட்டக்களப்பு மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருக்கிறார்.

''இம்மாதம் முதலாம் திகதி வீட்டிற்குள் நுழைந்த ராசிக்குழு உறுப்பினர்கள் எனது கணவரை கடுமையாகத் தாக்கியதையடுத்து கணவர் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சி...சை பெற்றார். வைத்தியசாலை பொல...ஸாரிடம் இது குறித்து முறை...ட்ட போதும் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. பின்னர் காத்தான்குடி பொலிஸில் முறைப்பாடு தெரிவித்துவிட்டு வரும் வழியில் அதே குழுவினர் மீண்டும் தாக்கினர். ஆரையம்பதி விசேட அதிரடிப் படையினரும் அவர்களுக்கு உதவி வருகின்றனர்'' என அப்பெண் தெரிவித்திருக்கிறார்.

ஆனாலும் படையினரோ பொலிஸாரோ துணைப்படையினருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக துணைப் படையினரை தமிழ் மக்களுக்கு எதிரான அராஜகங்களுக்கு தூண்டும் நடவடிக்கைகளுக்காகவே படையினர் பயன்படுத்தி வருகின்றனர்.

கிழக்கில் சந்திரிகா அரசின் செல்லப்பிள்ளைகளாக இருந்த துணைப்படையினர் இப்போது ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி அரசின் செல்லப்பிள்ளைகளாக மாறியிருக்கிறார்கள்.

— துவாரகன்

# ஆணா, பெண்ணா? நீங்கள் விரும்புவது இனிக் கிடைக்கும்!

பிரசவ அறைக்குள் மனைவியை அனுப்பிவிட்டு —வெளியே கணவன் கையைப்பிசைந்த படி அங்கும் இங்கும் உலாவ திடீரென அறைக்குள் இருந்து குழந்தையின் அழுகுரல் கேட்கும்.

உலாவிக் கொண்டிருக்கும் கணவன் திடீரென நின்று— மகிழ்ச்சியில் சிரித்து, தனது சாதனையை எண்ணி மகிழ்ந்தவாறு அறை வாசலைப் பார்த்தபடி இருக்கிறான்.

பிரசவ அறையை திறந்து கொண்டு வெளியே வரும் தாதியிடம் ஓடோடிச் சென்று ஆணா பெண்ணா என்று கேட்கிறான். அவன் பதிலைச் சொல்ல — அதனைக் கேட்டு அவர் பூரித்துப் போவது தமிழ் படங்களில் அடிக்கடி இடம் பெறும் காட்சி.

ஆனால் போகிற போக்கை பார்த்தால் இனிமேல் இவ்வாறான காட்சிகளை நிஜத்திலும் சரி— திரையிலும் சரி காணமுடியாது போலிருக்கிறது. ஏனென்றால் இவ்வாறான சிரமமெதுவும் இல்லாமல் உங்களின் அடுத்த 'ரிலீஸ்' ஆணா பெண்ணா என்பதை ஏற்கனவே அறிந்து ரொபியோ— கற்கண்டோ, றோஸ் கலர் உடுப்போ, நீலக்கலர் உடுப்போ, வாங்கி வைத்து விட்டு ஹாயாக ஆஸ்பத்திரிக்கு போய் பிள்ளையை பெற்றுக் கொண்டு வர மருந்துகள் தயாராகிவிட்டன.

அமெரிக்காவில் கரோலினா மாநிலத்தில் உள்ள ஒரேஞ்ச்பேர்க் நிறுவனம் இதற்காக ஜென் செலக்ட்கிற் (Gen select kit) என்ற மருந்தை கண்டுபிடித்து விட்டது. இந்த மருந்தை விற்பனைக்கும் விட்டுள்ளது. இதற்காக வெப் தளங்களிலும்— செய்திப் பத்திரிகைகளிலும் விளம்பரங்களை அள்ளி வீசிக் கொண்டிருக்கிறது.

உங்களுக்கு ஆண் குழந்தை வேண்டுமா?. அல்லது பெண் குழந்தை வேண்டுமா? நீங்களே தீர்மானித்துக் கொள்ள நாங்கள் தயாரித்துள்ள மருந்தை பயன்படுத்துங்கள். நூற்றுக்கு 96 சதவீதம் வெற்றி நிச்சயம் என்கிறது அந்த நிறுவனத்தின் விளம்பர வாசகம்.



விளம்பரத்தைப் பார்த்துவிட்டு ஜென் செலெக்ற் கிற் மருந்தைப் பெற்று கொள்ள பலரும் முண்டியடிக்கிறார்கள். விற்பனை ஓடர்கள் குவிந்துபோக தயாரிப்பு மந்தமடிக்க குழம்பிப் போயிருக்கிறார்களாம் உற்பத்தி நிறுவனமான ஒரேஞ்ச் பேர்க் காரர்கள்.

கடவுளின் கையில் இருந்த படைத்தல், காத்தல், அழித்தல், தொழிலில்— காத்தல் ,அழித்தல் தொழில்களை எல்லாம் அபேஸ் பண்ணிவிட்ட விஞ்ஞானிகள்— கடைசியாக இருந்த படைத்தல் தொழிலிலிலும் கைவைத்து விட்டார்கள். குளோனிங் முறை ில் குழந்தைகளை உருவாக்கப் போவ ாக மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் இறுதி நேர சஸ்பென்ஸ் விடயமாக இருந்த இந்த விடயத்திலும் கைவைத்து விட்டார்கள்.

ஜென் செலெக்ற் கிற் மருந்து 4 சமாச்சாரங்களை உள்ளடக்கி இருப்பதாக விளம்பரங்களில் தெரிவித்துள்ளது ஒரேஞ்பேர்க் நிறுவனம்.

ஒரு பெண்ணுக்கு என்ன பிள்ளை பிறக்கும் என்பதை, அந்தப் பெண் கருத்தரிப்பதற்கு முன், கரு முட்டையை சுற்றியுள்ள சில ரசாயனப் பொருட்களின் அளவைக் கொண்டே நிர்ணயிக்க முடியும். எனவே இந்த மருந்துப் பெட்டியில் இருவகை மருந்துகள் உள்ளன.

ஆண் குழந்தை வேண்டுமென்றால் அதற்கான மருந்தும் பெண் குழந்தை வேண்டுமெனறால் அதற்கான மருந்தும் அந்தப் பெட்டியில் உ...ளன. விரும்பிய மருந்தை சாப்பிட்டால் விரும்பி... குழந்தையை பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரு பெண்ணின் உடலில் உள்ள வெப்ப மாறுபாட்டின் அடிப்படையிலேயே கருத்தரிப்பில் மாறுபாடு ஏற்படுவதாக மருத்துவ அறிஞர்கள் கூறுகின்றார்கள். ஆகவே ஒரு பெண் எந்த நேரத்தில் கருத்தரிக்க வேண்டும் என்பதை கணிப்பிடக்கூடிய ஒவ்லேஷன் பிரிடிக்டர் (ovulation predictor) என்ற கருவியும் இந்த மருந்துகளுடன் பெட்டிக்குள் வைக்கப்பட்டுள்ளது.

இன்னும் குழந்தை பெற விரும்பும் தம்பதிகளின் உணவுக் கட்டுப்பாடு முறை பற்றிய அறிவுறுத்தல்களும், மருந்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

எல்லாவற்றுக்கும் மேலாக உடலுறவின் போது பிறப்புறுப்பில் சுரக்கும் அமிலத்தன்மை அதிகமாக இருந்தால் பெண் குழந்தை என்றும்— Alkaline எனப்படும் காரமான தன்மை அதிகம் சுரந்தால் ஆண் குழந்தை என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் தேவைக்கேற்ப அமிலத்தன்மையை அதிகரிக்கச் செய்யும் வேலையை அல்லது காரத்தன்மையை சுரக்கச் செய்யும் வேலையை இந்த மருந்து செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் இந்த மருந்துக்கு கடுமையான எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது. அமெரிக்க கம்பனிகள் அடிக்கடி இவ்வாறான அதிரடி மருந்துகளை வெளியிட்டு மில்லியன்— பில்லியன் கணக்கில் பணத்தை வசூலித்துக் கொண்டு சென்று விடுவது வழக்கம். இதுவும் அதேபோல் ஒரு நடவடிக்கைதான் என்று வைத்தியர்கள் விசனப்படுகின்றனர்.

ஒரேஞ் பேர்க்— ஆண் குழந்தையோ— பெண் குழந்தையோ, பெற்றுக் கொள்ள மருந்து தருகிறோம் என்றுதான் சொல்லுகிறதே தவிர அந்த மருந்தில் என்ன ரசாயனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன என அறிவிக்க வில்லை. எனவே இதனை சாப்பிட்டால் நல்ல பலன் கிடைக்குமா? பக்கவிளைவுகள் வருமா? அல்லது பிறக்கின்ற குழந்தை குறை பாடுகளுடன் பிறக்குமா? என்பன போன்ற விடயங்கள் இன்னமும் உறுதிப்படுத்தப்படாத நிலையிலும் பல்வேறு தரப்பிலிருந்தும் ஆதரவு கிளம்பியிருக்கும் நிலையிலும் அமெரிக்க நிறுவனமான ஒரேஞ் பேர்க் காட்டில் டொலர் மழை பெய்யத் தொடங்கிவிட்டது.

—காண்டி

# குப்பைக்குள் வாக்குச்சீட்டுக்கள் குலைநடுங்கும் அதிகாரிகள்

மழை விட்டாலும் தூவானம் விடாது போலிருக்கிறது.

இலங்கைச் சரித்திரத்திலேயே ஆகக் கூடுதலான வன்முறைச் சம்பவங்க ளுடன் நடந்தேறிய தேர்தல் திருவிழா முடிந்து விட்டது. இந்த நிலையில் அப்பாடா என்று பெருமூச்சு விட்டு ஆறுதலடைந்த போது, இப்போ அதிர்ச்சியான தகவல் வெளியாகி இருக்கிறது.

கடந்த 17ஆம் திகதி திங்கட்கிழமை வவுனியாவில் உள்ள குப்பைத் தொட்டி களில் கிடந்த குப்பைகளை அள்ளிக் கொண்டு வந்த நகர சபை சுத்திகரிப்பு ஊழியர்கள் பஸ் நிலையப் பகுதியில் இருந்த குப்பைத் தொட்டியொன்றில் கிடந்த பொருட்களை கண்டு அதிர்ச்சி அடைந்து போயினர்.

அலறி அடித்துக் கொண்டு ஓடிப்போய் பொலிஸிலே சொல்ல, பொலிஸாரும் வந்து பார்த்தனர்.

கடந்த தேர்தலில் வாக்களிப் பதற்காக பயன்படுத்தப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் கிழிக்கப்படாத புத்தகக் கட்டுக்களாக அங்கே கிடந்தன.

அதிலும் அவ்வளவு கட்டு வாக்கு சீட்டுகளிலும் வவுனியாவில் போட்டியிட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் சின்னமான உதயசூரியன் சின்னத்துக்கும், போட்டியிட்டு வெற்றி பெற்ற 3 நாடாளுமன்ற உறுப்பினர்களின் இலக்கத்துக்கும், புள்ளடியிடப் பட்டிருந்தன.

இவ்வாறு புள்ளடியிடப்பட்ட ஒவ்வொன்றிலும் 50 வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய 23 புத்தகங்களை கைப்பற்றி பொலிஸார் எடுத்துச் சென்றனர்.

உடனேயே வவுனியா தேர்தல் ஆணையாளருக்கு தகவல் பறந்தது. அவரும் அலறி அடித்துக் கொண்டு ஓடிவந்தார். பொலிஸாரிடம் இருந்த வாக்குச் சீட்டுக்களை அவர் பார்வையிட்டார். அவை போலியானவை அல்ல உண்மையான வாக்குச் சீட்டுக்கள் தான் என்பதை உறுதிப்படுத்தினார்.

தொடர்ந்து வவுனியாவை பரபரப்பு பற்றிக் கொண்டது. சம்பவத்தை கேள்விப்பட்டு பலரும் பொலிஸ் நிலையத்தை நோக்கிப் படை யெடுத்தனர். தேர்தலில் போட்டியிட்டு தோற்றுப்போன பலர் உண்மை நிலையை ஆராய்ந்து

## பாதுகாப்பை மீறிவெளியே எப்படி வந்தன?

பாராமல் புலம்பித் தீர்த்தனர். கூடிநின்ற பலர் தமது ஊகங்களுக்கு ஏற்ப வதந்திகளை அள்ளி வீசினர்.

இதனால் உண்மை நிலை என்ன என்பதை அறிய ஆவல் எம்மை உந்தித் தள்ளியது. கொஞ்சம் பொறுமையாக விசாரித்துப் பார்க்கக் கிளம்பினோம்.

### உண்மை நிலை என்ன?

வாக்குச் சீட்டு என்பது மிகவும் ரகசியமாக கட்டிக்காக்கப்பட வேண்டிய பொருள். இது செயலக வளவிலிருந்து எப்படி வெளியே வந்தது என்று கேட்டார் வவுனியாவிலுள்ள நீண்ட அரசியல் அனுபவமுள்ள பிரமுகர் ஒருவர்.

அதாவது கொழும்பிலிருந்து கணக்கிட்டு அனுப்பப்படும் வாக்குச் சீட்டுக்கள் செயலக களஞ்சியத்தில் பாதுகாக்கப்படும். தேர்தலுக்கு முந்திய தினங்களில் அது வாக்களிப்பு நிலைய அதிகாரிகளுக்கு வழங்கப்படும். வாக்களிப்பு முடிந்ததும் வாக்களித்தோர் விவரங்களுடன் எஞ்சிய வாக்குச் சீட்டுக்கள் திரும்ப மாவட்ட தேர்தல் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்படும்.

மாவட்ட தேர்தல் ஆணையாளர் அவற்றை கணக்குப் பார்த்து பொறுப்பேற்று மீண்டும் களஞ்சியத்தில் வைப்பார். பின்னர் அவை வெளியே போய் விடாதபடி பாதுகாத்து 6 மாதங்களில் எரித்து அழித்து விடுவார்கள். இதுதான் வாக்குச்சீட்டுக்கள் கையாளப்படும் நடைமுறை.

இதில் வாக்குச் சீட்டுக்கள் அதுவும் புத்தகக் கட்டாக அதிலும் ஒன்று இரண்டல்ல 23 புத்தகங்கள் வெளியே போனது எப்படி என்று கேட்டார் அந்த அரசியல் பிரமுகர். இது செயலகத்திலுள்ள பெரிய தலைகளின் அனுசரணையில்லாமல் நடந்திருக்கவே முடியாது என்று அவர் அடித்துச் சொன்னார்.

இதனை இப்படியே வவுனியா மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளரிடம் சொன்னோம்... ''அப்படி எதுவுமில்லை, தேர்தல் முடிந்த பின்னர் வாக்குச் சீட்டு விடயத்தில் கொஞ்சம் அசமந்தமாக இருந்து விட்டோம். அதனை பயன்டுத்தி எவரோ வெளியில் எடுத்துச் சென்று விட்டார்கள் அவ்வளவுதான்'' என்றார்.

ஆனால் இதனை நாம் பேசிய அரசியல் பிரமுகரிடம் கூறிய போது அவர் அதனை வன்மையாக மறுத்தார். செயலகத்திலிருந்து வெளியில் களவாக எடுத்துச் செல்லப்பட்டது என்று சொல்லப்படுவது வெறும் புலுடா. சுற்றி வர பொலிஸார் காவல்காக்க ஒரு துரும்பை கூட வெளியே போகவிடாமல் காவல் போடப்பட்டிருக்கிறது.

''தேர்தலன்று வாக்குகள் எண்ணப்படும் போது கூட அனுமதி அட்டை பெறாத வேட்பாளர்களை கூட செயலக வளவினுள் செல்ல அனுமதிக்கவில்லை. இந்த நிலையில் வாக்கு சீட்டுக்கள் வெளியே எடுத்துச் செல்லப்பட்டன என்றால் நம்பக் கூடிய காரியமா?'' என்றார்.

எமக்கும் அது நியாயமாகவேபட்டது. இந்த வாக்குச் சீட்டு தில்லு முல்லுகள் இரண்டு காரணங்களுக்காக நடத்தப்பட்டிருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது

1. வாக்குச் சீட்டுக்களை ஏற்கனவே அதிகாரிகளின் அனுசரணையில் பெற்று அவற்றைக் கொண்டு கள்ளவாக்குகளை நேரடியாக போடுவது. அதாவது படிப்பறிவற்றவர்களிடம் வாக்காளர் அட்டையை கொடுத்து கள்ளவாக்கு போடச் சொன்னால் அவர்கள் மாறிக் கீறக் கூடிய சாத்தியம் இருக்கிறது.

எனவே நேரடியாகவே கீறப்பட்ட வாக்குச் சீட்டுக்களை அவர்களிடம் கொடுத்து வாக்களிப்பு நிலையத்தில் கொடுக்கப்படும் வாக்குச் சீட்டுக்குப் பதிலாக வெளியில் இருந்து எடுத்துச் சென்ற வாக்குச் சீட்டுக்களை போடப்பண்ணியிருக்கலாம். இதன் காரணமாக கள்ளவாக்குப் போட அனுப்பப்பட்டோர் வேறு கட்சிக்காரருக்கு வாக்குப் போட்டு காலை வாரிவிடுவதும் தவிர்க்கப்படும்.

2. வாக்குச்சீட்டுக்களை எப்படியோ பெற்றுக் கொண்டு அதில், வெற்றி பெற்ற கட்சியான தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் அதன் வெற்றி பெற்ற வேட்பாளர்களது இலக்கத்துக்கும் புள்ளடியிட்டு விட்டு இப்படியாக கண்ணுக்கு தெரியக் கூடிய இடத்தில் போடுவதன் மூலம் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் அதில் வென்ற உறுப்பினர்களுக்கும் கள்ள வாக்கு மூலம் தான் வென்றார்கள் என்ற அவப்பெயரை ஏற்படுத்துவது.

இந்த இரண்டு ஊகங்களில் இரண்டாவது கொஞ்சம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவே இருக்கிறது.

இதனை உறுதிப்படுத்துவது போல் பேசினார் வவுனியாவில் உள்ள ஊடகவியலாளர் ஒருவர்.

வாக்குச் சீட்டு புத்தகங்கள் கண்டெடுக்கப்பட்ட அன்று தமிழ்க்கட்சி ஒன்று ஊடகவியலாளர்களுடன் அடிக்கடி தொடர்பு கொணடது.

இந்த பிரச்சினையை சும்மாவிடக் கூடாதென்றும் — பெரியதாக ஆக்கி இவர்களை அவமானப்படுத்த வேண்டும் என்றும் அடிக்கடி நச்சரித்துக்கொண்டே இருந்ததை பார்க்கும்போது இது அந்தக் கட்சியின் வேலையாகத்தான் இருக்குமென்று நினைக்கத் தோன்றுகிறது என்றார் அந்த ஊடக வியலாளர்.

இதே வேளை தமிழர் தேசிய கூட்டமைப்பின் பிரமுகர் ஒருவருடன் பேசிய போது எமக்குக் கிடைத்த அடோக ஆதரவுக்கு இப்படியான சில எதிர் நடவடிக்கைகள் வரும் என்பது எதிர்பார்த்தது தான் என்றார்.

எமது வெற்றியை விரும்பாத சிலர் எம்மீது களங்கம் பூச எடுத்த நடவடிக்கைதான் இது. ஆனால் இந்த வாக்குச் சீட்டுக்களை எடுத்தவர்கள் எப்போது? எங்கே? எப்படி? யாரின் உதவியுடன் எடுத்தார்கள் என்பது கூட கூர்மையாக விசாரிக்கப்பட வேண்டும். ஏனென்றால் இந்த வாக்குச்சீட்டுக்களை தேர்தலுக்கு முன்னரே வெளியே எடுத்து வந்த அந்த விஷமிக் கட்சியினர் தாங்கள் கள்ள வாக்குப் போடுமளவுக்கு போட்டுவிட்டு எஞ்சிய வாக்குச் சீட்டுக்களைத் தான் இப்படியான தந்திர முயற்சிகளுக்கு பாவித்தார்களோ தெரியவில்லை என்ற குண்டையும் தூக்கிப் போட்டார்.

மொத்தத்தில் பத்திரமாக பாதுகாக்கப்பட வேண்டிய வாக்குச் சீட்டுக்கள் வெளியே போனது மகா தவறு. அதற்கு வவுனியாவில் உள்ள அரச உயர்மட்ட அதிகாரிகள் பதில் சொல்லியே ஆகவேண்டும் என்ற விடயத்தில் அனைவரும் ஒருமித்து நிற்பது தெரிகிறது.

இந்த வாக்குச் சீட்டு விடயம் முறையாக கையாளப்படுமானால் பல அதிகாரிகளின் தலைகள் உருளக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாகவே தெரிகிறது.

— வன்னி மைந்தன்.

## அரசியல் அம்பலம்



### அனுசரணைக்கு கல்தா

வடமுனை தமிழ் கூட்டின் சகலமும் தாமே என்று கூறித் திரிந்த கொழும்பு அனுசரணையாளர்களுக்கு கல்தா கொடுக்கப்பட்டதாம்.

எம்.பி.யும் இல்லை கம்பியும் இல்லை இந்தப் பொடிப்பயல் ஏன் துள்ளுகிறார் என கண்டத்தார் தன் சகா ஒருவரின் காதில் கூறியது அந்த முதல்வரின் காதிலும் விழுந்து விட்டதாம்.

சும்மா இருப்பாரா முதல்வர். முஷ்டியை முறுக்கிக் கொண்டு பாய்ந்தாராம். பக்கத்தில் இருந்த தம்பிகள் நிலைமையை சமாளித்து விட்டனராம்.

இதனால் கண்டத்தார் பலரின் கண்டனங்களுக்கு ஆளானாராம். ஆரம்பத்தில் எல்லாமே நாங்கள் தான் என்று எண்ணிக் கொண்டிருந்த அனுசரணையாளர்கள் எதுவுமே வேண்டாம் எனக் கூறிவிட்டனராம்.

### நாற்காலியும் போச்சு கொராடாவும் போச்சு

சபாமண்டபத்தில் சத்தியம் செய்து கொண்ட கம்பளை ரதன தனது சகாக்களுடன் சற்றுக் கடுகடுப்பாகவே இருந்தாராம். அதே வேளை புதிய அமைச்சர்களுடன் கை குலுக்கி மிகவும் சந்தோஷமாகவும் கதைத்தாராம்.

''என்ன நண்பர்கள் எல்லாம் கைவிட்டு விட்டார்களா?'' என சேகரன் வாயைக் கிண்டினாராம்.

''ஆமாம் தம்பி கூட இருந்தே குழி பறித்து விட்டனர்'' என்று கதிர்காம மஹிந்தனைப் பார்த்து மீண்டும் ஒருமுறை முறைத்துக் கொண்டாராம்.

நாற்காலி இல்லை. கடைசியில் குரட்டை பிடித்து நகக்கலாம் என்றால் அந்தக் கொரடாவும் போச்சு என்று அலுத்துக் கொண்டாராம் கம்பளை ரதன.

### சபா மண்டபத்தில் சாது

புத்தபிக்கு காவி உடையுடன் அதிகார சபையை அலங்கரித்தாராம்.

அரசனைக் கண்டால் கூட ஆசனத்தை விட்டு எழும்பாதவராம் இவர். ஆனால் நாடாளுமன்றத்தில் எழுந்து நின்றே உரையாற்றினாராம்.

பார்வையாளர்களாக கலரியில் இருந்த சிலர் சாது சாது என்று கூறினராம். மேலும் சிலர் கைதட்டினராம். இதை எல்லாம் தொலைக் காட்சியில் கண்ட சிங்கங்களின் உரிமையை காக்கும் தலைவன் நானே என்று பேசும் திலக நாயகன், இந்த மனிதன் இதையும் (காவி) அவிழ்த்துப் போட்டு விட்டு போய் இருக்கலாமே என்றாராம். அங்கே போய் பௌத்தத்தின் மானத்தை வாங்கி விட்டாரே என்று கூறி நெருப்பெடுக்கின்றாராம்.

### புதிய லைசன்ஸ் ' நோ எக்ஸ் பீரியன்ஸ்

சமயஞானி, தத்தவமேதை எவரையும் நகைச் சுவையாகவே பதில் அளித்து மடக்குவதில் கெட்டிக்காரர் அந்த புத்தளத்தின் காவலன்.


அவரிடம் பெருநாள் விருந்துகள் எல்லாம் எப்படி என்று கேட்டபோது. பெருநாளா வண்டியில் கட்டிய இரண்டு மாடுகளும் இரண்டு பக்கமும் இழுத்து விட்டன. புதிய லைசன்ஸ், புதிய டிரைவர்கள், இன்னும் ரோட்டில் வாகனத்தைச் செலுத்தி போதிய பழக்கம் இல்லை. பழக்கப்பட எல்லாம் சரியாகி விடும் என்றாராம் புத்தளத்தின் காவலன்.

### அம்மையாரின் பெருநாள்

தனித்துவக் கட்சியின் மரநிழலில் தங்கமுடியாமல் போன அம்மையாரிடம் நோன்புப் பெருநாள் சர்ச்சை பற்றிக் கேட்டாராம் பேனா நண்பர். ''அம்மா நீங்கள் ஹக்கீம் பெருநாள் கொண்டாடினீர்களா இல்லை பெரிய பள்ளி உலமாக்கள் பெருநாள் கொண்டாடினீர்களா'' என்று.

நான் யாருடைய பெருநாளையும் கொண்டாடவில்லை. புனித ரம்ழான் பெருநாளையே கொண்டாடினேன் என்றாராம் அம்மையார்.

அதோடு ஒன்றாகக் கொண்டாட வேண்டிய புனிதப் பெருநாளைக் கூட ஒற்றுமையாக கொண்டாட விடாமல் செய்து விட்டாரே இந்த மனிதன் புனிதத் திருநாளின் புனிதம் போய் விட்டதே என்று வேதனைப்பட்டாராம் அம்மையார்.



# உடல் பருமனைக் குறைக்க வாசனைக்கு வசமாகாதீர்

உடல் பருமன் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை அலட்சியப்படுத்திக் கொண்டு இருக்காதீர்கள். உடல் பருமனைப்பற்றி கவலைப்படாமல் இருந்துவிட்டால் பின் விளைவுகள் பாரியதாக அமையும். உடலின் அழகு மட்டும் இதனால் கெட்டு விடுவதில்லை. எமது உடல் நலனுக்கும் அது ஆபத்தையும் ஏற்படுத்தி விடும்.

இத்தகைய விளைவுகள் உயிருக்கே ஆபத்தாகி விடும்.

பெரும்பாலும் உடல் பருமனாவது உணவுப் பழக்கத்தினால் ஆகும். உணவுப் பிரியர்கள் தான் உடல் பருமனுக்கு உள்ளாகி விடுகின்றனர்.

ஆனால் இந்த உடல் பருமன் பரம்பரை தொடர்பினால் கூட ஏற்படும். உடலில் ஏற்படும் ஏதாவது வியாதிகளின் விளைவாலும் ஏற்படும். எது எப்படியிருப்பினும் உடல் பருமன் ஆண்கள் – பெண்கள் இருவருக்குமே ஆபத்தானதுதான்.

உடல் பருமனைப்பற்றி அதிகம் பெண்கள்தான் அலட்டிக் கொள்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இது ஆண்கள் தம்மை இதிலிருந்து விடுவித்துக் கொள்வதற்காக கூறும் ஒரு சாட்டு.

எந்த ஆணோ பெண்ணோ தனது உடல் அழகு கெட்டு விடுவதை விரும்புவதில்லை.

இதில் பெண்களை மட்டும் கூறிவிட்டு தப்பித்துக் கொள்வது வழமையாகி விட்டது.

உணவுப் பிரியர்களின் உடல் பருமனை குறைப்பதற்கு உணவுப் பிரியத்தில் இருந்து ஓரளவு தப்பித்துக் கொள்ள வேண்டும்.

கண்ட கண்ட உணவுகளை வயிற்றை நிரப்புவதற்காக உண்ணக் கூடாது என்பது தெரிந்த விடயம்.

அதே போல் உணவு ஆசை அதாவது உணவை உண்ணத் தூண்டுவது அதன் வாசனையாகும்.

எமக்குப் பிடிக்காத மணமுள்ள எந்தப் பொருளையும் நாம் உண்ண விரும்புவதில்லைத்தானே? வாசனை அதிகமாக அல்லது தூண்டுதலாக இருக்கும் உணவுகளிடம் இருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும்.

பழவகைகள், மரக்கறிகள் இதற்கு விதிவிலக்கு. இவை உடலை பருக்க வைப்பதில்லை. மாறாக எண்ணெயில் தாழித்துப் பொரிக்கும் பொருட்கள் அதிகமாக உணவுப் பிரியத்தை தூண்டுபவையாக அமையும்.

அது மட்டுமல்லாமல் அதிகமாக உண்ணவும் வைக்கும். அத்துடன் இத்தகைய உணவுகள் உங்கள் உடல் பருமனை அதிவேகமாக அதிகரிக்கவும் செய்ய வல்லன. இதை மறந்து விடாதீர்கள்.

எனவே உணவு வாசனையில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கு வழிகளைக் கண்டு கொள்ளுங்கள்.

எதுவுமே பழகப் பழகத்தான் தீவிரமாகும். கோழி இறைச்சியை மிக விரும்பி சாப்பிடுபவர்களும் உண்டு. அதே சமயம் அதைக் கண்டு வாந்தி எடுப்பவர்களும் உண்டு. எனவே சில உணவுப் பழக்கத்தை நாம் விலக்கி வந்தால் நாளடைவில் அதில் இருந்து விலகிக் கொள்ள முடியும்.

குறிப்பாக எண்ணெயில் தாழித்துப் பொரிக்கும் வாசனையில் இருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். சமையல் வாசனை வரும் இடத்தில் இருந்து விலகியிருத்தல், மற்றவர்கள் ருசித்துச் சாப்பிடும் இடங்களைத் தவிர்த்தர், சாப்பிடும் வழக்கத்தில் பழங்கள், மரக்கறிகளை சேர்த்தல். இத்தகைய சிறிய நடவடிக்கைகளை செய்தால் பெரும்பாலும் உணவினால் உடல் பருப்பதை தவிர்க்கலாம்.

# பெண்களிடம் அன்பினால் மட்டுமே சாதிக்க முடியும்



கணவன் மனைவியை அடிப்பது சாதாரண விடயம் என்ற நிலை தற்போது குறைந்து வருகிறது. இதனை நாம் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இந்நிலைக்குக் காரணம் பெண்கள் எல்லாத்துறைகளிலும் முன்னேறி விட்டார்கள் என்பது தான்.

ஆண்கள் தங்களின் உண்மை நிலையை உணரத்தலைப்பட்டுள்ளனர். இதனால்தான் இந்த மாற்றம் ஏற்பட்டு வருகிறது.

ஆண்களிடம் உள்ள உடல் பலத்தினால் மட்டும் பெண்களை தாக்கி எதையும் சாதித்து விட முடியாது என்பதை காலம் அவர்களுக்கு கற்றுக் கொடுத்திருக்கிறது.

பெண்களிடம் ஆண்கள் எதையும் சாதிக்க வேண்டும் என்றால் அது அன்பினால் மட்டுமே முடியும் என்பதை இப்போது ஆண்கள் உணர்ந்து வருகின்றனர்.

ஆணின் ஆதிக்கப் போக்கை நிலை நாட்டுவதற்காக கண்களை மூடிக்கொண்டு கையாலும் காலாலும் பெண்ணை அடித்து சாதித்த வரலாறு இல்லை. அதற்குக் காரணம் பெண்ணின் மன வலிமை ஆணின் உடல் வலிமையை வெல்லக் கூடியது என்பதால்தான். பெண்களின் மன வலிமை எத்தனை உயரியதோ அதேபோல்தான் மென்மையானதும். அன்பிற்கு அது இலகுவில் உருகி விடும்.

உண்மையான அன்பினால் பெண்களிடம் நிறைய விடயங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

சில சமயங்களில் பெண்கள் மனப் பொறுமையையும், உடல் பொறுமையையும் இழந்து விடுகின்றனர்.

அநாகரிகமான முறையில் சின்னத்தனமாக பெண்களிடம் நடந்து பெண்களை அடிக்கும் ஆண்களை பெண்கள் வெறுக்கின்றனர்.

அவர்கள் பொறுமையை இழக்கின்றனர். ஆண்கள் எடுத்த அதே ஆயுதத்தை அவர்களும் கைக் கொள்ள முயல்கின்றனர்.

இத்தகைய சமயங்களில் குடும்பம் அரசியல் மேடையாகிவிடுகின்றது. அன்பு அங்கு ஒழிந்து ஆதிக்க உணர்வுகளே மேலோங்கி நிற்கும் நிலை ஏற்படும்.

எனவே குடும்பங்களும், அன்பு, பாசம், காதல், கருணை கொண்ட நீதியான போக்குடன் திகழ வேண்டும். இப்போது பெண்கள் நிறைய விடயங்களில் தெளிவு பெற்றிருக்கிறார்கள். அநீதியை எதிர்த்து கேள்வி கேட்கும் தற்துணிவை அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

கணவன் எப்படி மனைவி தனக்கு மரியாதை செலுத்த வேண்டும். தனது வார்த்தைக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறானோ அதேபோல் மனைவியும், கணவன் தன்னை மதிக்க வேண்டும்; தன்னில் நம்பிக்கை வைக்கவேண்டும். தனது அன்பை மதிக்க வேண்டும் என்று நிறைய தன் கணவனிடம் எதிர்பார்க்கிறாள்.

இதை மறந்து ஆதிக்க உணர்வால் அடாவடித்தனம் செய்யும் தனது கணவனை அவள் அலட்சியம் செய்வதுடன், அடி உதை கொடுக்கும் கணவனிடம் அவளும் அதே ஆயுதத்தை பயன்படுத்தத் துணிந்து விடுகிறாள்.

எனவே குடும்பத்தில் நிலவும் உறவினை அர்த்தமுள்ளதாக்குவதில் ஆதிக்கமோ அதிகாரமோ பயன்படாது. அன்பின் விளக்கே உறவுக்கும் – குடும்பத்திற்கும் ஒளி கொடுக்கும். மறந்து விடாதீர்கள்.

# பெண்

# பெண் இதயங்களுக்கு!

சுடர் ஒளி 'பெண்' பக்கத்துக்கு பெண்களே நீங்களும் எழுதலாம். பெண்களின் முன்னேற்றங்களுக்கு என்ன செய்யலாம்? அவர்களின் முக்கிய பிரச்சினை, அதற்குத் தீர்வு, இன்னும் தேவையான பொருத்தமான ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள். சேர்த்துக் கொள்ளப்படும்.

**சுடர் ஒளி**
36/2, பிரெட்ரிக்கா வீதி,
கொழும்பு – 06.

# பழச்சாறு

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| சீனி | – 250 கிராம் |
| நீர் | – 50 மி. லீட்டர் |
| அன்னாசிப் பழம் | – 1 |
| மாம்பழம் | – 2 |
| பப்பாளிப்பழம் | – 1 அல்லது பாதி |
| வாழைப்பழம் | – 2 (கப்பல் வாழை சிறந்தது) |
| தோடம்பழம் | – 1 |
| பேரீச்சம்பழம் | – 100 கிராம் |
| கஜு | – 50 கிராம் |
| முந்திரிகைப்பழம் | – 100 கிராம் |
| எலுமிச்சம்பழம் | – 1 |

செய்முறை:

பழங்களின் தோலை நன்றாக நீக்கிச் சிறு துண்டுகளாக வெட்டி மெதுவாக ஒன்று சேர்க்கவும். முந்திரிகைப்பழத்தையும் கழுவிச் சேர்த்துக் கொள்ளவும். சீனியையும் நீரையும் பாணியாகக் காய்ச்சி பழத்துடன் கலந்து கொள்ளவும். பின் இக்கலவையை வசதியிருந்தால் சற்றுநேரம் குளிரேற்றியில் வைக்கவும். இதனை பாற் கூழுடன் கிறீமுடன் பரிமாறலாம்.

தி. வினோதினி

# நீர் தரும் இளமை



எவ்வளவு வயதானாலும் இளமையுடன் இருக்க வேண்டும் என்றுதான் ஆண் பெண் இருபாலாரும் விரும்புவர்.

ஆண்களுக்குள்ளும் அந்த விருப்பம் அதிகளவில் உள்ளபோதிலும் அதை காட்டிக் கொள்ள அவர்கள் விரும்புவதில்லை. காரணம் நேரம் கிடைப்பதில்லை. மற்றது தங்கள் பெண்கள் இளமையுடன் இருக்கவே பெரும்பாலான ஆண்கள் விரும்புகிறார்கள். அவர்களுக்கு வயது போனபோதிலும், இது முற்றிலும் அநியாயமான சிந்தனைதான். சரி அது போகட்டும், எப்படி இந்த இளமையை காப்பது என்று பார்ப்போம். இளமை என்பது, உடலில் நீர் அம்சம் அதிகம் இருப்பதே ஆகும். நீர்த்தன்மை வற்றிப் போவதே முதுமை.

நீர் அம்சம் இல்லாததால் பிற தாதுக்கள் உடலில் மலிவடைவதால் முதுமைத் தன்மை உண்டாகிறது.

நல்ல சுத்தமான நீரும், நல்ல சாப்பாடும், தூக்கமும், சுத்தமான காற்றும் பொதுவாக எப்போதும் இளமையை அளிக்கும். செழிப்பான செடி கொடிகள் அருகே பகல் வேளைகளில் இருக்கலாம்.

இத்தகைய சிறிய நடைமுறைகளைப் பின்பற்றுங்கள். முதுமையிலும் இளமை ஓரளவாவது ஓடிவரும்.

# நாடற்றோர் பிரச்சினை தீரட்டும் உறுதிமொழிகள் உருப்பெறட்டும்

## மலையகத்தின் முன்னேற்றத்துக்கு நல்ல வாய்ப்பு

மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

மலையக மக்களிடமிருந்து தட்டிப்பறிக்கப்பட்ட உரிமைகள் அனைத்தும் அவர்களுக்கு மீண்டும் கிடைக்க வேண்டும். எல்லா இனமக்களுடனும் சமத்துவமாக அவர்கள் வாழ வேண்டும்.

இவற்றிற்கெல்லாம் வழி வகுப்பார்கள் என்ற நம்பிக்கையுடனேயே மலையக இந்திய வம்சாவளி மக்கள் ஒட்டுமொத்தமாக ஐக்கிய தேசிய முன்னணிக்கு வாக்களித்தனர்.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தேர்தலுக்கு முன் பொது ஜன ஐக்கிய முன்னணியுடனும், ஐக்கிய தேசியக் கட்சியுடனும் இவ்விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

இப்பேச்சு வார்த்தையின் போது ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் தற்போதைய பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க இவற்றை வழங்குவதாக உறுதியளித்திருந்தார்.

1948ஆம் ஆண்டு பிரிட்டிஷார் இலங்கைக்குசுதந்திரம்வழங்கியபோது இந்த நாட்டில்வாழ்ந்த அனைவருக்குமே சமத்துவமான உரிமைகளைவழங்கிவிட்டே சென்றனர்.

ஆனால் அரசியல் உள் நோக்கங்களுக்காகவும், இங்கு வாழும் இந்திய வம்சாவளியினரைத் தலைதூக்க விடக்கூடாது, அவர்களை அந்நியப்படுத்த வேண்டும் என்ற குறுகிய நோக்கத்துடனுமே பிரஜா உரிமைச்சட்டம் கொண்டுவரப்பட்டது.

இதனால் இந்திய வம்சாவளி மக்களின் நாட்டுரிமையும், வீட்டுரிமையும் தட்டிப்பறிக்கப்பட்டதுடன். இந்தச் சட்டத்தை உருவாக்குவதற்குதமிழ் தலைவர் ஒருவரும் உறுதுணையாக இருந்தார் என்பது சரித்திரத்தில் இடம் பெற்ற கசப்பான உண்மை. தொடர்ந்து நடைபெற்ற போராட்டங்களும் சத்தியாக்கிரகங்களும் முறியடிக்கப்பட்டன. அதிகாரப் பலத்தால் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டனர்.

இத்தகைய நிலையில் செய்து கொள்ளப்பட்டது, ஸ்ரீமா — சாஸ்திரி ஒப்பந்தம். அன்றைய பிரதமர் மறைந்த ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவும் இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியும் இந்த ஒப்பந்தத்தை செய்து கொண்டனர்.

இந்த ஒப்பந்தத்தில் ஏதோ ஒரு ஜடப்பொருளை விற்று வாங்குவது போல் ஒன்றரை லட்சம் பேரை இந்தியா ஏற்றுக் கொள்ளும் 75 ஆயிரம் பேருக்கு இலங்கை பிரஜா உரிமை வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த ஒப்பந்தம் செய்யப்பட்ட போது இங்கிருந்த இந்திய வம்சாவளி மக்களின் தலைவர்களும் ஏனைய பிரதிநிதிகளும் உதாசீனப்படுத்தப்பட்டனர். இவர்களுடன் ஆலோசனை நடத்தப்படவில்லை. இவர்களின் அபிப்பிராயம் கேட்கப்படவில்லை.

இதனால் பலன் தலை கீழாக மாறிவிட்டது. பெருந்தொகையானோர் இலங்கையில் தொடர்ந்து இருக்கவும், குறைவானவர்கள் இந்தியா செல்லவும் விண்ணப்பம் செய்துவிட்டனர்.

இதனால் இந்த ஒப்பந்தமும் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை. தொடர்ந்தும் நடந்த பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை. இதன்பின் நடத்தப்பட்ட ஹர்த்தால்களும், பிரார்த்தனைப் போராட்டங்களும் பற்பல.

அமரர் தொண்டமான் தலைமையில் இடம்பெற்ற பிரார்த்தனைப் போராட்டம் அப்பொழுது ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக்கட்சியினரை சந்தி சிரிக்கவைத்தது.

இதன் எதிரொலியாக அன்று ஜனாதிபதியாக இருந்த பிரேமதாச பல்வேறு எதிர்ப்புகளுக்கும் மத்தியில் ஸ்ரீமா — சாஸ்திரி ஒப்பந்தத்துக்கு இணங்க 75 ஆயிரம் இந்திய வம்சாவளியினருக்கு வாக்குரிமை வழங்கும் சட்டத்தை நாடாளுமன்றத்தின் மூலம் அங்கீகரித்தார்.

இதன் மூலம் நாடற்றோர் பிரச்சினை ஓரளவு தணிக்கப்பட்டதேயன்றி முற்றாக தீர்க்கப்படவில்லை.

எனினும் ஒப்பந்தப் பிரகாரம் இந்திய பாஸ்போட் பெற்று இந்தியா செல்ல வேண்டியவர்களில் 75 ஆயிரம் பேர் இங்கேயே தங்கிவிட்டனர். இவர்களின் வாரிசுகள் ஒன்றரை லட்சமாகி இப்பொழுது மூன்றரை லட்சத்தையும் எட்டிவிட்டன.

இவர்கள் இந்தியா திரும்பாததற்கு காரணம் இவர்கள் அல்லர். எம் நாட்டில் இடம் பெற்ற அசம்பாவிதங்களும் யுத்த சூழ்நிலையுமே இவர்களை இந்தநாட்டிலே நிலைத்திருக்கச் செய்துவிட்டன.

அதற்குப் பொறுப்பாளிகள் மாறிமாறி வந்த அரசுகளே. ஒப்பந்தப் பிரகாரம் இந்தியா செல்ல பாஸ்போட் பெற்ற பெரியவர்களும் பெற்றோரும் மறைந்து மண்ணோடு போய்விட்டனர். இந்தியா என்ன நிறம் என்பதையே அறியாத அவர்களின் வாரிசுகளே தற்பொழுது உள்ளனர். இவர்கள் அனைவருமே இலங்கையிலேயே தொடர்ந்தும் வாழ விரும்புகின்றனர்.

மலையகமே எமது தாயகம் என இவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

எனவே இவர்கள் அனைவரும் இலங்கையர்களாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இவர்கள் நாடற்றவர்கள், இந்திய வம்சாவளியினர் என ஒதுக்கி வைக்கப்படும் நிலை மாற வேண்டும்.


மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் ஆகியோர் இதையே தமது முக்கியமான கோரிக்கைகளில் ஒன்றாக முன்வைத்து ஐக்கிய தேசிய முன்னணியை முழுமூச்சாக ஆதரித்தனர்.

இப்பொழுது அதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்த இரு மலையகத் தலைவர்களும் இன்று சக்தி மிக்க அமைச்சர்களாகி விட்டனர். ஆகவே மேலும் காலம் கடத்தாமல் நடந்த பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காணவேண்டும்.

பதிவுப் பிரஜைகள், வம்சாவளிப் பிரஜைகள், ஒப்பந்தப் பிரஜைகள் என்ற பேதங்கள் எல்லாம் தீர்க்கப் படவேண்டும். அனைவரும் இலங்கைப் பிரஜைகள் என ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

எந்த ஒரு தேவைக்கும் இலங்கைப் பிரஜா உரிமை சான்றிதழைக் கேட்கும் துர்ப்பாக்கிய நிலைமை மாறவேண்டும். அடிமைச் சாசனம் கிழித்தெறியப்படவேண்டும்.

இதனை ஏற்படுத்தி விட்டால் இன்று லட்சம் வாக்குகளினால் வெற்றி பெற்ற தலைவர்களை பலலட்சம் வாக்குகளால் வெற்றி பெற வைப்பார்கள் மலையக மக்கள். எனவே நமது தலைவர்கள் வாக்குறுதிகளை நிறைவேற்ற வழி காணவேண்டும். வெற்றி நிச்சயம்.



பதுளை மாவட்டத்தில் 'த பவர் பவுண்டேசன்' அமைப்பு மூவின மக்கள் மத்தியிலும் பல அபிவிருத்தித் திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகிறது. இவற்றில் ஈடுபடுபவர்கள் ஊக்குவிக்கப்பட்டும் வருகிறார்கள்.

சமீபத்தில் இந்த அமைப்பு நடத்திய பரிசளிப்புவிழாவில் ஆடு வளர்ப்புக்கான பரிசை, பதுளை ரோபறி தோட்டத்தைச் சேர்ந்த வசந்தகுமார் பெற்றுக் கொண்டார்.

'த பவர் பவுண்டேசன்' அமைப்பின் ஸ்தாபகரும் பதுளை மாவட்ட எம்.பியுமான கே.வேலாயுதம் 4,000 ரூபாவை அவருக்கு பரிசாக வழங்குவதைப் படத்தில் காணலாம்.

படம் — யோகராஜ்

# மலையகத்துக்கும் தேவை தனி இளைஞர் படையணி

இளைஞர் படையணி, மலையகத்திலும் விஸ்தரிக்கப்பட வேண்டும். இன, மத, கட்சி வேறுபாடின்றி அனைத்து சமூக இளைஞர்களையும் இணைத்து ஐக்கிய இளைஞர் படையணியாக இதனை அமைக்க வேண்டும். அப்போது தான் நாட்டின் எதிர்காலசந்ததியினர் மத்தியில் ஐக்கிய உணர்வையும் பரஸ்பர புரிந்துணர்வையும் ஏற்படுத்த முடியும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பல பாகங்களிலும் இளைஞர் படையணிகளை உருவாக்கும் பிரகடனத்தை கொழும்பு புதிய நகர மண்டபத்தில் உத்தியோக பூர்வமாக வெளியிட்டார்.

படித்துவிட்டு தொழில் வாய்ப்பு இன்றி விரக்தி நிலையில் இருக்கும் இளைஞர் யுவதிகளின் நன்மைக்காகவே இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

தொகுதிகள் தோறும் அமைக்கப்படும் இந்த இளைஞர் படையணியில் தொழில் வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர்கள் பங்கேற்க முடியும். ஒவ்வொரு இளைஞர் யுவதிக்கும் அவரவர் கல்வித் தகைமைகளுக்கு ஏற்ப தொழில் பயிற்சிகள் வழங்கப்படும்.

இதற்கு மேலதிகமாக ஆங்கில மொழிப்பயிற்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். இங்கு பயிற்சி பெறும் இளைஞர், யுவதிகள் வெளிநாடுகளுக்குச் சென்று தொழில் வாய்ப்புப் பெறுவதற்கு உதவியாகவே இந்த ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும் எனவும் பிரதமர் அறிவித்திருந்தார்.

### கல்விக்கு ஏற்ற பயிற்சி

தொகுதிகள் தோறும் அமைக்கப்படும் இந்த மத்திய நிலையங்களில், இயந்திர தொழில் நுட்பம், கட்டடக்கலை, கணனிப் பயிற்சி, மற்றும் மேசன், தச்சு வேலைகளுடன் தையல் தொழில் நுட்பம், சித்திரக்கலை, கீழைத்தேய மேலைத்தேய சங்கீதம், விளையாட்டுத்துறை அனைத்திலும் பயிற்சிகள் வழங்கப்படும்.

ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகளுக்கு கால்நடைப் பண்ணை அபிவிருத்தியிலும் பயிற்சி அளிக்கப்படும்.

இப்பயிற்சி நெறிகள் தொடர்ச்சியாக 18 மாதங்களுக்கு அளிக்கப்படும். இக்காலங்களில் இவர்களுக்கு பிரதி மாதமும் 2000 ரூபா கொடுப்பனவாக வழங்கப்படும். பயிற்சியை முடித்துக் கொண்டவர்களுக்கு தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். சுய தொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர்களுக்கு வங்கிக்கடன் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இந்த இளைஞர்கள் தத்தமது வீடுகளில் இருந்து கொண்டு இந்த மத்திய நிலையங்களில் பயிற்சிகளைப் பெறமுடியும் என்றும் பிரதமர் அறிவித்தார்.

இதற்கும் மேலதிகமாக உயர் கல்வியைத் தொடர விரும்புகிறவர்களுக்கும், வெளிநாடு செல்ல விரும்புகிறவர்களுக்கும் அதற்கான உதவிகள் செய்யப்படும் என்றும் பிரதமர் அடித்துக் கூறினார்.

பிரதமரின் இந்த வாக்குறுதிகளும் அறிவித்தல்களும் கேட்கவும், படிக்கவும் மிகவும் திருப்திகரமாக இருக்கின்றன.

### தேர்தல் குண்டா?

இவை எல்லாம் தேர்தல் கால வாக்குறுதிகளைப் பெறுவதற்காக தயாரிக்கப்பட்ட தேர்தல் குண்டுகளில் ஒன்றாகவும் இருந்து விடக்கூடாது.

ஜனாதிபதி பொய்பேசுவதில் உலகசாதனை படைத்துவிட்டார், கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்து விட்டார் என்று கூறிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அந்தப் பட்டியலில் இடம்பிடித்துவிடக்கூடாது.

எனவே தேர்தலின் முன் அறிவிக்கப்பட்ட இத்திட்டம் இப்போது தாமதமின்றி ஆரம்பிக்கப்படவேண்டும். இது மலையகம் எங்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும். இது நாட்டிற்கும் புதிய அரசுக்கும் எமக்கும் நன்மை பயக்கும்.

புதிய பிரதமர் புது வழி படைப்பார் என இளைஞர் சமுதாயம் பெரும் நம்பிக்கையுடன் இருக்கின்றது. பிரதமர் இதைச் செய்வாரா?

தினகர் இராஜதிலகன்.

# மலையக மக்கள் குடியிருப்பு பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## அரசு தரப்புக்கு எதிர்த்தரப்பும் ஆதரவு

தேசிய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் பாரிய வீடமைப்புத் திட்டங்களும் மலையகத்தில் மேற்கொள்ளப்படும் என வீடமைப்பு தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சரும் இ.தொ.கா தலைவருமான ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்தார்

வீடமைப்பு அமைச்சு தனிப்பட்ட முறையில் நகர்ப்புறங்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல. அது பின் தங்கிய நிலையில் வாழும் கிராமப்புற மற்றும் தோட்டப்புற மக்களுக்கும் சொந்தமானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சரின் இத்திட்டம் பெரிதும் வரவேற்கத்தக்கதே.

அதே போன்று தோட்ட உட்கட்டமைப்பு சேமநலவசதிகள் அமைச்சரான மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன், ''தடைப்பட்ட பணிகள் தொடரும். தடைப்பட்ட திட்டங்கள் மீண்டும் செயல்படுத்தப்படும்'' என்று கூறியுள்ளார்.

மலையக வரலாற்றில் முதன் முறையாக தோட்டத் தொழிலாளர்களுக்கு சொந்தமாக காணிகளை வழங்கி வீடமைப்புத்திட்டங்களை ஏற்படுத்தி சரித்திரம் படைத்தவர் சந்திரசேகரன்.

முன்னைய அரசு தனது திட்டங்களை சுதந்திரமாக செயல்படுத்தவிடவில்லை என்பதாலேயே இவர் தனது அமைச்சுப் பதவியை தூக்கி எறிந்துவிட்டு வெளியேறி இருந்தார்.

சமூக உணர்வும் சமுதாயப் பற்றும் உள்ள இந்த இளம் தலைவரின் திட்டங்கள் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

இவர்களுடைய வீடமைப்புத் திட்டங்கள் அனைத்துக்கும் மின்சார இணைப்புகளை வழங்கவும், ஏற்கனவே இடைநடுவில் கைவிடப்பட்ட தோட்ட மின் இணைப்புத்திட்டங்கள் அனைத்தையும் மீண்டும் ஆரம்பிக்கவும் நடிவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எல்லா வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கப்படும் என விவசாய கால்நடை அபிவிருத்திப் பிரதி அமைச்சர் முத்துசிவலிங்கம் உறுதி அழித்துள்ளார்.

ஆளும் கட்சியினரதும், அமைச்சர்களினதும் வேலைத்திட்டங்களை எதிர்ப்பதே எதிர்க்கட்சியினரின் அடிப்படை நோக்கம்.

ஆனால் இவற்றை உடைத்தெறிந்து முழு ஆதரவையும் வழங்க முன் வந்துள்ளார் பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த மற்றுமொரு உறுப்பினரான வி.புத்திரசிகாமணி.

இவர் தனது இளமைக்காலம் தொடக்கம், மலையக அபிவிருத்திக்கு இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் மலையக சமுதாயம் தனி ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற புரட்சிகர மான கருத்துக்களை துணிச்சலுடன் வெளியிட்டவர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் ஆரம்பிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் வீடுகளுக்கு உறுதி வழங்கும் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

எனவே தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற ஒத்த போக்கை கொண்ட மலையக அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தை அலங்கரிக்கின்றனர்.

அமைச்சர்களின முழுமுனை அபிவிருத்தித் திட்டங்களுக்கு எதிரணியினரின் ஆதரவும் கிடைத்துள்ளது. இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி இத்தலைவர்கள் தொழிலாளர் வீடமைப்புத் திட்டங்களை துரிதப்படுத்தி செயல்படுத்த வேண்டும்.

இதுவரைகிடைக்காத, எதிர்பார்க்காதசந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதனைத் தவறவிடக்கூடாது. இவர்களுடைய திட்டங்கள் தங்குதடையின்றி செயற்பட்டால் மலையகத்தில் குடியிருப்புப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளிவைக்க முடியும் என்பது உறுதி.

# தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர் விடுதலையில் சந்திரசேகரன் அக்கறை

சிறைச்சாலைகளில் நீண்ட காலமாக அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அப்பாவிகளான தமிழ் இளைஞர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். இவர்களை விடுதலை செய்வது குறித்து பரிசீலனை செய்ய சுதந்திரமான ஒரு குழுவை அமைக்க வேண்டும்.

இப்படி மலையக மக்கள் முன்னணித் தலைவரும் தோட்ட உட்கட்டமைப்பு சேமநல வசதிகள் அமைச்சருமான பெ. சந்திரசேகரன் நீதி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மலையகத்தைச் சேர்ந்த பலநூற்றுக்கணக்கான இளைஞர்களும் வடக்கு – கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல ஆயிரம் இளைஞர் யுவதிகளும் எந்த விதமான விசாரணையும் இன்றி சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு ஒரு சாரசரி மனிதனுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள் கூட வழங்கப்படுவதில்லை.

சிறைச்சாலைக்குள்ளும் இனவெறி தாண்டவம் ஆடுகின்றது. அடிமைகள் போல் அவர்கள் நடத்தப்படுகின்றனர்.

அவர்கள் ஏன் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது அரசுக்கும் தெரியாது. அதிகாரிகளுக்கும் தெரியாது. தனிப்பட்ட குற்றச் சாட்டுகளும் இல்லை. வெறும் சந்தேகம் மட்டுமே.

அடித்து சித்திரவதை செய்யப்பட்டும் பெறும் ஒப்புதல் வாக்கு மூலங்களின் அடிப்படையிலேயே அவர்களுக்கு எதிராக வழக்குகளைத் தாக்கல் செய்கின்றனர். அவையும் கூட நீதிமன்றங்களில் தள்ளுபடி செய்யப்பட்டு விடுகின்றன. எனவே காரணமின்றி அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.

அவர்களின் உண்மை நிலைகளைப் பரிசீலனை செய்து அறிக்கை பெற சுதந்திரமான ஒரு குழு அமைக்கப்பட வேண்டும்.

இப்படி அமைச்சர் சந்திரசேகரன் கோரிக்கை விடுத்தார்.

இப்பொழுது நீதி அமைச்சராக இருக்கும் டபிள்யூ. ஜே. எம். லொக்கு பண்டாராவும் மலையகத்தைச் சேர்ந்தவர். எதிர்க் கட்சியில் இருக்கும் போது அந்த தமிழ் இளைஞர்களின் விடுதலைக்காக குரல் எழுப்பியவர் தான்.

எனவே அமைச்சர் சந்திரசேகரனின் கோரிக்கையை நீதி அமைச்சர் ஏற்றுக் கொள்ள வேண்டும். பல வருடங்களாக உற்றார் உறவினர், பெற்றோர், பிள்ளைகள் என பலரையும் பிரிந்து படிப்பைக் கூட தொடர முடியாத நிலையில் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் அப்பாவி தமிழ் இளைஞர், யுவதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும். இப்படிச் செய்வதால் நீதி அமைச்சர் லொக்கு பண்டார தமிழ் மக்கள் மத்தியில் நீதித் தேவனாகவே கருதப்படுவார்.

# டேஸ்ட் கடை தணிகாசலம்

தணிகாசலம் இரண்டு நாட்களாக தோட்டத்தில் இல்லை. கடையைப் பூட்டி விட்டு கொழும்புக்குப் போய் இருந்தார். தலைவர்கள் எல்லாம் அமைச்சர்களாகி விட்டனர். அவர்களைக் கண்டு வாழ்த்தி விட்டு வரப் போனவர் இன்றுதான் மீண்டும் வருகின்றார்.

அவர் கண்ட காட்சி அவருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி விட்டது. பிரட்டுக் களத்தில் ஒரே கூட்டம். பொலிஸ் ஜீப், மற்றும் ஒரு லொறி, தோட்டத்து சனங்கள் எல்லாம் கூடி நின்றனர்.

கூட்டத்தில் இருந்த அப்பாவு தலைவர், ''தணி அண்ணே இந்த அநியாயத்தை பார்த்தீங்களா,? எங்க பேரை சொல்லி எவன் எவனோ பகல் கொள்ளை அடிச்சிருக்கானுங்க''

''என்ன தலைவரே சொல்லுறீங்க?''

''ஆமாம் இது என்ன லொறியில் தகரம், சிமிந்தி மூட்டை எல்லாம் பொலிஸ் காரவுங்க வேற வந்திருக்காங்க''

''அதை தாங்க அண்ணே சொல்ல வந்தேன்.''

''என்னப்பா வெவரமா சொல்லு''

''தணி அண்ணே அந்த லொறியில இருக்க தகரம் எல்லாம் ஒரு தனியார் ஊட்டுல பதுக்கி வைச்சி இருந்ததை பொலிஸ் காரவுங்க புடிச்சுப்புட்டாங்க''

இவர்களுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் இவர்கள் பக்கம் வந்தார்.

''அதுவந்து! இந்த தோட்டத்தின் பவுண்டரில் உள்ள இரண்டு வீடுகளில் பெரிய தொகை தகரம் அடுக்கி வைக் கப்பட்டிருப்பதாக எங்களுக்கு ஒரு பெட்டிசன் வந்தது''

''என்னங்க சேர் நம்ப தோட்டத்தில கூட பெட்டிசன் போடுற அளவுக்கு ஆள் இருக்கா?

''பெட்டிசன் போட்டவர் நல்லதை தானே செஞ்சி இருக்கார் அந்த பெட்டிசன்ல இருந்த வீட்டுகளுக்குப் போய் செக் பண்ணினோம்.''

''அப்படிங்களா அப்புரம் என்ன நடந்தது''

''அங்க போய் பார்த்தா 5000 தகரங்களும் 300 மூட்டை சிமேந்தியும், பந்து, நெட் கிரிக்கட், பெட் எல்லாம் ஒளிச்சி வச்சிருந்தாங்க''

''அந்த வீட்டு மனுசன் எல்லா உண்மையையும் சொல்லிபுட்டான்''

''அப்படி என்னங்க சேர் உண்மையை சொல்லிப் புட்டான்?''

''இந்த சாமானத்தை எல்லாம் ஒரு தலைவர் கொண்டு வந்து பத்திரப்படுத்தி வைக்கச் சொன்னாராம்.''


''அந்த தலைவர் கிட்ட போய் விசாரிக்சோம் அவர் என்ன சொன்னார் தெரியுமா?''

''என்னங்க சேர் சொன்னார்?''

''அவர் தோட்டத்து ஆளுங்களுக்கு கொடுக்க பத்தாயிரம் தகரம், சிமேந்தி மூட்டை எல்லாம் கொண்டு வந்தது உண்மை. அதை எல்லாம் தோட்டத்து ஆளுக்களுக்கு சப்ளை செய்து விட்டாராம். ஒன்று கூட மிச்சம் இல்லை என்று கூறிவிட்டார்''

''இவ்வளவு தரகங்களை பார்த்த பின்புமா அந்த மனிசன் அப்படி சொன்னார்''

''நாங்க அவர் கிட்ட தகரங்களை காட்டவில்லை. கிறிஸ்மஸ் பண்டிகைக்கு விழா ஒன்று நடத்த போறம் கொஞ்சம் தகரம் வேண்டும் என்று தானே கேட்டோம்.



''நீங்களும் பொல்லாத ஆசாமிதான் சார்''

''அது தான் முதலாளி பொலிஸ் மூளை''

''அப்புறம் எப்படி சேர் ஆளை மடக்கினீங்க?''

''அது பெரிய கதை, அந்த ஆளும் பொல்லாத ஆள் தகரம் கொடுத்த ஆளுங்க பெயர், விலாசம் எத்தனை கொடுத்தது என்று ஒரு பெரிய லிஸ்ட்டையே கொடுத்தான்.

''அடப்பாவி எம்புட்டு துணிச்சல்'' அது தாங்க சேர் அந்த தலைவர் தகரம் கொடுத்த விவரத்தை தானே கொடுத்து இருப்பார்.

கொஞ்சம் பொறுங்க. இந்தாப் பாருங்க அந்தலிஸ்ட் அதுல ஒங்க பேரும் இருக்கு 50 தகரம் 10 மூடை சிமேந்தி நீங்களும் ஒப்பம் போட்டு வாங்கி இருக்கீங்க'' ''எங்க அந்த தகரங்களைப் பார்க்கலாமா?''

''என்னங்க சேர் அந்தப் பாவி மனுசன் என்னையும் வம்புல மாட்டி வைச்சுப்புட்டான். அவன் நாசமா போவ. இது பெரிய அநியாயமா இல்ல இருக்கு''

''இப்படித்தான் முதலாளி நாங்க அந்த லிஸ்ட்டுல இருக்க வீடுகளுக்கு எல்லாம் போய் விசாரித்தோம் எதுவுமே இல்ல. ஒன்னு ரெண்டு வீட்டுல மட்டும் ஐஞ்சி பத்து தகரம் இருந்தது''

''இதுக்கு நீங்க என்ன சேர் செய்யப்போரீங்க?''

''எல்லாருக் கிட்டயும் எழுதி வாங்கிக்கிட்டு அந்த தலைவரை புடிச்சி உள்ளுக்குப் போடப் போரம்''

''இது எல்லாம் அரசாங்கச் சொத்து, ஒங்கலோட சொத்து உங்கள் பேரை சொல்லி லச்சம் லச்சமா கொள்ளை அடிச்சி இருக்கு. அந்த விவரம் எல்லாம் தேடிப் புடிச்சாச்சி. இனி சட்டப்படி நடவடிக்கை எடுப்போம்''

''அதுசரி இந்த லொரியையும் நீங்களா கொண்டு வந்தீங்க?''

''இந்த லொறி தானே அவர மாட்டி வைச்சது''

''என்னங்க சேர் லொரி மாட்டி வச்சிச்சா?''

''ஆமாம் அந்த லொரி முதலாளிகிட்ட அந்த தலைவர் ஒரு கடிதம் கொடுத்து அனுப்பி இருந்தார்.''

''எப்படி எழுதி இருந்தது தெரியுமா?

சொல்லுங்க சேர் அந்த தலைவர் அடிக்கடி ராத்திரி நேரத்தில அந்த ஊட்டுக்கு வந்து போவார். அந்த ஊட்டு பொண்ணு கூட ஒரு மாதிரி. அப்புடி இப்படி, அந்தப் பொண்ணுக்கு ஏதும் லவ்லெட்டர் கொடுத்தனுப்பினரோ.

''என்ன மொதலாளி ஒங்க புத்தி எங்கயோ போவுது லவ்லெட்டர் இல்ல. வந்த லொரியில் எல்லாத் தகரத்தையும் ஏத்திவிடு என்று தான் எழுதி இருந்தார்.''

''நல்லா மாட்டிக்கிட்டார்தான் போங்க''

எப்பவும் பிழை செய்தவன் எவ்னாக இருந்தாலும் கடைசியில மாட்டிக்கத் தான் போகின்றார்கள். இப்ப இவர் மட்டும் சிக்கி இருக்கார். இன்னும் எத்தனை பேர் மாட்டப் போராங்களோ'' இந்தாங்க மொதலாளி ஒங்களுக்கும் தகரம் கிடைக்கவில்லை தானே இதுல ஒரு ஒப்பம் போடுங்க.

''என்னோட ஒப்பமும் அந்த பாவிகளுக்கு கொள்ளி வைக்கும்னா எத்தனை ஒப்பமும் போடரேன். மொதல்ல அந்த பெட்டிசன் போட்ட புண்ணியவானுக்கு பாட்டி வைக்கனும்'' என்று கூறினார் தணிகாசலம்.

கூட்டத்தில் இருந்த கந்தசாமி சிரித்துக் கொண்டே குனிந்து கொண்டான். இன்ஸ்பெக்டரும் ஜீப்பில் ஏறிக் கிளம்பி விட்டார்.

— இராசிகா

# சமயச் சொற்பொழிவில் திடீரென எழுந்த சர்ச்சை

## கணேசலிங்கம் — ஜெயராஜ்



சைவக் கலாநிதி
க.கணேசலிங்கம்

சமயப் சொற்பொழிவு என்றாலே சங்கடமானது. அங்கு இடம் பெறும் அறுவைகளை கேட்டுக் கொண்டிருக்கும் போதே நித்திரை வந்து விடும்.

இப்படியான வேளையில் அந்த சொற்பொழிவை முழுமையாகக் கேட்டு அதற்கு விமர்சனமும் எழுத வேண்டுமே என்ற சலிப்புணர்வு.

சக பத்திரிகையாளர்களுடன் தொடர்பு கொண்டால் ''நாங்கள் 118 பேச்சுக்களை கேட்டு சலித்து விட்டோம் நீ போய் 119 ஆவது பேச்சைக் கேட்டு அனுபவி'' என்றனர். எப்படியோ போக வேண்டும். பார்த்தும் கேட்டும் எழுத வேண்டுமே என்ற கடமை விழா மண்டபத்திற்கு இழுத்துச் சென்றது.

புகைப்படப் பிடிப்பாளருடன் மண்டபத்துக்குள் நுழையும்போது தலைமை வகித்த இந்து சமய விவகார மேலதிக செயலாளர் ந. பரம்சோதி தலைமை உரையை முடித்துக் கொண்டு விழா நாயகனை சைவ சித்தாந்த கலாநிதி க. கணேசலிங்கத்தை பேசும்படி அழைத்தார். இவர் தென் இந்தியாவில் இருந்து கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொள்ள இங்கு வந்தவர். எமது இந்து சமய விவகார திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் எப்படியோ மோப்பம் பிடித்து இவரது சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்து விட்டார்.

வழமையான பந்தாக்களுடன் முகஸ்துதிகள் அறிமுகத்துடன் அவர் பேச்சை ஆரம்பித்தார். சமயத்தையும் சமயத்தின் அடிப்படைத் தத்துவங்களையும் பற்றி அழகு தமிழில் தெட்டத் தெளிவாக விளக்கம் அளித்தார். சபையோரும் அடிக்கடி கரகோசம் செய்து அவரது பேச்சை ரசித்து மகிழ்ந்தனர் . ஆமோதித்தனர்.

பேசிக் கொண்டே வந்தவர் திடீரென சமயப் பேச்சாளர்கள் மீது ஒரு பாய்ச்சல் பாய்ந்தார். ''தென் இந்தியாவில் இருந்து இங்கு வரும் சமயப் பேச்சாளர்கள் சமயப் பேருரை என்ற பெயரில் வருமானம் தரும் வியாபாரம் நடத்துகின்றனர். சமயப் பேருரையை விளம்பர நிகழ்ச்சியாக்கி அசிங்கப்படுத்தி வருகின்றனர்.

''பொதுவாக சமயப் பேச்சாளர்கள் புராணக்கதைகளையும் நகைச்சுவைக் கதைகளையும் கூறி சபையோரை வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கின்றனர். அடிப்படை சைவ சமய சிந்தாந்தங்களைப் பற்றிப் பேசி சமய தத்துவங்களை அறிந்து கொள்ள முடியாமல் சமயப் பேருரைகளை மழுங்கடித்து விடுகின்றனர். புராணக்கதைகளைக் கூறி இல்லாத ஒன்றை இருப்பதாகச் சொல்லி மக்களை ஏமாற்றுபவர்கள். இவர்கள் சைவசித்தாந்த தத்துவங்களை அறியாதவர்கள், கடைசியில் இவர்கள் நரகத்திற்கே செல்வார்கள்'' என்று ஒரு போடு போட்டார்.

அந்தப் பேச்சைக் கேட்டு சிரித்துக் கொண்டே வந்த கம்பவாரிதி ஜெயராஜ் கூட்டத்தோடு கூட்டமாக அமர்ந்துகொண்டார்.

தொடர்ந்து பேசிய க.கணேசலிங்கம். அண்மையில் இலங்கையில் இடம்பெற்ற இந்திய சமயப் பேச்சாளர் ஒருவரின் பேச்சை சுட்டிக்காட்டினார். அவர் ஒரு சிறந்த பேச்சாளர். அவரது பேச்சை அலுக்காமல் கேட்கலாம் ''அண்ணாமலை தீபம்'' ''கார்த்திகைத் தீபம்'' பற்றி அழகாக அவர் பேசினார்.

இறுதியில் அவர் என்ன சொன்னார் தெரியுமா? எல்லோரும் தீபம் ஏற்றுங்கள் நல்ல தீபத்திற்கு நல்ல எண்ணெய் விட்டு ஏற்றுங்கள். சுத்தமான் நல்லெண்ணை விட்டு ஏற்றுங்கள். அதுவும் இதயம் கவர்ந்த நல்லெண்ணெய் விட்டு ஏற்றுங்கள் என்றார்.

ஏன் தெரியுமா தனக்கு அனுசரணை வழங்கிய இதயம்ஸ் நிறுவனத்திற்கு நன்றியுடன் விளம்பரம் செய்துவிட்டார். இது அவருடைய முழுப்பேச்சையுமே கொச்சைப்படுத்திவிட்டது என்று சாடினர்.

அதோடு அவர் விட்டு விடவில்லை. எமது சுடர் ஒளி பத்திரிகைக்கும் மேலதிக விளம்பரம் தேடித்தந்து விட்டார். சிவனும் சக்தியும் ஒன்றே. சிவன் ஒருவனே ஐந்தொழில் களையும் செய்வான். அவனுக்கு மிஞ்சிய சக்திகள் எதுவும் இல்லை. இல்லாத ஒன்றை போற்றுவதும் வழிபடுவதும் கடைநிலையினர் செய்வது.

இங்கு இடம் பெற்ற அனுமன் வழிபாடு தொடர்பாக சுடர் ஒளி பத்திரிகைக்கு பகிரங்க கடிதம் ஒன்றை எழுதினேன். அது பெரும் சர்ச்சையைக்கிளப்பி விட்டது. ஆதரவாகவும் எதிர்த்தும் கட்டுரைச் சமரே நடந்துவிட்டது.

சுடர் ஒளி ஆசிரியர் மிகவும் கெட்டிக்காரர். சாதுரியமாக கட்டுரைச் சமரை முடிவுக்குக் கொண்டுவந்தார். என்னுடைய ஆரம்பக் கட்டுரையின் கருப்பொருளை பெட்டி கட்டிப்போட்டு நீண்ட மறுப்புக் கட்டுரையையும் பிரசுரித்தார். அந்த நீண்ட கட்டுரையிலோ வேறு எந்தக் கட்டுரையிலோ எனது கேள்விகளுக்கு தத்துவார்த்தமான பதில் இல்லை. காரணம் மறுப்பு எழுதியவர்கள் அடிப்படை சைவசமய தத்துவங்களை அறியாமையே. இதனை நன்கு உணர்ந்த சுடர் ஒளி ஆசிரியர் சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்.

இப்படிக் கூறிவிட்டு ஏதாவது விளக்கம் தேவை என்றால் கேள்விகள் கேட்கலாம் என்று கூறி அமர்ந்து விட்டார் கணேசலிங்கம்.

அப்போது தான் இந்த விழா நெறியாளர் சிண்டு முடிந்து விட்டார்.'' பெரியார் கணேசலிங்கம் அவர்களின் பேச்சை கம்பவாரிதி ஜெயராஜ் எமக்கு விளங்கக் கூடிய தமிழில் சுருக்கமாக ஐந்து நிமிடங்களில் தருவார்'' என அறிவித்தார்.

இவ்வளவு நேரமும் இவருடைய பேச்சைக் கேட்டுரசித்து கைதட்டியவர்கள் எதைப்புரிந்து கொண்டு கைதட்டினார்கள் என்ற வியப்பை ஏற்படுத்தியது நெறியாளரின் அறிவிப்பு.

கம்பவாரிதி ஜெயராஜ் மேடைக்கு வந்ததும் ஒரு பெரும் சொற்போர் நடக்கப் போகிறது என எதிர்பார்த்தோம். அது சப்பென்றாகி விட்டது. பெரியார் கணேசலிங்கத்தின் தனிப்பட்ட குண நலன்கள், விருந்தோம்பும் முறை, அவரது வீட்டில் இடம் பெற்ற திருமண வைபவத்தில் கிடைத்த உளம் நிறைந்த வரவேற்பு என்பன பற்றி எல்லாம் கூறிவிட்டு சில கேள்விகளைத் தொடுத்தார் கம்பவாரிதி.

முன்னவர் தென் இந்திய சமயப் பேச்சாளர்களைச் சாடினார். இவரும் தன் பங்கிற்காக நம்நாட்டு சைவ விற்பன்னர் களையும் தத்துவாச்சாரியர்களையும் பிய்த்துப் பிடுங்கி விட்டார்.

கம்பவாரிதி என்ன சொன்னார்'' நானும் புராணக் கதைகளைக் கூறியே சொற்பொழிவுகளை நடத்துபவன். முற்று முழுதாக ஆன்மீகப் பணியில் இறங்கியபின் அடிப்படைச் சைவசித்தாந்த தத்துவங்களைப் பயின்று என்னை பூரணப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற பேரவாவில் யாழ்ப்பாணம் சென்றேன். அவர்களும் என்னை ஒரு சீடனாக ஏற்றுக் கொண்டார்கள். பயிற்று வித்தார்கள். எல்லாவற்றையும் நன்கு அறிந்து கொண்டேன். மொத்தமாக எதை அறிந்து கொண்டேன் தெரியுமா?

''யாழ்பாணத்தில் இருக்கும் சமய வித்தகர்களும் சிவாச்சாரியார்களும் தாங்கள் தான் சிவபெருமானுக்கே பாதுகாவலர்கள் என்ற இறுமாப்புடன் இருப்பதையும் இவர்களுக்கும் அடிப்படை சைவசித்தாந்த தத்துவங்கள் தெரியாது என்பதையும் அறிந்து கொண்டேன்'' என்று வேதனையுடன் கூறினார்.

''புராணக்கதைகளை உதாரணம் கூறிப் பேசுபவர்கள் நரகத்திற்கே போவார்கள் என்றால் அப்பரும் சுந்தரரும் கூட தமது தேவார திருவாசங்களில் புராண இதிகாசங்களை உட்புகுத்தி உள்ளனர். அவர்களும் நரகத்திற்குப் போய் விட்டார்களா'' என்ற கேள்விகளை தொடுத்தார்.

''ஐந்தொழில்களையும் செய்பவர் சிவன் என்றால் அவரை அறியாமல் எதுவும் நடக்க முடியாது. அப்படியிருக்க மேலும் ஒன்று உருவானது எப்படி. அப்படி உருவானதே அனுமன் வழிபாடும். இந்த வழிபாட்டில் ஈடுபடுவோர் கடைநிலையோர் என்றால் அங்கே தான் அதிகமானோர் இருக்கின்றனர். அவர்களுக்கும் ஒரு வழிபாடு தேவை.

''அவர்கள் மத்தியில் சமய அறிவை ஏற்படுத்த வேண்டுமெனில் அவர்களும் விளங்கிக் கொள்ளக் கூடியவகையில் புராணக்கதைகளையும் உபகதைகளையும் கூற வேண்டியது அவசியமாகின்றது.



கம்பவாரிதி ஜெயராஜ்

''நேரடியாக எடுத்த எடுப்பில் சைவசித்தாந்தங்களைப் போதிக்க முற்பட்டால் அது பயன்தராது முதலில் புராணக் கதைகள் மூலம் ஒரு நிலைப்படுத்தி, அடுத்து இரண்டாவது படியாக சைவசித்தாந்தங்களைக் கூறி உண்மை நிலையை உணரச் செய்யலாம்'' என்றார் கம்பவாரிதி.

''புராணங்கள் கூறும் மகாபாரதப்போர் ஒன்று நடந்ததா என்பதே கேள்விக்குறியாக இருக்கின்றது. இப்படி உண்மைக்கு மாறான பொய்க் கதைகளைக் கூறி ஒரு வழிப்படுத்தி அடுத்த படியான இரண்டாவது நிலைக்கு சைவ சித்தாந்தங்களை அறியும் நிலைக்கு எத்தனை பேரைக் கொண்டு சென்றுள்ளீர்கள்? இப்படி கம்பவாரிதிக்குக் கேள்வியிலேயே பதிலளித்தார் பெரியார் கணேசலிங்கம்.

இவ்வேளையில் குறுக்கிட்ட ஓர் அம்மையார், ''ஐயா இப்பொழுது வரும் சமய பாடப் புத்தகங்களில் எல்லாம் புராணக் கதைகள் தான் காணப்படுகின் றன. நாங்கள் அவற்றைத்தானே போதிக்க வேண்டும். நாங்கள் எப்படி அடிப்படை சமய சித்தாந்த தத்துவங்களைப் போதிப்பது'' என்று கேட்டார்.

''பாடப்புத்தங்கள் அச்சிடும் உங்கள் திணைக்கள அதிகாரியிடம் கூறி உண்மைத் தத்துவங்களைப் போதிக்கக் கூடிய புத்தகங்களை அச்சிடச் செய்ய வேண்டியது தான் உங்களைப் போன்றவர்களின் கடமை'' என்று கூறினார் கணேசலிங்கம்.

சமயப் பேருரையை எப்படிக் கேட்டு எழுதப் போகிறேனோ என்ற சலிப்புடன் சென்ற எனக்கு, இந்து சமய அலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த 119 ஆவது தொடர் சமயப் பேருரை புதுமையாக அமைந்திருந்தது. அதற்காக பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசனுக்கு நன்றி கூறவேண்டும்.

— இரா[illegible]த்திரசிகாமணி

## வண்ணாத்திவில்லு பிரதேச சபை வரவு செலவுத் திட்டம்

புத்தளம், டிச. 23

வண்ணாத்திவில்லு பிரதேச சபையின் கூட்டம் கடந்த 20 ஆம் திகதி இடம் பெற்ற போது 2002 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பிரதேச சபைத் தலைவர் ஆர். என். அசனா மரிக்கார் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

பிரதேச சபையில் பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் 7 உறுப்பினர்களும், ஐ.தே.க. சார்பில் 3 உறுப்பினர்களும் உள்ளனர்.

வரவு செலவுத் திட்டம் ஐ. தே.கவின் ஆதரவுடன் நிறைவேறியது.

எதிர்வரும் ஆண்டின் வருமானம் 68 இலட்சத்து 85 ஆயிரத்து 750 ரூபா எனவும் செலவு 68 இலட்சத்து 13 ஆயிரத்து 360 ரூபா எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஐந்து வருட காலமாக வரவு செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்படுவது குறிப்பிடத்தக்கது.

## அநுராவும் பௌஸி பக்கம்?

தேசிய நல்லிணக்க அரசாங்கத்துக்கான பிரதமரின் அழைப்பை எமது கட்சி முற்றாக நிராகரிக்கவில்லை. விரைவில் அதற்குரிய பதில் அறிவிக்கப்படும் என்று கூறுகிறார் முன்னாள் சபாநாயகர் அநுரா பண்டாரநாயக்கா.

பிரதமரின் அழைப்புக்கு நாம் இணங்குவதானால், பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் மீது நடத்தப்படும் தேர்தலுக்குப் பிந்திய வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றார் அநுரா.

வன்முறைகளைத் தூண்டுவோருக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்கு மாறும் அவர் கேட்டுக் கொண்டார். (ர)

## இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு இதுவே இந்தியாவின் விருப்பம்

கொழும்பு, டிச. 23

இலங்கையில் நடைபெறும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருதவற்கு யுத்த மூலமான தீர்வை இந்தியா விரும்பவில்லை.

இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ண காந்தி தெரிவித்துள்ளார்.

புளொட் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன் இந்தியத் தூதுவரை சந்தித்தார்.

அப்போதே இந்தியத் தூதுவர் இதனைத் தெரிவித்தார்.

மன்னார் பகுதியில் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது தொடர்பாக குறிப்பிட்ட இந்தியத் தூதுவர், இலங்கை அரசினால் விதிக்கப்பட்டுள்ள மீன் பிடித்தடை நீக்கப்படும்வரை இந்த நிலைமை மாறாது என்று கூறினார்.

எனினும் இந்திய கடல் எல்லைக்குள் நுழையும் இலங்கை மீனவர்களை இந்தியா மனிதாபிமான நிலையில் நோக்குவதாகவும், ஆனால் அதே நடைமுறையை இலங்கைக் கடற்படையினர் பின்பற்றுவதில்லை என்றும் அவர் கவலை தெரிவித்தார்.

### பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம்

கொழும்பு, டிச. 23

பாவனையாளர்களைப் பாதுகாக்கப் புதிய சட்டம் ஒன்று கொண்டுவரப்பட வுள்ளது.

அமைச்சர் ரவி கருணநாயக்கா இத்தகவலைத் தெரிவித்தார்.

பொருட்களின் தரத்தை நிர்ணயித்தல், வர்த்தகர்களின் சுரண்டல்களிலிருந்து பாவனையாளர்களைப் பாதுகாத்தல் ஆகிய விடயங்களில் புதிய அரசு அதிக கவனம் செலுத்தும் என்று அமைச்சர் கூறினார். (க)

# உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு அதி உயர் பாதுகாப்பு ஏற்பாடுகள்

2003 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின்போது வீரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் பலத்த பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

வீரர்களையும் அதிகாரிகளையும் பாதுகாப்பதற்கு மெய்ப்பாதுகாவலர்களும் நியமிக்கப்படுவர். இவ்வாறு இச்சுற்றுப் போட்டி ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் அலி பக்கர் கூறினார்.

வீரர்களின் பாதுகாப்புக்கு- பார்வையாளர்கள் 'மெட்டல் டிடெக்டர்' கருவி மூலம் சோதிக்கப்பட்டபின்னரே அரங்கிற்குள் அனுமதிக்கப்படுவார். அரங்கினுள் கண்காணிப்பு கமெராக்கள் மூலமும் பார்வையாளர்கள் கண்காணிக்கப்படுவர்.

கடந்த 10 வருட காலத்தில் ரகர், கால்பந்தாட்டம், கிரிக்கெட் விளையாட்டுக்களில் பல சர்வதேச போட்டிகளை எமது நாட்டில் நடத்தியுள்ளோம். எவ்வித பாதுகாப்பு அச்சுறுத்தல்களையும் நாம் எதிர்நோக்கியதில்லை.

ஆனால் தற்போது உலகின் நிலைமை மாறிவிட்டது. இதனால் உலகக் கிண்ணப் போட்டிகளுக்காக உயர் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

1999இல் இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளின் போது பல


அலி பக்கர்

தடவை ரசிகர்கள் மைதானத்திற்குள் திரண்டனர். இது போன்ற நிலைமைகள் மீண்டும் ஏற்பட இடமளிக்கமாட்டோம்.


நூற்றுக்கும் மேற்பட்ட பாதுகாப்பு அதிகாரிகள் இச்சுற்றுப்போட்டியின் போது பணியாற்றவுள்ளனர்.

அவர்கள் பார்வைக்குத் தென்படமாட்டார்கள். ஆனால் வீரர்கள், நடுவர்கள், பார்வையாளர்கள் ஆகியோருக்கு பாதுகாப்பு பிரச்சினைகள் ஏற்படாதிருப்பதை இவர்கள் உறுதிப்படுத்துவர். இவ்வாறு அலிபக்கர் கூறினார்.

தென்னாபிரிக்க- அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டிகளைப் பார்வைடுவதற்காக தற்போது அவுஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளார் அலி பக்க ர்.

எதிர்வரும் ஜூலை 1ஆம் திகதி முதல் உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான டிக்கெட்டுக்கள் விற்பனை செய்யப்படும். இணையத்தளத்தின் ஊடாகவும் இவை விற்பனை செய்யப்படும்.'' இவ்வாறு பக்கர் மேலும் கூறினார்.

2003 ஆம் ஆண்டு பெப்ரவரி 9 முதல் மார்ச் 23 வரை இப்போட்டிகள் நடைபெறவுள்ளன. ஸிம்பாப்வே, கென்யா ஆகிய நாடுகளிலும் ஒருசில போட்டிகள் நடைபெறவுள்ளன.



லூயிஸ் ஃபிகோ

இவ்வாண்டின் சிறந்த கால்பந்தாட்ட வீரருக்கான விருதை போர்த்துகல் நாட்டின் லூயிஸ் ஃபிகோ பெற்றுக்கொண்டார். சர்வதேச கால்பந்தாட்டச் சங்கம் இவ் விருதை வழங்கியது.

இவ்வாண்டின் இரண்டாவது சிறந்த வீரராக இங்கிலாந்தின் டேவிட் பெக்காம் தெரிவுசெய்யப்பட்டார். மூன்றாவது சிறந்த வீரருக்கான விருதை ஸ்பெயின் நாட்டவரான ரவுல் கொன்ஸாலெஸ் வென்றார்.

# மேரி ஜொஸ் பெரெக் மீண்டும் களத்தில்

முன்னாள் ஒலிம்பிக் சாம்பியனான குறுந்தூரஓட்ட வீராங்கனை மேரி ஜொஸ் பெரெக் மீண்டும் பயிற்சியில் ஈடுபட ஆரம்பித்துள்ளார்.

1996ஆம் ஆண்டு அட்லாண்டாவில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் 200, 400 மீ ஓட்டத்தில் தங்கப் பதக்கங்களை வென்றவர் இவர். அதன்பின்போட்டிகளில் ஈடுபடவில்லை.


ஜொஸ் பெரெக்

கடந்த வருடம் சிட்னியில் நடந்த ஒலிம்பிக் விழாவில் 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குபற்றவிருந்தார் அவர். ஆனால் இறுதி நேரத்தில் போட்டியிலிருந்து விலகினார்.

சிட்னி ஹோட்டல் அறையில் தங்கியிருந்தபோது தனக்கு கொலைமிரட்டல் விடுக்கப்பட்டதாகக் கூறி சிட்னியிலிருந்து வெளியேறினார் அவர்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர் இவர். தற்போது அவர் மீண்டும் பயிற்சிகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளார் என பிரான்ஸ் நாட்டுப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

'' பெரெக் தீவிரமாகப் பயிற்சிகளில் ஈடுபட்டால் அவர் மீண்டும் தனது முந்தைய சிறந்த நிலையை அடைய முயல்கிறார் என்பதே அர்த்தம். இவ்வாறு குவாட்லொப் மெய்வல்லுநர் லீக்கின் தலைவர் கூறுகிறார்.

எனினும் மூடிய கதவுகளுக்குப் பின்னாலேயே பயிற்சி பெறுகிறார் அவர். பத்திரிகையாளர்களுடன் பேசுவதற்கும் அவர் மறுக்கிறார்.

சிட்னி ஒலிம்பிக்கில் பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் சாம்பியனாகியவர் அவுஸ்திரேலிய வீராங்கனை கெதீ பிரீமன். 'தோல்விப் பயத்தினாலேயே பெரெக் போட்டியிலிருந்து விலகினார்.'' இவ்வாறு கெதி பிரீமன் அப்போது கூறியிருந்தார்.

பிரீமனும் ஒருவருட காலத்தின் பின்னர் அண்மையில்தான் மீண்டும் பயிற்சிகளில் ஈடுபடத் தொடங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கா, பிரிட்டன் மீது மெய்வல்லுநர் தலைவர் சீற்றம்

அமெரிக்கா, பிரிட்டன் நாடுகளிலுள்ள விளையாட்டுப் போட்டி ஏற்பாட்டாளர்கள் மீது சர்வதேச மெய்வல்லுநர் சம்மேளனத் தலைவர் லெமைன் டியேக் சீற்றம் கொண்டுள்ளார்.

முக்கிய விளையாட்டு விழாக்களை நடத்துவதில் இந்நாட்டவர்கள் உதாசீன மாக இருப்பதாக அவர் லெமைன் கூறியுள்ளார்.

''அமெரிக்க மெய்வல்லுநர் போட்டியாளர்கள் பற்றியே பெரும்பாலும் சிந்திக்கப்படுகிறது. ஆனால் இந்நாடுகள் சாதாரண ஆபிரிக்க நாடுகள் போலவே இருக்கின்றன.

போட்டிகளை தொலைக்காட்சியில் ஒளிபரப்புவதற்கு ஏற்பாடு இல்லை. அனுசரணைகள் இல்லை. ஆனால் அற்புதமான மெய்வல்லுநர் போட்டியாளர்கள் உள்ளனர். தங்கச் சுரங்கத்தின் மீது அமர்ந்துகொண்டு பிச்சை எடுப்பவர் போலவே அமெரிக்கர்கள் உள்ளனர்.

என்.பி.சி., ஏ.பி.சி போன்ற தொலைக்காட்சி நிறுவனங்களைக் கொண்டுள்ள நாட்டில் எவ்வாறு உலகின் மூன்றாவது மிகப்பெரிய விளையாட்டு விழாவை ஒளிபரப்ப முடியாது போகும்?

அவர்கள் நீண்டகாலத்திற்கு இவ்வாறு நடந்துகொள்ள முடியாது.''

இவ்வாறு அமெரிக்கா மீது குறை கூறுகிறார் லெமைன் டியேக். இவர் செனகல் நாட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. 1999 இல் சர்வதேச மெய்வல்லுநர் சம்மேளனத்தின் தலைவராகப் பதவியேற்றார்.

பிரிட்டனையும் அவர் விட்டுவைக்கவில்லை. 2005ஆம் சர்வதேச மெய்வல்லுநர் விளையாட்டு விழாவை நடத்தும் திட்டத்தின் தோல்வி காரணமாக அந்நாட்டின் புகழுக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறுகிறார்.

தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து விவகாரத்திலும் சகல நாடுகளும் ஒரே விதமாக நடத்தப்பட வேண்டும் என லெமைன் வலியுறுத்தினார்.

''சகல நாட்டவர்களுக்கும் ஒரேவிதமான சோதனைக்கு உட்படுத்தப்பட்டு தண்டனை அளிக்கப்பட வேண்டும். இவ்விடயத்தில் ஒரு நாட்டின் அளவைக் கருத்திற்கொண்டு தீர்மானம் எடுக்க முடியாது.'' இவ்வாறு சர்வதேச மெய்வல்லுநர் சம்மேளனத் தலைவர் கூறினார்.

## விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

# ஊழல் விசாரணைக் குழுவிற்கு ஐ.சி.சியின் ஒலி நாடாக்கள்

பாகிஸ்தானின் கரமத் பண்டாரி தலைமையிலான ஆணைக் குழுவிற்கு சர்வதேச கிரிக்கெட் பேரவை 8 ஒலிப்பதிவு நாடாக்களை அனுப்பியுள்ளது.

1999 ஆண்டில் நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் இடம் பெற்ற ஊழல்கள் தொடர்பாக இவ்வாணைக் குழு விசாரணை நடத்தி வருகிறது.

இந்த ஒலிப்பதிவு நாடாக்களில் முற்று முழுதாக இந்தியா- பாகிஸ்தான், பங்களாதேஷ் -பாகிஸ்தான் போட்டிகளின் ஆட்ட நிர்ணய மோசடி தொடர்பான விடயங்களே அடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்போட்டிகளின் முடிவுகள் முன்கூட்டியே நிர்ணயம் செய்யப்பட்டவை என புகாரிடப்பட்டுள்ளது. இவ்விரு போட்டிகளிலும் பாகிஸ்தான் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்விசாரணைக்குழு மேற்படி ஒலிநாடாக்களை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் சமர்ப்பித்துள்ளது.

இதேவேளை பாக் கிரிக்கெட் வீரர்கள் பலரிடம் மேற்படி ஆணைக் குழு விசாரணை நடத்திவருகிறது. முன்னாள் பாக் அணித் தலைவர் அமிர் சொஹைல், பஸித் அலி ஆகியோர் இன்னும் ஆணைக்குழுவின் முன் ஆஜராகவில்லை.

''எனக்கு அழைப்பாணை எதுவும் கிடைக்கவில்லை. ஏனெனில் நான் தற்போது வேறு வீட்டிற்கு இடம் பெயர்ந்துவிட்டேன்.'' பத்திரிகைகள் மூலமாகவே எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதைத் தெரிந்துகொண்டேன்.'' இவ்வாறு ஆணைக் குழுவின் பதிவாளருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட அமீர் சொஹைல் கூறியுள்ளார்.

இதையடுத்து டிசம்பர் 27ஆம் திகதி அமிர் சொஹைலையும் பஸித் அலியையும் ஆஜராகுமாறு ஆணைக்குழு பணித்துள்ளது.

# கால்பந்தாட்ட வீரருக்கு சமூகசேவைத் தண்டனை

இங்கிலாந்தின் லீட்ஸ் யுனைட்டட் கால்பந்தாட்ட அணி வீரர் ஜொனதன் வூட்கேட் 100 மணித்தியாலங்கள் சமூக சேவை செய்ய வேண்டுமென நீதிமன்றம் தண்டனை விதித்தது.

ஆசிய மாணவர் ஒருவரை தாக்கியமை தொடர்பாகவே இத்தண்டனை அளிக்கப்பட்டுள்ளது.

19 வயதான சர்பால் நஜீப் எனும் மாணவர் லீட்ஸ் நகர வீதியில் வைத்து மோசமாகத் தாக்கப்பட்டார். கடந்த வருடம் ஜனவரி மாதம் இச்சம்பவம் நடந்தது.

இதுதொடர்பாக ஜொனதன் வூட்கேட், சக வீரர் லீ போயர் மற்றும் அவரது நண்பர்கள் இருவர் மீது வழக்குத் தொடரப்பட்டது.

இதில் லீ போயர் விடுவிக்கப்பட்டார். ஜொனதன் குற்றவாளியாகக் காணப்பட்டார். அவரது நண்பரான போல் கிளிபர்ட்டுக்கு 6 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. ஜொனதனின் மற்றொரு நண்பரான நீல் கவ்வரியும் 100 மணித்தியாலங்கள் சமூக சேவை செய்யவேண்டுமெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

# ரொனால்டோவும் பங்குச் சந்தையும்

பிரபல கால்பந்தாட்ட வீரர் ரொனால்டோ காயமடைந்தமை காரணமாக இத்தாலியின் இண்டர் மிலான் கழகம் பங்குச் சந்தையில் நுழையும் திட்டத்திற்குத் தடை ஏற்பட்டது.


ரொனால்டோ

இவ்வாறு இண்டர்மிலான் கழகத்தின் தலைவர் மஸிமோ மொராட்டி கடந்தவாரம் கூறினார்.

''இத்தாலியின் லாஸியோ, ரோமா, ஜுவான்டஸ் ஆகிய கழகங்கள் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ளன. இதுபோன்று இண்டர் மிலான் கழகமும் பங்குச் சந்தையில் நுழையுமா?'' இவ்வாறு அக்கழகத்தின் தலைவரிடம் வினவப்பட்டது.

''2 வருடங்களுக்கு முன்னர் அவ்வாறான திட்டம் இருந்தது. ஆனால் ரொனால்டோ காயமடைந்தமையால் எமது திட்டத்தைக் கைவிட நேர்ந்தது.'' இவ்வாறு இண்டர்மிலான் தலைவர் மொராட்டி அதற்கு பதிலளித்தார்.

பிரேஸில் நாட்டவரான ரொனால்டோ இத்தாலியின் இண்டர்மிலான் கழகத்தின் சார்பிலும் விளையாடுகிறார்.

ஸ்பெய்னின் பார்சிலோனா கழகத்திலேயே முன்பு ரொனால்டோ விளையாடினார். 1997 ஆம் ஆண்டில் பெருந்தொகை பணம் கொடுத்து அவரை இண்டர்மிலான் கழகம் தன்வசப்படுத்தியது.

ஆனால் காயம் காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக ரொனால்டோ போட்டிகளில் பங்குபற்றவில்லை.

இருவருடங்களின்பின் கடந்த வாரம்தான் முதற்தடவையாக போட்டியொன்றில் முழுமையாக பங்குபற்றினார் அவர். சீவோ கழகத்திற்கெதிரான இப்போட்டியில் இண்டர் மிலான் கழகம் 2-1 விகிதத்தில் தோல்வியுற்றது.

# பெயருக்குப் படையினர் பகுதி ஆனால் வாழ்க்கையோ கனதி

## மருதமடு கிராம மக்களுக்கு விடிவு கிடையாதா?

வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரை பொதுவாக இரு பகுதிகள் இருக்கின்றன. ஒன்று இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி. மற்றது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மீது அரச பொருளாதாரத் தடை, எரிபொருள் தடை, போக்குவரத்துத் தடை என்று ஏகப்பட்ட கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறது.

ஆனால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அவையெல்லாம் இல்லைதான். என்றாலும் இதற்கு யாழ்ப்பாணமும் —மன்னாரும் விதிவிலக்காகவே இருக்கின்றன.

இருந்து கொண்டேதான் இருக்கின்றன. இதில் யாழ்ப்பாணத்தை பொறுத்தமட்டில் நேரடியான தரைவழிப் பாதை கிடையாது. எனவே மட்டுப்படுத்தப்பட்ட ஆகாய, கடல் பயணங்களின் காரணமாக இந்த தடைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்படுவதை ஓரளவு ஏற்றுக் கொள்ளலாம்.

ஆனால் தென்பகுதியுடன் இணைந்த போக்குவரத்து வசதிகளைக் கொண்ட, முற்று முழுதாக படையினரால் குவிக்கப்பட்ட நிலையில் உள்ள மன்னாரில் இதே விதமாக புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்குரிய நடைமுறைகளை கடைப்பிடிப்பதுதான்



மண் குடிசை வீட்டில் இப்படியும் ஒரு வாழ்க்கை



பாடசாலை செல்ல ஆயத்தம்

இந்த இரு மாவட்டங்களும் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியாக இருந்தாலும் — அங்கு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கான சில தடைகள்

பலருக்கும் பெரும் வெறுப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அவர்கள் அதனை வெளியே சொல்ல முடியாது மனதிற்குள் வைத்து வெந்து, வெதும்பி வாழ்வது தான் வேதனை தருகிறது.

இங்கு உணவுப் பொருட்களில் இருந்து விவசாயப் பொருட்கள்,விவசாய உள்ளீட்டுப் பொருட்கள், எரிபொருள்கள், அத்தியாவசியத் தேவைப் பொருட்கள், கட்டடப் பொருட்கள் என்பனவற்றுக்கு சட்டத்தில் இல்லாத கட்டுப்பாடுகள் இருந்துவருகின்றன. இதனால் மிகவும் பாதிக்கப்பட்டுப்போயுள்ள கிராமங்களில் ஒன்றுதான் ''மருதமடு''.

இந்த மருதமடு கிராமம் மன்னார் முருங்கன் பகுதியில் இருந்து சிலாவத்துறை வீதியில் 5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இங்கே சுமார் 75 குடும்பங்கள் அன்றாடம் தமது சீவியத்தையே நடத்த முடியாமல் அல்லல் பட்டு வருகின்றன.

இந்தக் கிராமம் இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உள்ள போதிலும் இந்தக் கிராம மக்கள் பல கட்டுப்பாடுகளுக் குள்ளேயே வாழ்ந்து வருகின்றனர்.

இந்த கிராம மக்களின் பிரதான தொழில் விவசாயம். ஆண்டாண்டு காலமாக விவசாயத்தையே நம்பி வாழும் இந்த மக்கள் தமது தொழிலை செய்ய பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.




படை நடவடிக்கையால் உடைந்துபோன வீடு திருத்தப்படாத நிலையில்

இதற்கு பிரதான காரணம் விவசாய உள்ளீட்டு பொருட்கள், எரிபொருள் என்பனவற்றை இந்த கிராமங்களுக்கு கொண்டு செல்வதற்கு படையினர் அனுமதிப்பது இல்லை.

ஒரு விவசாயி உரம் கொண்டு செல்வதற்கு தனது கிராமச் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும், அந்தக் கடிதம் கிராம சேவையாளரால் சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் பின்னர் பொலிஸ் பொறுப்பதிகாரியும் உறுதிப்படுத்த வேண்டும். இத்தனை கெடுபிடிகளுக்குப் பின்பும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உரம் வழங்கப்படுவது மிகவும் கவலைக்குரிய விடயம்.

இந்த நிலை மருதமடு கிராமத்துக்கு மட்டுமல்ல மன்னார் முழுவதுக்குமானது என்பதே உண்மை நிலை. இன்றும் இந்தப் பகுதியினை அண்டிய கிராமங்களில் ஏதாவது சம்பவங்கள் நடை பெற்றால் போதும், உடனடியாக படையினர் வந்து என்ன, ஏது? என்று கேட்காமல் கண்மூடித்தனமாக அப்பகுதி இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்துவது வழமையாகிவிட்டது. இதன் காரணமாக தான் படையினருக்கு எதிராக இளைஞர்கள் திரும்ப வேண்டிய நிலை ஏற்படுகிறது என்பதனை இராணுவ தரப்பு புரிந்து கொள்ள மறுக்கின்றது. இளைஞர்களைத் தாக்குவதுடன் படையினர். பொதுமக்களின் உடைமைகள், கடைகள் என்பனவற்றினையும் சேதப்படுத்துகின்றனர் என்று இப்பகுதி பொதுமக்கள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

இராணுவ நடவடிக்கைகளின் போது இந்த கிராமத்தில் சேதம் அடைந்த பல வீடுகள் இன்னும் திருத்தப்படவில்லை. இதற்கு பிரதான காரணம் திருத்துவதற்கு வேண்டிய சீமெந்து, கல் மற்றும் தேவையான பொருட்களை கொண்டுவர படையினரால், அனுமதி மறுக்கப்படுகின்றன. பல ஆயிரம் லஞ்சம் கொடுத்தே அனுமதி பெற வேண்டியுள்ளது. அவற்றைக் கொண்டு வருவது என்றால் தலைபோகும் காரியமாக இருக்கிறது.



வீட்டு வாசலில் அமர்ந்து தனக்குத் தானே பேன் பார்க்கும் சிறுமி

வவுனியாவில் இருந்து கல்லை லொறிகளில் கொண்டு வந்து அதனை முருங்கன் சோதனைச் சாவடியில் கொட்ட வேண்டும். பின்னர் ஏற்றிச் செல்ல வேண்டும். இவ்வாறான சோதனை நடவடிக்கையால் மக்களுக்கு மேலதிக செலவு ஏற்படுகிறது.

### வியாபாரம் இல்லை

அடுத்து மிகவும் கஷ்டப்பட்டு செய்யும் விவசாயப் பொருட்களை விற்பனை செய்ய முடியாமல் அப்பகுதி விவசாயிகள் திண்டாடுகின்றனர். உற்பத்திப் பொருட்களை கிராமத்தை விட்டு வெளியில் கொண்டு வர பல கெடுபிடிகள் உள்ளன. இதனை விட இந்த கிராமத்தினை சேர்ந்த கிராமவாசிகள் கடலுக்கு சென்று மீன் பிடிக்கின்றனர்.

அவ்வாறு பிடிக்கப்படும் மீனை விற்பனை செய்யமுடியாத நிலை இன்னும் நீடிக்கிறது.

அவர்கள் வயிற்றுப் பிழைப்புக்கு வேறு வழியில்லாத நிலையில் மிகவும் குறைந்த விலையில் மீனை விற்று விடுகின்றனர். எனவே பல சிரமங்களின் மத்தியில் தமது உயிரைப் பணயம் வைத்து செய்யும் இந்த தொழிலின் முழுப்பயனையும் பெற முடியாதவர்களாக அவர்கள் உள்ளனர்.

இதேசமயம் காட்டு விலங்குகளை வேட்டையாடும் சிலர் இறைச்சியைச் சந்தைப் படுத்த முடியாமல் மிகவும் குறைந்த விலைக்கே விற்பனை செய்ய வேண்டி இருப்பதுடன் படையினரிடம் பிடிபட்டால் முழு இறைச்சியையும் இழக்கும் நிலையும் இருந்து வருகிறது.

### எரிபொருள் இல்லை

எரிபொருளை முருங்கனில் இருந்து எடுத்துச் செல்ல இராணுவ—பொலிஸில் அனுமதி பெற வேண்டும் . அவ்வாறு கொண்டு செல்வது என்றால் வாகனத்தில் நிரப்பிக் கொண்டு செல்ல வேண்டுமே தவிர கான்களில் கொண்டு செல்ல முடியாது. அதற்கும் அனுமதி பத்திரம் பெற்றுத்தான் எரிபொருளை பெற முடியும். அரை லீட்டர் பெற்றோல், ஒரு லீட்டர் மண்ணெண்ணெய் என்பனவற்றையே கொண்டு செல்ல முடியும் என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க ஒரு குடும்பத்திற்கு மாதம் ஒன்றுக்கு 3 பற்றறி மட்டுமே எடுத்துசெல்ல அனுமதி வழங்கப் படுகின்றது. இந்த பற்றறியையும் அனுமதி பெற்றுத்தான் கொண்டு செல்ல முடியும்.

### மாணவர்களின் நிலை மோசம்

இன்னும் இந்தப் பகுதியில் உள்ள மாணவர்களின் நிலை மிகவும் கவலைக்குரியது. இங்குள்ள மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கையில் உள்ளார்ந்தமாக ஈடுபடுவது இல்லை. இதற்கு பிரதான காரணம் போதிய அளவு பொருளாதார வசதி இல்லாமையே.

இவ்வாறு இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கிறோம் என்ற பெயருடன்— இந்தப் பகுதி மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதியில் உள்ள மக்கள் அனுபவிக்கும் அவ்வளவு துன்பங்களையும் அனுபவித்துக் கொண்டே இருக்கிறார்கள்.

— மகாமுனி

பலர் அறிந்த உண்மையை நீங்கள் இன்னும் அறியவில்லையா?

சித்தர்களும் ரிஷிகளும் போற்றும் இரத்தினங்கள் உங்கள் வாழ்வில் சுபீட்சமாய் வாழ வழி செய்யும். பல வருடங்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உன்னத சேவை நம்பிக்கை பாராட்டும் பெற்று திகழ்கின்றோம்.

Accredited by National Gem & Jewellery Authority

ARUL Jewellers 3 அருள் ஜுவலர்ஸ்

3, Sea Street, Colombo 11. T.P. 436331

Nathan: 436331 or Siva:077 600476

இப்பத்திரிகை கொழும்பு —06, வெள்ளவத்தை பெரக்கும்பா பிளேஸ் 1/5ஆம் இலக்கத்தில் உள்ள வாண்ட் மார்க் எண்டர்பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2001 டிசம்பர் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.